

# எல்லோரும் தலைவர்கள்

தெனகம சிரிவர்தன

தமிழில் - மொஹமட் ராஜூக்

தமிழ் மொழி மூல
இல - 68/1,

# எல்லோரும் தலைவர்கள்

(ஆசிரியர் சேவை அனுபவக் கதைகள் இருபது)

எழுத்துப் பணியினை போற்றும்
எழுத்தாளர் பாராட்டு விழா
முன்னிட்டு வெளியிடப்பட்டது.

## மொழி பெயர்ப்பாளரின் இதர மொழிபெயர்ப்பு நூல்கள்

1. காட தொஸ் பவரமுத? – 1994
(யாரோடு நோவோம்?)(அபேவங்ஸ தேவப்பிரியவுடன்)
2. நும்பய் மகே புதா உதும் - 2004
(சான்றோன் எனக்கேட்ட தாய்)
(அபேவங்ஸ தேவப்பிரியவுடன்)
3. கவிதாகே மல்வத்த – 2006
(கவிதாவின் பூந்தோட்டம்)
(அபேவங்ஸ தேவப்பிரியவுடன்)
4. நகரயட ஆ வலஸ்ஹாமி – 2006
நகரத்துக்கு வந்த கரடி, -
(அபேவங்ஸ தேவப்பிரியவுடன்)
5. நொபெனென பெதி
(தெரியாத பக்கங்கள்) (2006 ம் ஆண்டுக்கான அரச இலக்கிய விருது)
6. உதய புரய
(உதய புரம்) அட்டாய பியதஸ்ஸ தேரருடன்)
7. உத்தமாவி – 2008
(மனைவி மகாத்மியம்)
8. கெலாவ லஸ்ஸனய் - 2009 (அழகான வனம்)

# எல்லோரும் தலைவர்கள்

(ஆசிரியர் சேவை அனுபவக் கதைகள் - இருபது)

சி. ரவீந்திரன்
தமிழ் மொழி மூல விஷயப்பதிவாளர்
இல - 68/1, சென்மேரிஸ் ஒழுங்கை
கொழும்பு - 15

சிங்கள மூலம் :

**தெனகம சிறிவர்தன**

தமிழாக்கம் :

**மொஹமட் ராசூக்**

எஸ். கொடகே அன்ட் சகோரர்கள் பிரயிவட் லிமிடெட்

*First Print : 2012*

Ellorum Thalaiwarkal.
Denagama Siriwardhana

*Translated By :*
**Mohamed Rasooque.**

ISBN 978-955-30-3509-7

*Type Setting By :*
**Rihana Mudassir**

*Cover Designed by :*
**Memonkavi**

*Published By :-*
**S.Godage & Brothers (Pvt) Ltd**
675, P. D. S.
Kularathna Mawathe
Colombo – 10

*Printed By :*
**Chathura Printers**
69, Kumaradasa Place,
Wellampitiya

14683/2547/250

*முதற்பதிப்பு : 2012*

**எல்லோரும் தலைவர்கள்**
தெனகம சிறிவர்தன

*தமிழில் :*
**மொஹமட் ராசூக்**

ISBN 978-955-30-3509-7

*கணினிப் பதிவு :*
**றிஹானா முதஸ்ஸிர்**

*அட்டை வடிவமைப்பு :*
**மேமன்கவி**

*வெளியீடு :*
எஸ். கொடகே சகோதரர்கள்
பிரைவட் லிமிடட்
675, பீ.டி.எஸ். குலரத்ன மாவத
கொழும்பு – 10

*அச்சுப் பதிவு :*
***சதுர அச்சகம்.***
69, குமாரதாஸ இடம்
வெல்லம்பிடிய,

14683/2547/250

## சமர்ப்பணம்

எனது

அன்புத் தாயார்

நிஸாயா உம்மா

அவர்களுக்கு.......

# முன்னுரை

தெனகம சிறிவர்தன சிங்கள இலக்கியவானில் பிரபலமாகப் பேசப்படும் ஒருவர். நூற்றுக்கு மேற்பட்ட பல்வகைமையான நூல்களை எழுதியுள்ளார். பாடசாலை ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றியுள்ளார். பத்திரிகை நிறுவனங்களிலும் கடமையாற்றியுள்ளார்.

சிங்கள – தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் தனது நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றாக சில எழுத்தாளர்களை இவ்வாண்டு பாராட்டி கௌரவிக்கத் தீர்மானித்துள்ளது. இதனை முன்னிட்டு அவர்களது ஒவ்வொரு நூலை மொழி பெயர்த்து வெளியிடவும் கொடகே நிறுவனம் இணங்கியுள்ளது. இதன்படி தெனகம சிறிவர்தனவின் நூலை மொழிபெயர்க்கும் பணியை என்மீது நம்பிக்கை கொண்டு ஒப்படைத்தபோது, அதை நான் எனக்குக் கிடைத்ததொரு பேறாகக் கருதினேன்.

அவரது சிறுகதை, நாவல்கள் என்று பல நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இதனை வித்தியாசமாகச் செய்ய வேண்டுமென்று கருதியபோது, அவரது ஆசிரியர் வாழ்வின் அனுபவக் கதைகளான ரது கெனஸ் மல; (சிவப்பு கெனஸ் மலர்) என் கண்களில் பட்டது.

ஒவ்வொன்றும் உண்மை அனுபவம். அதே நேரத்தில் கட்டுக்கோப்பான சிறு கதை. முடிந்தளவு அவரது கருத்துக்களை வெளிக்கொணர முயற்சித்ததோடு, தாய்த் தமிழின் தனித்துவத்தையும் பேணியுள்ளேன். அவரது சம்மதத்தோடு பொருத்தம் கருதி எல்லோரும் தலைவர்கள் என்ற தலைப்பைத் தெரிவு செய்தேன்.

இந்நூலைப் படித்துக் கொண்டு செல்லும்போது வருடா வருடம் ஆசிரியர் சேவையிலிருந்து எமது சகோதர சகோதரிகள் எவ்வளவோ அனுபவங்களை எடுத்துக் கொண்டுதானே வெளியேறுகிறார்கள். அதில் அவசியமானதை இவ்வாறு பகிர்ந்து கொண்டால் அடுத்த ஆசிரியர் பரம்பரைக்கு, மாணவர்களுக்கு, எவ்வளவோ பயன் கிட்ட வாய்ப்புண்டு.

இந்நூலைப் படிக்கின்றபோது ஒரு சிலராவது அத்தகைய முயற்சியில் இறங்குவார்களாயின் அதுவே எனக்குப் பெறுவெற்றியாக அமையும்.

சிங்கள – தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் , கொடகே, நிறுவனம், சம்பந்தப்பட்ட நண்பர்கள் அனைவருக்கும்

நன்றி.

குருனாகொட<br>கொடியாகும்புர

மொஹமட் ராசூக்<br>2012-04-25

## உள்ளடக்கம்


01. சண்டியர் முன்னே சென்ற தலைமை ஆசிரியர் பரனமான

02. விளையாடாத பிள்ளைகள்

03 ஆசிரியரின் பாதங்களை நனைத்த மாணவியின் கண்ணீர்.

04. எல்லோரும் தலைவர்கள்.

05. பாண்காரனின் ஆசிரியர்

06. அதிபருக்கு வன்னிக்கு இடமாற்றம்.

07. செவ்வரத்ததம் பூ

08. அரிசி விற்கும் ஆசிரியர்.

09. ஒருமணி நேரம் மேலதிக வேலை செய்த ஆசிரியர்

10. மாணவனின் நிலக்கடலைப் பொதிகள்

11. இரண்டில் ராகு

12. பாதணி திருத்துபவனின் பிள்ளை

13. பனிஸ் மதில்

14. மணியொலியை மதிக்காத மாணவன்

15. துணிச்சல் மிகுந்த வேலை நிறுத்தக்காரன்

16. நீதிபதியின் மகன்

17. கடை வாகம்

18. பெருமகிழ்ச்சியும் பெருமையும்

19. உதவிப் பொலிஸ் அதிகாரி

20. ஆசிரியர் தினத்தில் வந்த மாணவர்கள்.

# சண்டியர் முன்னே சென்ற தலைமை ஆசிரியர் பரனமான

தலைமை ஆசிரியர் பதவியைப் பொறுப்பெடுத்த ஜே.பரனமான அவர்கள் பாடசாலை வகுப்பறைகளைப் பார்வையிடச் சென்றார். உதவி ஆசிரியர் ஒருவர் அவரோடு
சென்றார்.

ஒவ்வொரு வகுப்பிலும் மேலுடல் திறந்த நிலையிலேயே கடைசிவரிசை மாணவர்கள் காணப்பட்டனர்.

"ஏன் இந்தப் பிள்ளைகள் மேலுடல் மறையத்தக்கதாக எதுவும் அணியாதிருக்காங்க?"

உதவி ஆசிரியரின் பதில் இவ்வாறு அமைந்தது.

" .இந்தப் பகுதியில் ஒரு சாதியச் சேர்ந்தவங்க மேலுடல மறைப்பது தடுக்கப்பட்டிருக்கு. அப்படி உடுத்தாலும் உயர்குலத்தவர்களின் ஆக்கள் அதனை கிழித்து விடுவாங்க.... அடிப்பாங்க...அந்தக் குலத்தவர்கள் உடை அணியாமலிருப்பது விருப்பத்தோடுதான்............"

"விருப்பத்தோடுதான் .............?"

"ஆம் அப்படி அணியாமலிருப்பது பற்றி எந்த எதிர்ப்பும் அவர்களிடமில்லை "

"இந்தப் பாடசாலையில் எல்லாப் பிள்ளைகளுக்கும்

ஒரேவிதமான கவனிப்பு இருக்கணும். சிலர் இப்படி அணியாமலிருக்கும்போது அவர்கள் அந்தக் குலத்தவர்களென்று தெளிவாகத் தெரிந்து விடும். அந்தப் பிள்ளைகளின் மனதில் குறைவான எண்ணம் ஏற்படும். இது ஒரு நல்ல விஷயமல்ல ........இந்தப் பிள்ளைகளுக்கும் மேற்சட்டை அணிவிக்க வேண்டும்."

"இதற்கு முன்பிருந்த தலைமை ஆசிரியர்கள் அப்படி நினைக்கவில்லை. இந்தக் கருத்து வெளியே தெரிந்தால் உங்களுக்கும் அதிககாலம் இருக்கக் கிடைக்காது. அந்தப் பிள்ளைகளின் அம்மா அப்பாமாருக்கே தேவையில்லயென்றா எங்களுக்கென்னத்துக்கு? இல்லாத தொல்லைய நாங்க ஏன் எடுத்துக் கொள்ளணும்?

பரணமான அதிபர் உதவிஆசிரியரை அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தார். சற்று நேரத்தின் பின்னர் அவர் இவ்வாறு சொன்னார்.

"நடப்பது நடக்கட்டுமென்று பேசாமல் எங்க பாட்டில இருப்போமென்றுதான நீங்க சொல்றீங்க. நல்லது ஏதும் நடக்கிறதென்றா அப்படி இருப்பது பரவாயில்லை. மோசமானது நடப்பதாக இருந்தால் நாங்க அதனை மாற்றணும். மோசமான விஷயங்களை எதிர்க்கவேணும். ஆடை அணியும் உரிமை எல்லாருக்கும் இருக்கு. அந்தப் பொது உரிமைய மிதித்துக்கொண்டிருப்பவங்கள நாங்க எதிர்க்கணும். என்னுடைய பாடசாலை மாணவர்கள் அரை நிர்வாணத்தோடு இருப்பதை நான் விரும்பவில்லை."

உதவி ஆசிரியர் சிரமத்தோடு சிரித்துவிட்டுக் கீழே பார்த்துக்கொண்டார்.

அடுத்தநாள் தலைமை ஆசிரியர் அரைநிர்வாணப் பிள்ளைகளை அழைத்துக் கலந்துரையாடினார்.

"நாங்கள் சேட் அணிய விருப்பம். வீட்டுக்குள்ள நாங்க அணியிறம்" ஒரு சிறுவன் கூறினான்.

"நாங்களும் விருப்பம்" ஏனைய பிள்ளைகளும் கூறினர்.

"அடுத்த திங்கட்கிழமையிலிருந்து பாடசாலைக்கு வரும்போது சேட் உடுத்துக்கொண்டு வரவேணும். வீட்டுக்குப்போய் அம்மா, அப்பாவோட சொல்லி சேட் தைத்துக்கொள்ளணும்"

"எங்களிடம் சேட் இருக்கு"

"அப்படியென்றால் கஷ்டமே இல்லை. சரி இனியாரும் சாரன் மாத்திரம் அணிந்து கொண்டு வரக் கூடாது.

## இது 1947ம் ஆண்டு

ஜே.பரனமான அவர்கள் ஹக்மனை மெதோதிஸ்ஸ வித்தியாலய தலைமை ஆசிரியர் பதவியைப் பொறுப்படுத்த அன்றே அப்பிராந்திய உயர் பிரபுத்துவ இராசகாரிய அடையாளங்களை நன்கு கண்டுகொண்டார்.

அவர் ஒரு கமியூனிஸ்ட் கட்சி அங்கத்தவர். கம்யூனிஸ்ட் தலைவர் எஸ்.ஏ. விக்ரமசிங்ஹவின் ஆதரவாளர்.

"பிறப்பினால் எல்லா மனிதரும் சமம். பிறப்பின்பின் குலம், வர்க்கம், சாதியென்று பிரிந்துவிடுகின்றார்கள். இது சமூக முன்னேற்றத்திற்குத் தடை. ஆசிரியர் இந்த அவலத்தை இல்லாதொழிக்க தூரதிருஷ்டியோடு செயற்பட வேண்டும்."

பிரேமலால் குமாரஸிரி, டீ. எ.ஃப். வாகிஷ்ட போன்ற கம்யூனிசிய வாதிகள் கூடும் இடங்களில் வெளிப்படும் இத்தகைய கருத்துக்கள் பரமான அவர்களுக்கு ஞாபகம் வந்தது.

"வெறுமையான மேலுடலுடன் பாடசாலைக்கு வரும் பிள்ளைகள் வீட்டில் கதவுகளை மூடிக்கொண்டு கண்ணாடியில் தமது உருவத்தைப் பார்ப்பார்கள். இந்த அப்பாவிகளுக்கு ஆடை அணியும் உரிமையை நான் பெற்றுக் கொடுப்பேன். பிரபுக்களின் சண்டியர்களுக்கு முகம்கொடுப்பேன்." பரனமான இவ்வாறு யோசித்தார்.

ஞாயிறன்று மாலை ஆசிரியர் விடுதிக்கு பெருந்தொகையானோர் வருகை தந்தனர். அவர்களும் மேற்சட்டை இல்லாதவர்கள்தான்.

மிக உயர்ந்த மரியாதையோடு விழித்தபடி ஒரு பெற்றார் ஆசிரியர் விடுதிக்கேறினார்.

"அப்படியெல்லாம் சொல்லாதீங்க. நானும் உங்களைப் போன்றதொரு மனிதன். அவசியம் என்றால் ஐயா, தலைமை ஆசிரியர் போன்றவார்த்தைகளை பாவித்தால் பரவாயில்லை . சரி என்ன இவ்வளவு ஆக்கள்?"

" .............நாங்கள்"

"திரும்பவும் அப்படிச் சொல்றீங்க. அந்தச் சொல்லை எவரும் பாவிக்கவேண்டாம்."

"நல்லது ........நாங்கள் வந்தது ஏனென்றால் .........ஐயா சொல்லிவிட்டுருந்தீங்க ...... சேட் அணிந்து கொண்டு பாடசாலைக்கு வரும்படி ......"

"சரி நீங்கள் அந்த சேட் அணியாத பிள்ளைகளின் பெற்றார். பயப்படவேண்டாம். நாளைக்கு பிள்ளைகளுக்குக் சேட், சாரன் எல்லாம் அணிவித்து அனுப்புங்க. சாரனோடு மாத்திரம் பாடசாலைக்கு வருவது தடை....."

"ஐயா பெரியவரே! அப்படிச் செய்தால் எங்களுக்கு ஊரில் இருக்க முடியாது போய்விடும். "

"சொன்னேன் அல்லவா? நான் அதை பார்த்துக்கொள்றேன். நாளைக்கு பிள்ளைகளுக்கு சேட் அணிவித்து அனுப்புங்க. என்ன நடக்கிறது என்று பார்ப்போம்."

பெற்றார்கள் பயத்தோடும் நடுக்கத்துடனுமே அங்கிருந்து சென்றனர்.

அடுத்தநாள் காலையில் பாடசாலைக்குச் சென்ற பரனமான அவர்களுக்கு அங்கே திறந்த மேலுடலுடன் எந்தவொரு மாணவனையும் காணமுடியவில்லை அவரது மனம் மகிழ்ச்சயால் நிரம்பியது .

பாடசாலை நேரம் முடிவடைய அரைமணிநேரத்திற்கு முன்பு ஒரு தகப்பன் வருகைதந்து பரனமான அவர்களைச் சந்தித்தார்.

"அரசமரத்தடிச் சந்தியில் சவப்பெட்டிக் கடைக்குப் பக்கத்தில் ஹாமுஜயாவின் ஆக்கள் கையில் தடியளோடு

காத்திருக்காங்க......... சேட் அணிந்து வந்த எங்கட பிள்ளைகளுக்கு அடிக்க. நாங்க என்னதான் செய்வது?''

தலைமை ஆசிரியர் பரனமான அவர்கள் அசையவில்லை.

''அதை நான் பார்த்துக் கொள்ளுவன். நீங்க வீட்டுக்கு போங்க''

பாடசாலை விட்டபோது சேட் அணிந்த பிள்ளைகளை சற்றே நிற்கச் செங்து அந்தப் பிள்ளைகளோடு வீதிக்கிறங்கினார் பரமான அவர்கள்.

அவர் மிதிவண்டியில் சென்றார். பிள்ளைகள் அவர் பின்னால் சென்றனர்.

சவப்பெட்டிக் கடையருகில் தடித்த தடிகளுடன் நான்கு பேர் நின்றனர்.

பரனமான அவர்கள் சைக்கிளிலிருந்து இறங்கினார். அந்த நால்வரிலும் ஒருவனை அழைத்து

''எல்பட் இங்க வா. ஏன் இன்று மகனைப் பாடசாலைக்கு அனுப்பவில்லை?'' என்று கேட்டார்.

“நீங்களெல்லாம் இந்தப் பிள்ளைகளின்ற உடுப்பை கழற்றவல்லவா வந்தீங்கள்? முடியுமென்றால் கழற்றுங்க பார்ப்போம். நீங்களெல்லாம் ஏன் “பெரியவர” சொல்றத செய்து கொண்டிருக்கிறீங்கள். நீங்கள் புத்தசமயத்தவர்கள் அல்லவா?''

எல்பட் உள்ளிட்ட குழுவினர் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

''எல்பட் சொல்லு பார்ப்பம். நீங்கள் புத்தபெருமானின் விரோதிகளா?''

''இல்லை நாங்கள் புத்த சமயத்தவர்கள்'' அப்படியென்றால் புத்த பெருமான் சொன்னதற்கு எதிராக ஏன் போகிறீர்கள்? அன்னார் குலபேதத்துக்கு எதிரானவர்.

நஜச்சா வஸலோ ஹோதி

நஜச்சா ஜோதி பிரா்மனோ

பிறப்பினால் எவரும் இழிந்தவர்களாவதில்லை
பிராமணர்களாவதுமில்லை.

கம்மனோ வஸாலோஹோதி

கம்மனோஹோதி பிராஹ்மனோ

இழிந்தவராவதும் பிராமணராவதும் தத்தமது செயல்களினால்தான் பார்த்தீர்களா? இதுதான் புத்தபெருமான் சொன்னவிதம். உங்களை இந்த அப்பாவிப் பிள்ளைகளுக்கு அடிக்கச்சொல்லி அனுப்பியவர்கள்தான் இழிந்தவர்கள். அவர்கள்தான் தாழ்ந்த சாதி விளங்குதா? திரும்பவும் இப்படி உங்கள் பெரியவர்களுக்கு பிரபுக்களுக்கும் தேவையான தைச் செய்ய முன்வர வேண்டாம்."

எல்பட் உள்ளிட்ட குழு மெல்ல நழுவிச் சென்றனர். சவப்பெட்டிக் கடையருகால் திரும்பிச் சென்ற பிள்ளைகள் சென்று மறையும் வரை பார்த்துக்கொண்டிருந்த பரனமான அவர்கள் அடுத்த பிள்ளைகளோடு அரசமரத்தடிக்குச் சந்திக்குச் சென்றார். அங்கும்கூட தடித்த தடிகளோடு பலர் காத்திருந்தனர்.

"இந்த உடுப்ப கழற்றுங்கடா....." ஒருவன் சத்தமிட்டபடி முன்னே பாய்ந்தான்.

ஒரு சிறுவன் சேட்டைக் கழற்றினான்.

" அந்த சேட்டை திரும்ப அணிந்து கொள்"

பரனமான அவர்கள் சத்தமிட்டபடி சண்டியர் முன் சென்றார்.

நிராயுதபாணியாக முன்னே வந்த அவர்களைக் கண்டு சண்டியர்கள் அசையாது அப்படியே நின்றனர்.

"ஏன் நீ அந்தப் பிள்ளைகளுக்கு உடுப்புக்கலையச் சொன்னாய் ? உன்னைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும் மாடின். உன்னுடைய பிள்ளையை உன்னைப்போல சிறைக்குப் போற ஒருவனாக மாற்றாதே. பெரியவர்களுக்காக சண்டித்தனம் செய்து இரண்டு வருடம் சிறைவாசம் செய்து

வந்த உனக்கு திரும்பவும் அங்குபோகத் தேவைபோலிருக்கு. நீ போனாலும் உன்னுடைய மகனை அங்கு அனுப்பாதே. அவன் படிப்பதில் கெட்டிக்காரன். தன்ற பிள்ளைகள் வெட்கப்படக்கூடிய விதமாக நடந்து கொள்ளாதே".

பரனமான அவர்கள் மாட்டினை நோக்கி இவ்வாறு சொன்னார். அவனது கண்கள் கண்ணீரால் நிரம்பியது. அடுத்த சண்டியர்களும் மெல்ல மெல்ல மறைந்தனர். மாடின் தனது கையிலிருந்த தடியை தூர எறிந்தான். பரனமான அவர்களை வணங்கினான்.

பிள்ளைகள் அரசமரத்தடிக்குச் சந்தியால் திரும்பி தனது கிராமத்திற்குச் சென்றனர்.

அந்தப் பிள்ளைகள் அன்று காலையில் சேட்டை சாரனுக்குள் மறைத்து வைத்துக் கொண்டே பாடசாலைக்கு வந்தனர். மாலையில் திரும்பவும் செல்ல நினைத்ததும் அவ்வாறுதான் என்பதை பரனமான அவர்களால் பின்னர் அறிய முடிந்தது.

அடுத்த சில நாட்களாக பரனமான அவர்கள் பாடசாலை விட்டதும் தனது சைக்களில் பிள்ளைகளோடு சென்றார். சண்டியர்களைப்பற்றி தகவல் எதுவும் கிட்டவில்லை.

ஹக்மனை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவான டீ.எ.ஃப்.வாகிஷ்ட அவர்கள் ஒரு நாள் பரனமான அவர்களிடம் இவ்வாறு கேட்டார்.

"ஆயுதபாணிகளான சண்டியர்களுக்கு மத்தியில் நிராயுதபாணியாக நீங்கள் எப்படிச் சென்றீர்கள்?"

பரனமான அவர்கள் சிரித்தார்.

"என்னால் அதற்கு பதில் சொல்வது கஷ்டம். அந்த நேரத்தில் என் மனதுக்கொரு தைரியம் வந்தது.

அப்பாவி தாழ்குலப் பிள்ளைகளுக்காக அல்லவா நான் இந்தப் பயணம் போகிறேன் என்று நினைத்தேன். உயர்ந்த நோக்கமொன்றிருந்த அந்த நேரத்தில் வம்பர்களால் செத்திருந்தாலும் ஒரு மகிழ்ச்சிதான்.

உயர் குலப் பிரபுக்கள் அவரைப் பாடசாலையிலிருந்து இடமாற்றம் செய்வதற்காக மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை. ஏனென்றால் முழுப் பிரதேசமும் அவருக்காகக் குரலெழுப்பியது. இருபது வருடங்களுக்கு மேலாக அவர் ஹக்மனை மெதோதிஸ்த வித்தியாலயத்தில் சேவையாற்றினார்.

## 02. விளையாடாத பிள்ளைகள்

சூரியன் வானத்திலிருந்து வெப்பம் சொரிந்தது. காய்ந்துபோன புற் பற்றைகளைக் கொண்ட மைதானத்தில் புழுதியைக் கிளப்பிக்கொண்டு காற்று செய்த சீற்றத்தினால் அதிபரதும் பிள்ளைகளதும் முகங்கள் புழுதியால் நிறைந்துபோனதுடன் அவர்களது உடைகளது நிறமும் மாறியது. பலதடவை காற்று சுழன்றடித்ததால் உடுப்புகளின் நிறமும் மாறியது.

பாடசாலையில் கற்பிக்கும் ஒரே ஆசிரியை இருமியபடி வேப்பமர நிழலுக்குச் சென்றார். அவளுக்கு புழுதி ஏற்றதல்ல. புழுதி குணமானதென்று சொல்லும் எவரையும் நான் கேள்விப்பட்டதில்லை.

குழந்தைப் பேற்றை நெருங்கிக்கொண்டிருக்கும் அவளை பாடசாலைக்குள் நிற்குமாறு அதிபர் சொன்னபோதும் அவள் திடலில் நிற்பதையே விரும்பினாள். அவளால் காற்றின் வீச்சைத்தான் பொறுக்க முடியவில்லை.

விளையாடுவதற்குள்ள இயல்பான ஆசை இப்பிள்ளைகளுக்குள் எப்படி இல்லாமல் போனதென அதிபர் தன்னிடமே கேள்வி எழுப்பிக்கொண்டார். விடையும் அவரிடமிருந்தே கிடைத்தது.

கடந்த போகத்தில் சேனைப் பயிர்ச்செய்கையை நாசமாக்கி, கோடை அரக்கன் செய்த விபரீதத்தால் இந்தப் பிள்ளைகளுக்கு வயிற்றுப்பசியே உரிமையாகியது.

காலையெழுந்து சமையலறையை எட்டிப்பார்த்து ஒரு மிடறு தண்ணீர் குடித்து விட்டு பாடசாலைக்கு வரும் பிள்ளைகளிடம் விநோத பாவத்திக்குப் பதிலாக மதியம் வழங்கும் பிஸ்கட் பற்றிய எதிர்பார்ப்பே மேலோங்கி நிற்கும்.

அவர்களை வகுப்புக்கு அனுப்பி பிஸ்கட் கொடுப்பதே பொருத்தமென்று நினைத்து திரும்பவும் மனதை தைரியப்படுத்திக்கொண்டார்.

கல்வி அதிகாரியின் உரை காரணமாகவே அந்த தைரியம் மனதுக்கு வந்தது.

"எல்லாப் பாடசாலைகளும் இந்த வட்டாரப்போட்டியில் பங்குபற்ற வேண்டும். எந்தப் பாடசாலை யாவது இந்த விளையாட்டுப்போட்டியில் கலந்து கொள்ளாவிட்டால் அது போட்டியை பகிஷ்கரித்ததாக வே கருதப்படும். எவ்வாறாயினும் வந்தே ஆக வேண்டும்."

இந்த வசனங்கள் அவரது மனதில் மட்டுமன்றி நாவிலும் பிரதிபலித்தது.

"பதினாறு வயதிலும் குறைந்த ஆண்பிள்ளைகள் உயரம் பாய்வதற்கு தயாராகுங்கோ. ஆ......சரி இப்போ இந்தப் பிள்ளைங்க நாலுபேரும் அந்த முருங்கா மரம் வரையில ஓடணும். அவ்விடத்திற்கு நூறு மீற்றர். சரி இனி வரிசையா வாங்க. இங்க நான் "ஒன்யுவமாக்" என்று சொல்லும் போது ரெடியாகி நேரே நிற்கணும். பிறகு "கெட்ஸெட்" சொல்லும்போது வளையனும் "கோ" சொன்னதும் ஓடனும்...."

அதிபரின் நா செயற்பட்டபோதும் மாணவர்களின் உடல் இயங்கவில்லை.

"கோ"

ஒரேயொரு மாணவன்தான் ஓடினான்.

"அடுத்தவங்களும் ...கோ...கோ"

இல்லை அவர்கள் ஓடவில்லை.

"என்ன?"

"எங்களால் ஓட முடியாது"

"ஏன்?"

"முடியாது.....எங்களால் முடியாது"

பிள்ளைகள் சொல்லாவிட்டாலும் அவர்களின் முகங்கள் மூலம் புரிந்து கொள்ளும் அறிவு அதிபருக்கிருந்தது.

"பிள்ளைகள் போங்க இப்பொழுது பிஸ்கட் கொடுக்கிறாங்க"

அதிபரின் கட்டளைப்படி பாடசாலைக்குச் சென்ற பிள்ளைகள் பிஸ்கட் சாப்பிட்டனர். தண்ணீர் குடித்த பின் மீண்டும் மைதானத்திற்கு அவர்களை அழைத்த அதிபர் அவர்களை கட்டாயப்படுத்தி ஓட்டம்,பாய்ச்சல்களில் ஈடுபடுத்திபோட்டியாளர் பட்டியலைத் தயார்படுத்தி அனுப்பினார். அதைத்தொடர்ந்து மூன்று நான்கு வாரங்களாக பாடசாலையில் கற்பித்தல் நடவடிக்கைகள் நடக்கவில்லை. அதன் பிறகும் கற்பித்தல் இருக்கவில்லை. பாடசாலையில் அதிபரும் ஒரு ஆசிரியையும் மாத்திரமல்லவா இருந்தார்கள்.

அவர்களால் இடாப்பு அடையாளம், பிஸ்கட் பகிர்தல், பாடசாலை விடும் போது வணக்கம் சொல்வது மாத்திரமே நடைபெற்றது. எட்டு வகுப்புக்களை சேர்ந்த இருநூற்று நாற்பது பிள்ளைகளுக்கு இரண்டு ஆசிரியர்கள் மூலம் கல்வி கற்பிக்கும் முறையினை விஷேட கல்வியாளர்களால் இதுவரை தேடிக்கண்டுபிடிக்க முடியவில்லை. இப்பாடசாலை மாணவர்கள் கல்விபெறாமலிருப்பது சம்பந்தமாக அரசாங்கத்திற்கோ, பிராந்திய மந்திரிக்கோ, மேற்சொன்ன அதிபர் ஆசிரியைக்கோ எதிராக எதுவுமே சொல்லாமல் நாங்கள் விஷேட கல்வியாளருக்கு இது தொடர்பாக திட்டித்தீர்த்து விட்டு அமைதியடைவோம்.

குறிப்பிட்ட தினத்தில் குறிப்பிட்ட நகரத்தில் விளையாட்டுப்போட்டி நடப்பதாகவும், அதில் கலந்து கொள்ளும்படியும் கல்வி அதிகாரி அறிவித்திருந்ததை உடன் அதிபர் அவர்கள் மாணவர்களுக்கு அறிவித்தார். நகரத்திற்கு செல்ல வேண்டும் என்ற போது மாணவர்களுக்கு மகிழ்ச்சியேற்பட்டது.

நான்கு மைல் மண்பாதையில் சென்ற பின்பு பஸ்பாதை வரும். பஸ்பாதையிலுள்ள பதினொரு மைலையும் சம்பள வாரம் தவிர்ந்த ஏனைய நாட்களில் நடந்தே செல்வது அதிபருக்கும் பழக்கம். அப்படி நடந்த பாதம் ஆயிரம் பெறுமதியானது என்பதனால் அல்ல. ஆயினும் சுமார் ஐம்பது பிள்ளைகளை கூட்டிக்கொண்டு நடந்து செல்வது கஷ்டமான விடயம். நடந்து சென்று களைப்படையும் பிள்ளைகள், போட்டிக்கு ஓடுவதற்குரிய சக்தியை பாதையில் விரயமாக்கி விடுவதால், நடந்து செல்வது பற்றி யோசிப்பதே அநீதியானது. பெற்றாரால் போக்குவரத்துச் செலவு தருவது கஷ்டம் என்று பிள்ளைகள் அதிபரிடம் கூறினர்.

அதிபருக்கு கல்விப் பணிப்பாளரின் ஞாபகம் வந்தது. விளையாட்டுப் போட்டிக்கு போகாவிட்டால் அது பகிஷ்கரிப்பதாகும். பகிஷ்கரிப்பவன் தேசத்துரோகி. அதிபருக்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அவமானமும் அபகீர்த்தியும் அதிகாரியின் கருத்தும் உடனே ஞாபகம் வந்தால் எப்படியாவது பணம் தருமாறு பெற்றாரிடம் சொன்னார். பெற்றோர் சேனைப் பயிர்ச்சைகையோடு போராடித் தோற்றுப்போயிருந்ததால்,பிள்ளைகளின் முன்னிலையில் அதிபரைத் திட்டினர். அடுத்த நாள் காலை பிள்ளைகள் இதனை அதிபரிடம் சொன்னபோது அவர் வசதிக் கட்டணக் கணக்குப் பார்க்கத் தொடங்கினார்.

பாடசாலையில் வசதிகள் இல்லாவிட்டாலும்கூட சில மாணவர்கள் வசதிக்கட்டணம் செலுத்தியிருந்தார்கள். அந்தப்பணத்தை பாவித்தாலும் போதுமானதாக இல்லை. பாடசாலை தோட்டத்து முருங்கை மரங்கள் காய்த்து நிறைந்திருந்தன. முருங்கைக்காய்களால் நிரம்பிய வண்டியொன்றை நகரத்திற்கு அனுப்பி, பிள்ளைகளுக்குத் தேவையான பஸ்கட்டணத்தை அதிபர் தேடிக்கொண்டார்.

விளையாட்டுப் போட்டி ஆரம்பிக்க சுமார் ஒருமணி நேரத்திற்குமுன்பு நகரை அடைந்து விட ஆசிரியர், மாணவர்களால் முடிந்தது.

“இப்பிள்ளைகளில் அதிகமானவர்களுக்கு காலைச் சாப்பாடில்லை” ஆசிரியை கூறினார்.

கேட்காததுபோலிருந்த அதிபர் “பிள்ளைகளின் முதுகில் இலக்கம் குத்துறாங்க” என்று அதற்கேற்பாடு செய்யுமாறு அந்த ஆசிரியைக்கு ஆணையிட்டார்.

அவள் பிள்ளைகளின் முதுகில் இலக்கம் குத்தும் போது அவர்கள் “முடியாது” என்றே கூறினர்.

காலை வேளையில் ஒரு போட்டியில் கூட வெற்றிபெற இந்தப்பாடசாலையால் முடியவில்லை .

சூரியன் உச்சியில் கொதித்துக் கொண்டிருந்தது.

பிள்ளைகள் வியர்வையால் குளித்தனர். விளையாட்டுத்திடலில் பெரிய ஆரவாரம் காணப்படவில்லை. பாடசாலையில் திறமையான விருது பெற்ற வீராங்கனையான அசோக நானூறு மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கு கொள்ளும் போது அதிபரைப்போன்றே ஆசிரியைக்கும் பெரிய உற்சாகமேற்பட்டது.

முதலாம் சுற்றில் அவள் இரண்டாவதாக ஓடினாள். இரண்டாம் சுற்றில் அவள் முதலாவதாக வந்தாள். மூன்றாம் சுற்றுக்கு வரும்போது அவள் முதலாவதாக வந்தாள். மூன்றாம் சுற்றுக்கு வரும் போது அவள் இரண்டாவது போட்டியாளரை விட ஐம்பது மீற்றர் முன்னிலையில் ஓடினாள். இனி அவளைப் பிற்படுத்த எவராலும் முடியாதென்று நடுவர் குழுவுக்கும் விளங்கிவிட்டது. அதிபர் மகிழ்ச்சியோடு கைதட்டினார். கர்ப்பிணி ஆசிரியை கண்களை விரித்து அவதானித்துக்கொண்டிருந்தாள். முன்றாம் சுற்றை முடித்துக்கொண்டு நாலாம் சுற்றில் பிரவேசிக்கும் போது அவள் அப்படியே விழுந்துவிட்டாள். அதிபர்உடனே அவள் பக்கமாக ஓடிச்சென்றார்.

“என்ன இந்த பாடசாலை ஆசிரியைகள் யாருமில்லயா? இந்தப் பிள்ளைய ஒருபக்கமாக எடுங்கோ”

நடுவர் குழுவைச் சேர்ந்த ஒருவர் சத்தமிட்டார். அதிபர் அவளை தூக்கத் தயாராகும் போது இன்னொருவர் அதைத் தடுக்க முனைந்தார். "ஆசிரியர் ஒருவரில்லையா இந்தப் பாடசாலையில்..."

"அதோ ஆசிரியை அவரால் இந்தப்பிள்ளையை தூக்க முடியாது...... அவர் இன்னொருவரை தூக்கிக் கொண்டிருக்கிறார்." என்றவாறு அதிபர் அந்தப்பிள்ளையை தூக்கி மைதானத்தின் மத்தியில் வைத்தார்.

"ஆசிரியர் குழுவில் வேறு ஆசிரியர்கள் இல்லையா?" அதிகாரி கேட்டார்.

"இருக்கு.... இது நான்" அதிபர் கூறினார். அந்த மாணவி விழிப்பு வந்ததும் வாந்தியெடுக்க ஆரம்பித்தாள். வாந்தி மஞ்சள் நிறத் திரவம் சார்ந்திருந்தது.

"இந்தப்பிள்ளைக்கு சாப்பாடு கொடுக்காமல் ஏன் கூட்டிவந்தீங்க? நேற்று இரவும் சாப்பிட்டதாக தெரியல்ல. மஞ்சள் வாந்தி அதனாலதான்."

சிலர் அதிபரைக் குற்றம் சுமத்திப்பேசினர். "நான் இந்தப் பிள்ளையின் தகப்பனல்ல. இருந்தாலும் என்னால் முடியுமாகவிருந்தால் எல்லாப் பிள்ளைகளுக்கும் சாப்பாடு கொடுப்பன்." இவ்வாறு சொல்ல நினைத்தும் எதுவுமே சொல்லாத அதிபர் மாலை விளையாட்டுக்கள் எதிலும் பங்குபற்றுவதில்லையென்று முடிவுசெய்தார்.

நடுவர் குழுவைச் சேர்ந்த ஒருவர் சத்தமிட்டார். அதிபர் அவளை தூக்கத் தயாராகும் போது இன்னொருவர் அதைத் தடுக்க முனைந்தார்.

"ஆசிரியை ஒருவரில்லையா இந்தப் பாடசாலையில்..."

"அதோ ஆசிரியை அவரால் இந்தப் பிள்ளையை தூக்க முடியாது. ... அவர் இன்னொருவரை தாக்கிக் கொண்டிருக்கிறார். "என்றவாறு அதிபர் அந்தப் பிளைளையைத் தூக்கி மைதானத்தின் மத்தியில் வைத்தார்.

“ஆசிரியர் குழுவில் வேறு ஆசிரியர்கள் இல்லையா? அதிகாரி கேட்டார்”.

“இருக்கு இது நான்” அதிபர் கூறினார். அந்த மாணவி விழிப்பு வந்ததும் வாந்தியெடுக்க ஆரம்பித்தாள். வாந்தி மஞ்சள் நிறத் திரவம் சார்ந்திருந்தது.

“இந்தப் பிள்ளைக்கு சாப்பாடு கொடுக்காமல் ஏன் கூட்டி வந்தீங்க? நேற்று இரவும் சாப்பிட்டதாகத் தெரியல்ல. மஞ்சள் வாந்தி அதனால்தான்”.

சிலர் அதிபரைக் குற்றம் சுமத்திப் பேசினர்.

“நான் இந்தப் பிள்ளையின் தகப்பனல்ல. இருந்தாலும் என்னால் முடியுமாகவிருந்தால் எல்லாப் பிள்ளைகளுக்கும் சாப்பாடு கொடுப்பன்” இவ்வாறு சொல்ல நினைத்தும் எதுவுமே சொல்லாத அதிபர் மாலை விளையாட்டுக்கள் எதிலும் பங்குபற்றுவதில்லையென்று முடிவு செய்தார்.

# 03. ஆசிரியரின் பாதங்களை நனைத்த மாணவியின் கண்ணீர்.

"ஏன் ஐயா விகாரையில்தங்கினீங்கள்? எங்கள் வீட்டில் தாராளமாக இடவசதியுண்டு. ஆசிரியர் ஒருவர் விகாரை அறையொன்றில் தங்கினாரென்றால் அது எங்களுக்கு வெட்கம்" பாசாலையில் ஆசிரியர் ஓய்வறையில் வைத்து ரத்னலதா ஆசிரியை சிரிநாதவிடம் கேட்டாள்.

"நான் இந்த ஊருக்குவந்த முதல் நாளிலேயே விகாரைக்குச் சென்றேன். என்னை விகாரையில் தங்குமாறு பெரிய பிக்கு சொன்னார். அதையிட்டு ஏன் வெட்கப்பட வேணும்? எனக்கு அங்கு மிகவும் அமைதியாகப் புத்தகம் வாசிக்கலாம். எழுத வாய்ப்புண்டு". சிரிநாத சொன்னார்.

"இந்த ஆசிரியர் குழுவில் அரைவாசிப்பேர் இருப்பது எங்கள் வீட்டில்தான். சாப்பாடெல்லாம் எப்படியென்று அவர்களிடம் கேட்டுப்பாருங்கள்."

"சாப்பாடெல்லாம் விகாரையிலும் நல்லது. நானும் இனி, பெரியபிக்குவிற்கு சாப்பாட்டுக்குத் தேவையான சாமான்கள் கொண்டு போவேன். அவர் வேண்டாமென்று சொல்வார்......"

சிரிநாத அந்த ஆசிரியையின் அன்புக்கு நன்றி கூறினார். மாணவர்கள் மீது அவள் காட்டும் அசிரத்தையைக் கண்ட பின்புதான், அவளது அன்பின் மீது அவருக்கு சந்தேகமேற் பட்டது. ரத்னலதா அவ்வூர் நிலச்சுவாந்தர் ஒருவரைத் திருமணம் செய்திருந்தாள. ஊரில் பெரியவீடு அவளுடையது தான். அவ்வூரின் அந்தக் குடும்பத்தினரிடம் தான் மோட்டார் வாகன மொன்றிலிருந்து .

அவள் ஆங்கிலம்தான் கற்பித்தாள். கரும்பலகையில் ஆங்கிலச் சொற்கள் சில எழுதிவிட்டு அமர்ந்துவிடுவாள். பிள்ளைகளோடு கதைக்கத் தொடங்குவாள். அவள் அவர்களிடம் வீட்டுச் செய்திகளையே கேட்பாள்.

"உனது அப்பா எங்களிடம் மோதிரமொன்று அடவு வைத்து ஒரு வருடத்துக்கு மேலாகிவிட்டது. இன்னுமேன் அதை எடுக்கல்ல. அப்பாவுக்கு ஞாபகமூட்டு". அவர் ஒரு பிள்ளையிடம் சொன்னாள். அந்தப் பிள்ளையின் முகம் சிவந்து போய் விட்டது.

"உனது அக்கா தேங்காய் பறிக்கும் எட்வினோடு கள்ளமாக ஓடிப்போனது உண்மையா? உனக்கு வெட்கமில்லையா பாடசாலைக்கு வர".

அந்தக் கதையின் பின்னர் அந்தப் பிள்ளை பாடசாலைக்கு வரவேயில்லை. முன்னொரு தடவை இளம் ஆங்கில ஆசிரியை ஒருவர் வந்தார். பிள்ளைகளில் பெரும்பாலானவர் களுக்கு ஆங்கில அரிச்சுவடி கூடத் தெரியவில்லை என்பதை அவள் அறிந்தாள். அவள் இலகுவான முறையில் அவர்களுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுக்க முயற்சித்தாள். மூன்று மாதம் அந்த இளம் ஆசிரியைக்கு அங்கு வேலைசெய்யக் கிடைக்கவில்லை. அவருக்கு வேறொரு பாடசாலைக்கு இடமாற்றம் வந்தது. அதையிட்டு நடவடிக்கை எடுக்க தலைமை ஆசிரியரும் ஏனைய ஆசிரியர்களும் பின்வாங்கினார். ஊரில் பலம்மிக்கவரான ரத்னாவலி ஆசிரியையின் கணவன் அரசியல் வாதிகளோடும் சம்பந்த முள்ளவர். கல்வி அதிகாரிகளோடும் நட்புவைத்திருந்தார். பாடசாலையைப் பரீட்சித்தபின் பகல் சாப்பாட்டுக்காக அவரது வீட்டுக்கே செல்வார். அவரது வாகனத்தின் பின்பகுதியில் அரிசி, தேங்காய், கொரக்காய், பலாக்கொட்டை இவற்றால் நிறையும் பன்றி இறைச்சியுடன் சாராயம் சாப்பாட்டின் பின்பு கிடைக்கும் தலைமை ஆசிரியரும் அவரோடு அந்த வீட்டுக்கும் செல்வார். பாடசாலை வேலைகள் மிகவும் திருப்தி ஆங்கிலம் கற்பித்தலும் திருப்தி. என்று பாடசாலைப் பதிவேட்டில் எழுதுவது கூட அந்த வீட்டில் தான்.

சிறிநாத ஐந்தாம் வகுப்பிற்கே கற்பித்தார். அவர் பட்டதாரி ஆசிரியர் அவருக்கு சாதாரண தரத்தில் இரண்டு பாடங்கள் கற்பிக்கக் கொடுப்பதற்கு தலைமை ஆசிரியர் முன்மொழிந்த போது ரத்னாவலி ஆசிரியை அதனை எதிர்த்தாள்.

"பட்டம் இருந்தாலும் சிறிநாதவுக்கு கற்பித்தல் அனுபவம் இல்லயே. அவள் சொன்னாள் சிறிநாத ஐந்தாம் வகுப்குஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலம் தவிர்ந்த சகல பாடங்களையும் கற்பித்தார்.

அவர் உரிய நேரத்திற்கு வகுப்புக்கு வந்தார். நேரத்திற்கு வேலை முடிந்தார். ஓய்வு நேரத்தில் ஆசிரியர் அறைக்குச் செல்லும் அவருக்கு ரத்னாவலி ஆசிரியையின் கதைகளுக்கு காதுகொடுக்க நேரும்.

ஓய்வு நேரம் முடிந்ததும் அவர் எழுந்துவிடுவார்

"ஏன் போறீங்க?" அவள் கேட்பாள்

"ஓய்வு முடிந்துவிட்டது"

என்றவாறு சிறிநாத வகுப்பறைக்குச் செல்வார். அவள் கதையை நிறுத்த மாட்டாள் . இன்னும் அரைமணி நேரமாவது அறையில் ஆசிரியர்கள் இருப்பார்கள்.

தலைமை ஆசிரியரும் அவனது கதையை சிரித்துச் சிரித்துக் கேட்டுக் கொண்டிருப்பார். சிறிநாத் புலமைப் பரிசில் மாணவர்களுக்காக மாலை வகுப்பொன்றை ஆரம்பித்தார். பிள்ளைகள் காலையில பாடசாலைக்கு வரும்போது பகலுணவாக ஏதாவது கொண்டுவருவார்கள். இத்தகவலை அறிந்த ரத்னாவலி ஆசிரியை ஒருநாள் சிறிநாதவை சந்தித்தாள்.

"என்ன இது, மாலை வகுப்பு ஆரம்பித்ததாக சொல்றாங்க? அவள் கேட்டான்.

"எனது வகுப்புப் பிள்ளைங்க புலமைப் பரிசில் பரீட்சை எழுதிறாங்க. பிள்ளைகளுக்கு அதற்கான அறிவு அரைவாசிகூட இல்லை. காலையில் மாத்திரம் கற்பித்து

அந்த அறிவைக் கொடுக்க முடியாது. அதனால் நான் தலைமை ஆசிரியரிடம் சொல்லிவிட்டு மாலை வகுப்பு ஆரம்பித்தேன்" என்றார்.

"பைத்தியக்கார வேல செய்யாதீங்க ஸேர். நான் உங்கட நன்மைக்காகத்தான் சொல்றன். ஒரு நாளும் இந்தப் பாடசாலையில் அப்படி மாலைவகுப்பு ஆரம்பித்ததில்லை. ஏழை விவசாயிகளின் பிள்ளைங்க. இவங்களுக்கு வயல் வேலை, மரம் ஏறுவது, எங்கள் தோட்டங்களில் கூலி வேலை செய்வதையும் விட்டால் வேறு ஒன்றுமில்லை. விளங்குதா? இவங்களுக்கு படிப்பிக்க கஷ்டப்பட வேண்டியதில்லை. ஐயா புத்தகங்கள் வாசித்துக் கொண்டு கதை -கவிதை எழுதிக் கொண்டு உங்கட பாட்டுக்கு இருங்கோ. இந்தப் பாடசாலை வரலாற்றில் ஒருவர் கூட புலமை பரிசில் சித்தியடைந்ததில்லை. சும்மா சிரமப்பட்டு பிரயோசனமில்லை".

சிரிநாத அமர்ந்திருந்த கதிரையால் எழுந்தார்.

"தாங்கள் இப்படிச் சொல்வதனால் நான் இந்தப் பிள்ளைகளுக்காக நன்றாக வேளை செய்வேன்.
எனது அப்பாவும் ஒரு ஏழை விவசாயி. அப்பா கஷ்டப்பட்டு கவலைப்பட்டு என்னை படிப்பித்தார். எனது வகுப்பிலிருப்பது எனது அப்பா போன்ற விவசாயிகளின் பிள்ளைகளென்றால் அப்படிப்பட்டவர்களுக்கு உதவுவது எனது கடமை. நான் எனது முழு சக்தியையும் பிரயோகித்து இந்தப் பிள்ளைகளுக்கு உதவுவேன்.

ரத்னாவலி ஆசிரியை அறையிலிருந்து வெளியே சென்றார். சிரிநாத ஐந்தாம் வகுப்புக்குச் சென்றார்.

தினமும் காலையிலும் மாலையிலும் சிரிநாத ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு கற்பித்தார். அப்பிள்ளைகளின் பெற்றார் சிரிநாதவை சந்தித்தனர். ஒருவர் விகாரைக்கு தானம் வழங்குவதற்கும் முன்வந்தார்.

"அப்பொழுது சிரிநாத ஸேரும் எங்கட சாப்பாட்ட சாப்பிடுவாரே" அவர்கள் நினைத்தனர். புலமைப் பரீட்சை நடை பெற்றது. அதற்கு சிலநாட்களின் பின்பு சிரிநாதவுக்கு வேறு பாடசாலைக்கு மாற்றலாகிச் செல்ல நேர்ந்தது.

ரத்னலதா மாலை புலமைப் பரிசில் வகுப்பை நிறுத்த தலைமை ஆசிரியரைத் தூண்ட எடுத்த முயற்சி கைகூடவில்லை சிரிநாதவின் முன் அக்கருத்தை முன்வைக்கும் சக்தியும் அவளுக்கிருக்கவில்லை. சிரிநாத இடமாற்றம் பெற்றுச் செல்லும் தினத்தில் ஐந்தாம் வகுப்பு மாணவர்களும் அவர்களது பெற்றோரும் பன்சலைக்கு வந்தனர்.

ஆசிரியருக்கு நலம் வேண்டி அவர்கள் போதி பூஜையும் மேற்கொண்டனர்.

"நீங்கள் இருந்தால் எங்கள் பிள்ளைகளுக்கு நல்ல காலம்தான்" அவர்கள் கூறினர்.

புலமைப் பரிசில் பெறுபேறு வந்திருந்தது. பாடசாலையில் ஒரு மாணவி சித்தியடைந்திருந்தாள். அவள் தனது தாய், தந்தை, தம்பி ஆகியோருடன் சிரிநாத ஆசிரியரைக் காண்பதற்காக வந்திருந்தாள்.

"ஐயா இந்த ஊரின் வரலாற்றில் புலமை பரீட்சையில் சித்தியடைந்துள்ளவர் இந்த மாணவிதான். அந்த கௌரவம் உங்களத்தான் சேரும். பெறுபேறு வந்த அன்று நேரகாலத்தோடு ரத்னலதா நோனா வீட்டுக்குப் போய்விட்டார். ஒரு வாரமாக பாடசாலைக்கு வரவே இல்லை. அன்று நீங்கள் பாடசாலையிலிருந்திருந்தால் எவ்வளவு நல்லது?". இவ்வாறு பெரியபிக்கு சொன்னார்.

"இனி இந்தப் பிள்ளைக்கு நகரத்திலுள்ள மத்திய மகா வித்தியாலயத்திற்கு போகலாம் சுவாமி. அரசாங்கத்தால் சகாய நிதியும் கிடைக்கும். தாங்களும் இந்த பிள்ளயை கவனிப்பீர்களென நினைக்கிறேன். நானும் மத்திய வித்தியாலப் பக்கம் போறன். எனக்குத் தெரிந்த பல ஆசிரியர்கள் அங்க இருக்காங்க. உற்சாகத்த கைவிடாதீங்க மகள். நல்லாப் படிக்கணும்." சிரிநாத சொன்னார்.

அந்த பிள்ளையின் கண்ணீரால் ஆசிரியரின் பாதங்கள் இரண்டும் நனைந்தன.

# எல்லோரும் தலைவர்கள்.

"மிஸ்ட சிறிநாதவுக்கு 5சீ பிரிவுதான் தர வேண்டியிருக்கு பரவாயில்லயா?" அதிபர் கேட்டார்.

"பரவாயில்லை" சிறிநாத சொன்னார்.

"ஆனால் சின்னப் பிரச்சினையொன்று"

"என்ன?"

"அந்த வகுப்பை எடுக்க எந்த ஆசிரியரும் விருப்பமில்லயே. பிள்ளைகள் படுமோசம். படிப்பிக்காகவிட்டாலும் பிரச்சினையில்லை. பிள்ளைங்க உயிரப் போக்கிக் கொள்ளாம பார்த்துக் கொண்டால் சரி.

"அந்த வகுப்பு கென்டீம் அருகில் உள்ளது. அவங்களுக்கு அந்த இடம் தான் உகந்தது. பெரிய தலையிடி பிடித்த வகுப்பு. நான் நினைக்கிறன் கண்,மண் விண் என்று எழுதத் தெரியாத பிள்ளைங்களும் இருப்பாங்க. மிஸ்டர் சிறிநாதவுக்கு தருவதற்கு வேறு வகுப்பு இல்லை. என்ன சொல்றீங்க?"

"நான் விருப்பம், எனக்கந்த வகுப்பத் தாங்க " பாடசாலையின் சிரேஷ்ட மாணவர் தலைவரோடு சிறிநாத 5-C வகுப்புக்குச் சென்றார்.

"ஸேர் அந்த வகுப்பில் இரண்டு பிள்ளைகள் சண்டை பிடித்து, இருவருமே மண்டை பிளந்து சென்றவாரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனங்க". மாணவர் தலைவர் அந்த வகுப்பைக் காட்டி சிறிநாதவிடம் கூறினான்.

கென்ரீன் புகையினால் நிரம்பியிருந்தது. அடுப் பெரித்துக்கொண்டிருந்த ஒருவயதுப் பெண் சிறிநாதவைப் பார்த்துச் சிரித்தாள்.

“ஸேருக்கு தண்டனையொன்று கொடுத்து.” அவள் அவருக்குச் சொன்னாள்.

அடுப்பருகால் 5-C வகுப்புக்குக்குச் சென்ற சிறிநாதவை பிள்ளைகள் வியப்புடன் பார்த்தனர்.

அவர் பிள்ளைகளோடு சிரித்தார். அவர்கள் எழுந்திருக்கவில்லை.

“பிள்ளைகள் எழும்புங்கோ. நாங்கள் வனக்கம். சொல்வோம்.” அவர் கைகளிரண்டையும் ஒன்று சேர்த்துக் கூறினார்.

சில பிள்ளைகள் எழுந்தனர். வணக்கம் கூறினார்.

சிறிநாத ஆசிரியர் கதிரையில் அமர்ந்தார். பின்வரிசைப் பிள்ளை ஒருவன் மீது அவர் பார்வை சென்றது.

“இந்தப்பிள்ளையின் பெயர் நிமல் அல்வா? அவர் அந்த மாணவனிடம் கேட்டார்.”

“ இல்லை நான் பியல் ” என்றவாறு அவன் எங்கோ பார்த்துக் கொணடான்.

“சரி சரி நான் பிழைவிட்டிட்டன் பியல்தான் பெயர். எனக்கு ஞாபகம். கண்டிருக்கிறேன்.”

பல பிள்ளைகள் ஒரேயடியாகச் சத்தமிட்டனர்.
“ஸேர் இவன்தான் பஸ்டாண்டில் குரும்பை விற்கும் சைமனின் மகன்”

சிறிநாத அவர்கள் பக்கம் பார்த்தார்.

“சைமன் அண்ணன் எனது கூட்டாளி. சிறிநாத ஸேர் அகங்கம பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளதாக பியல் போய் அப்பாவிடம் சொல்லு ”

பியல் ஆசிரியரைப் பார்த்தான்.

"அப்படியென்றா ஸேர் சைமனிடம் குரும்பை குடித்திருப்பார். பியல் இரவைக்கு விகாரைத் தோட்டத்தில் கள்ளக்குரும்பை பறிப்பான். சைமன் பகலில் அதனை பஸ்டாண்டில் விற்பான்." ஒருவன் கூறினான்.

"அதெல்லாம் பொய்க்கதை.....பியல் அப்படிப் பட்டவனல்ல. தம்பி இந்தக் கரும்பலகய அழித்துவிடு எங்கே அழிக்க டஸ்டர் இல்லயே"....

பியல் எழுந்தான். கென்றின் மூலையொன்றிலிருந்த கடதாசித் தாளொன்றை உருண்டையாக்கி அதனால் அழிந்தான்.

வகுப்பிலிருந்த குழப்படியான தோற்றமுடைய உயர்ந்த பருத்த மாணவன் பியல்தான். கரும்பலகையைத் துடைத்த அவன்அந்தக் கடதாசி உருண்டையால் ஒரு மாணவனின் முகத்திற்கு எறிந்தான்.

"பார்த்தீங்களா ஸேர் செய்த வேலய...... அவன் கள்ளன் ஆனாலும் பிடிபடமாட்டான் " கடதாசி உருண்டையால் அடிவேண்டிய மாணவன் சொன்னான்.

சிரிநாத எல்லா மாணவர்களோடும் கதைத்தார்.

வரவுப்பதிவேடு அடையாளம் செய்யும் போது பிள்ளைகள் இருந்தும் சொல்லவில்லை. இதனால் சிரிநாதவுக்கு பியலின் உதவி தேவைப்பட்டது.

"பியஸேன" சிரிநாத சொன்னார்.

"இருக்கிறான் ஸேர்" பியல் சொன்னான்.

இடைவேளையின் போது பிஸ்கட் பங்கிட எனக்கு முடியாது. இவங்க சண்டபிடிக்கிறாங்க பறிக்கிறாங்க" அந்தமாணவன் சிரிநாதவிடம் கூறினான்.

"நான் பங்கிடுறன் ஸார் " பியல் முன்வந்தான்.

பிள்ளைகளில் சண்டைக்கு மத்தியில் பியல் பிஸ்கட் பகிர்ந்தான். அவன் பின்னர் பிள்ளைகள் மைதானத்திற்கு ஓடினார்கள்.

சிறிநாத கென்ரீன் வாங்கில் அமர்ந்தபடி வடை ஒன்று சாப்பிட்டு தேநீர் பருகினார்.

“புதிய வகுப்பு எப்படி ? ” ஆசிரியை ஒருவர் கேட்டார்.

“இன்னுமே சில மணிநேரமாவது கழியாததநாள ஒன்றும் சொல்ல முடியவில்லை” சிறிநாத கூறினார்.

இடைவேளையின் பின்னர் மாணவர்கள் வகுப்புக்கு வந்தனர்.

சிறிநாத ஆலோசனையொன்று கூறினார்.

“நாங்க எங்கட வகுப்புக்கு ஒரு தலைவர் நியமிக்க வேண்டும்.” அவர் மாணவர்களை கவனமாக நோட்டமிட்டார்.

கடதாசி,பேனைஇடாப்புடன் சிறிநாத அந்த வேலையை ஆரம்பித்தார்.

“வகுப்பின் சிரேஷ்ட மாணவர் தலைவர் பியல்” சிறிநாத சொன்னார்.

“ஸருக்கு குரும்ப குடிக்கலாம்.” ஒரு மாணவன் சொன்னான்.

முழு வகுப்பும் சிரித்தது.

சிறிநாத சிறிது நேரம் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

“நல்லது அடுத்ததாக உதவித் தலைவர் கமலஸேன எழுந்திரு” அவன் தனது சிக்குமுடியை சரிசெய்து கொண்டான்.

எழுந்து நின்ற கமலஸேனவின் முகத்தில் வெட்கமும் மகிழ்ச்சியும் கலந்திருந்தது.

“வகுப்பில் இருபத்தாறுபேர். நான்கு வரிசைகள். நான் ஒரு வரிசைக்கு ஒருவரை தலைவராக நியமிக்கிறேன். முதலாம் வரிசையின் தலைவன் விமல். இரண்டாம் வரிசைத் தலைவன் டயஸ். மூன்றாம் வரிசைத் தலைவன் எல்பட். நான்காம் வரிசைத் தலைவன் ஜயஸேன. இப்பொழுது அந்த நால்வரும் எழும்புங்க. தங்கள் வரிசையில் உள்ளவர்கள் சரியா என்பதை அந்தத் தலைவர்கள் பார்க்கவேணும். வரிசையில் யாராவது குறைவென்றா சொல்லணும். இப்பொழுது இடைவேளையின் வகுப்புக்கு வந்தவர்களில் இருவர் குறைவு. அவர்கள் சுணங்கி வந்தார்கள். அப்படியான நேரத்தில் வரிசைத் தலைவர்கள் பார்க்கணும். வகுப்பிலிருந்து வெளியே போகும்போது வரிசை ஒழுங்கில் போகணும்.........

“அடுத்ததாக பெயர் இடாப்பின் தலைவர் பீரிஸ். காலமே காரியாலத்திற்குப்போய் கொண்டு வரவேணும் .அடுத்ததாக வெட்டிடத் தலைவர் காரியாலயம் போய்க்கொண்டு வந்து பாதுகாப்பாக வைக்கணும். அடுத்ததாக கரும்பலகை அழிப்பான் தலைவர் பிரனாந்து. பிரனாந்து எப்பொழுதும் கரும்பலகை அருகே அதனை வைக்கவேணும். அது காணாமல்போனால் பிரனாந்துதான் பொறுப்பு........

“இனி வகுப்புக் கூட்டும் தும்புத்தடி தலைவர் மைக்கல். அதற்கு அவரே பொறுப்பாக இருக்கணும்.அதற்கு பொருத்தமான இடமான கரும்பலகை மூலையில் அதனை வைக்கணும். கூட்டும்போது அந்ததப்பிள்ளைகளிடம் கொடுக்கணும். பிரம்புத்தலைவர் விநீ மேசைக்கு மேல் அதனை வைக்கணும். கரும் பலகைத் தலைவர் கலுவாரச்சி கரும்பலகையை சுத்தமாக வைத்துப் பாதுகாக்கணும். கான் தலைவர்கள் நான்கு பேர்....

இந்த கன்டீன் முன்னாளுள்ள கான் சுத்தமாக இருக்கணும். அதனை சன்ஜீவ, பிரகீத், சோமசுந்தர, வனசிங்க இப்படி நாள்வருக்கும் பகிர்ந்து தருவேன். விளக்குமாற்றுத் தலைவன் அபேவிக்ரம விளக்குமாற்றை கரும்பலகைக்குப் பின்னால் வைக்கணும். முற்றம் கூட்டுவதற்கு பொறுப்பான தலைவர்கள் ஐந்துபேர். வார நாட்கள் ஒழுங்கில் ஜயலத், சிரிபால, அமித, குணசேகர, ரன்ஜித் ஆகியோர். இன்னும் ஐந்து தலைவர்கள் உள்ளனர் . காலையில் மலர்பூஜைத்

தலைவர்களான ஆரியதாச, வசந்த, சோமபால, கருணாசிங்க, ஜாகொட ஆகியோர் வரிசைப்படி இயங்குவர்.

"மாணவர்கள் இருபத்தாறு பேர். அத்தனை பேரும் தலைவர்கள். அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளை நான் செய்வேன். நாளையிலிருந்து உங்கள் பதவி செயற்படும்."

"நல்லது தும்புத்தடி தலைவர் வாருங்க"

மைக்கல் முன்னே வந்தான்.

"அந்த தும்புத்தடி வாங்கின் கீழே இருக்கு. அதனை உரிய இடத்தில் வைக்கவும்."

மைக்கல் தும்புத்தடியை கையில் எடுத்தான். அதை கரும்பலகையின் கீழ் வைத்தான்.

"எங்கே விளக்குமாற்றுத்தலைவன் ? அது வெளியே கிடக்கு."

அபேவிக்ரம உடனே வகுப்புக்கு வெளியே ஓடினான். விளக்குமாற்றைக் கொண்டு வந்து கரும்பலகையின் கீழ் வைத்தான்.

பாடசாலை விட்ட போது அந்த வகுப்பிலிருந்து பிள்ளைகள் வரிசையாக வந்தனர்.

அடுத்த நாள் சுவரில் தலைவர்களின் பட்டியல் ஒட்டப்பட்டிருந்தது. பிள்ளைகள் தங்களது பெயரையும் பதவி களையும் பார்த்து மகிழ்ந்தனர்.

ஒரு மாதம் கடந்தது. அதிபர் சிரிநாதவை அழைத்தார்.

"எனக்கு மகிழ்ச்சி. மாணவர்களின் நடத்தை நல்லது.பாடசாலை விட்டு வரிசையாகத்தான் பாதையில் போறாங்க. அடுத்த வகுப்புப் பிள்ளைங்க அவிழ்த்துவிட்ட மாடுகள் போலப்போறாங்க. 5c வகுப்பு இப்பொழுது பாடசாலைக்கே முன்மாதிரியா இருக்கு. எந்த சத்தமும் இல்லை. படிப்பு எப்படி ?"

"அதிகமானவர்களுக்கு இரண்டாம் வகுப்பு அறிவு கூட இல்லை. வாசிப்பும் எழுத்தும் இலக்க அறிமுகமும்தான் நான் செய்றன்."

"அது கொஞ்சத்தையும் செய்தாலே போதும். கைகழுவிப் போட்டிருந்த வகுப்பல்லவா?"

சிரிநாத அந்தக் குடும்பங்களின் தகவல்களையும் தேடியெடுத்தார்.

கான் தலைவனின் தகப்பன் ஒரு களவு காரணமாகத் தற்பொழுது காலிச்சிறைச்சாலையில் உள்ளான். அவன் சிறைச்சாலையில் கான் கழுவுறான். மூன்று பிள்ளைகளின் தந்தைமார் இறந்துள்ளனர். இன்னும் மூன்று பிள்ளைகளுக்கு தந்தைமார் இல்லை. அம்மாமார் திருமணமாகாதவர்கள்.

அதிகமானவர்களின் அப்பாமார் கூலி வேலைக் காரர்கள்.பிரதான மாணவத்தலைவரின் அப்பா குரும்பை விற்கிறார் . ஒரு நாள் பஸ்ஸில் ஏறப்போன சிரிநாதவுக்கு வற்புறுத்தி இளநீர் கொடுத்தான். அதற்காக சிரிநாத் பணம் கொடுக்கத்தயாரான போது .....

"சேர் எனது பையன் நன்கு திருந்தியிருக்கிறான். சரியான ஒழுங்கு. நான் குரும்பை விற்கும் இடத்திற்கு வந்து என்னை வணங்கிவிட்டுப்போகிறான். சேர் தான் அதனை அவனுக்கு பழக்கினீர்கள். அவன் மரமேறுவதில் கெட்டிக்காரன். என் கால்கள் உடைந்த பிறகு அவன் மரமேறி எனக்கு இளநீர் கொண்டு வந்து தருகிறான்.

"மாலையில் அவன் அதைத்தான் செய்கிறான். புாடசாலை விட்டுப் போகும் நேரத்தில் இதோ உங்களுக்கொரு இளநீர் தருகிறேன். வேண்டாமென்று செல்லாதீங்க"

சிரிநாத அதன் பிறகு பஸ் நிலையத்திற்கு போகாமல் அதற்கு சற்று முன்னாலுள்ள பஸ் ஹோல்டிலிருந்தே பஸ் ஏற பழகிக் கொண்டார்.



# பாண்காரனின் ஆசிரியர்

பரவாகுமுக்கை சந்தையில் அபசேகரகமை அதிபர் திலக் த சில்வா அவர்கள், வெட்டிய பாடசாலை உதவியாசிரியர் சிரிநாதவை சந்தித்தார்.

"எப்படி வாழ்க்கை ஓடுது?" திலக் கேட்டார்.

" என்ன இனி காலையில் படிப்பிக்கிறன் , எழுதுறன், வாசிக்கறன், கடை அம்மையார் வீட்டில் சாப்பிடுறன், பாடசாலை அறையில் தூங்குறன்."

"நாளொரு வேண்டுகோள் விடுக்கப்பார்த்தன். எங்கட பாடசாலையில் பதினோராம் தரத்திற்கு படிப்பிக்க நான் மாத்திரமே இருக்கிறன். நான் கணிதம், புத்ததர்மம் படிப்பிக்கிறன். அது இரண்டும் காணாதே . இன்னும் ஆறு பாடங்களிருக்கு . சிரியைப்பற்றி தெரிந்ததால் தான் நான் இதைக் கேட்கிறேன். மாலை வேளையில் வந்து எங்கள் பிள்ளைகளுக்கு உதவி செய்ய முடியாதா? இந்த வருடம் பரீட்சைக்கிருக்கும் பிள்ளைகள் அல்லவா?"

சிரிநாத சற்று நேரம் மௌனமையாக நின்றார்.

" எத்தனை பிள்ளைகள் இருக்காங்க?" சிரிநாத கேட்டார்.

" பண்ணிரண்டு பேர்"

"நான் விருப்பம். ஆறு கிலோமீற்றர் அளவு இருக்கே எப்படி வாரது?"

"நான் ஒரு பிள்ளையோடு சைக்கிள் அனுப்புறன்."

சிரிநாத வெடிய பாடசாலையில் பி.ப 1:30 வரை வேலை செய்தார். அதன் பிறகு அவர் ஓடையில் இறங்கிக்குளித்து

விட்டு கடையம்மா வீட்டில் சாப்பிடுவார். பி.ப 2:15 க்கு அபேசேகரகமை மாணவன் சைக்கிளின் வருவான். சிரிநாதவை முன்பக்க பாரில் இருத்திக் கொள்ளும் மாணவன் ஆறு கிலோ மீற்றர் மிதித்துச்செல்வான்.

சிரிநாத அபேசேகர கம பாடசாலையில் பதினோராமத் வகுப்பு மாணவர்களுக்கு ஐந்து பாடங்கள் கற்பிக்க ஆரம்பித்தார்.

கேள்வியொன்றைக் கொடுத்து பதிலை கலந்துரையாடும் குறுகிய முறையை உபயோகிக்கவே முதலில் நினைத்தார். ஆனால் பிள்ளைகளுக்கு பாடம் புதிதாக இருந்ததால் அந்த முறை கஷ்டமாக இருந்தது.

"பிள்ளைங்க பத்தாம் வகுப்பில் இவற்றை படிக்கவில்லையா?"

பிள்ளைகள் சிரித்தார்கள்.

"பத்தாம் வகுப்பிலும் படிப்பிக்க ஆசிரியர்கள் இருக்கவில்லை." ஒரு மாணவன் கூறினான்.

"ஆறு ஏழு மாதங்களில் பரீட்சையில் சித்தியடையத் தக்கதாக படிப்பிக்க முடியுமென்று நான் நம்பவில்லை. பிள்ளைங்களுக்கும் இவ்விடயம் தொடர்பான அடிப்படை அறிவே இல்லை." சிரிநாத அதிபரிடம் சொன்னார்.

"எனக்குத் தெரியும். இருந்தாலும் இந்தப் பிள்ளைகளுக்கு உதவ சிரியால முடியும். பிள்ளைகள் விரைவாகப் பிடித்துக்கொள்வார்கள்." அதிபர் கூறினார்.

சிரிநாத ஒவ்வொரு நாள் மாலையிலும் அபேஸகரகமை பாடசாலைக்கு வந்தார். மாலைவரை கற்பித்தார்.

நள்ளிரவு கழியும்வரை அவர் ஐந்து பாடங்கள் சம்பந்தமாகவும் விடயம் சேர்த்தார். குறிப்பெழுதினார். கேள்வி தயாரித்தார். மாணவர்களின் விடைகளை வாசித்து திருத்தி சரியான விடையை அதனருகே எழுதினார்.

அந்த எல்லாப் பிள்ளைகளும் விவசாயக்குடுமபங்களைச் சேர்ந்தவர்கள். வயல்களிலும் சேனைகளிலும் வேலை காரணமாக இவர்கள் அவ்வப்போதுதான் பாடசாலைக்கு

வருவார்கள். இருந்தாலும் சிறிநாதாவினால் பிள்ளைகளுக்காக ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு வர நேர்ந்தது.

"உங்களுக்கு படிப்பிக்க ஒரு ஸேர் வருவார். பரீட்சை முடியும் வரை சேனை வேலைக்கு போகாதீங்க அவருக்கு நாங்கள் காசு கொடுப்பதில்லை. நீங்கயாரும் வகுப்பிற்கு வராதிருக்கவேணாம். ஒருவராவது வராவிட்டால் ஸேர் மனம் நொந்துபோவார்."

அதிபர் முன்பே இப்படிக்கூறி வைத்திருந்தார். ஒரு மாணவரும் கூட பாடசாலைக்கு வராத தொரு நாள் இருக்கவில்லை.

"இரண்டு மாணவர்கள் பாஸ் பண்ணுவார்களென்று எனக்கு நம்பிக்கையுண்டு. அடுத்தவர்களும் சில பாடங்களாவது பாஸ் பண்ணுவார்கள். " சிறிநாத பரீட்சைக்கு முதல்நாள் அதிபரிடம் கூறினார்.

"நானும் அப்படித்தான் நினைத்தேன்" அதிபர் சொன்னார்.

க.பொ.த.சாதாரண தரத்தில் ஒரேயொரு மாணவன் மட்டுமே சித்தியடைந்தான். அடுத்தவர்கள் மூன்று நான்கு பாடங்கள் சித்தியடைந்துதிருந்தனர்.

குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் சிறிநாத ஸேர் ஆசிரியர் சேவையிலிருந்து விலகி வேறொரு தொழிலில் இணைந்தார். அவர் களனி - தழுகமையில் ஓர் விடுதியில் தங்கியிருந்தார்.

ஒரு நாள் அவர் பஸ்ஸிலிருந்து இறங்கி விடுதிப்பக்கமாக நடந்து கொண்டிருந்தார்.

பெரிய பாண்பெட்டியுடன் ஒரு சைக்கிள் அவருக்கு முன்னால் வந்து நின்றது.

வாட்டசாட்டமான வாலிபனொருவன் அதிலிருந்து இறங்கி அவர் முன்னே வந்தான்.

" இது சிறிநாத ஸேர் அல்லவா? " அவன் கேட்டான்

சிறிநாத அவனை கூர்ந்து பார்த்தான்.

"ஆம் எனக்கு யாரென்று ஞாபகம் வரவில்ல"

"ஸேரில் ஒரு மாற்றமுமில்லை. ஆனா நான் மாறியிருக்கிறன். ஸேருக்கு ஞாபகமா? நீங்கள் வெடிய பாடசாலையில் இருக்கும் காலத்தில் அங்கிருந்து அபேஸேகர ஊருக்கு ஸேரை சைக்கிளில் ஏற்றிச் சென்றது நான்"

"ஓ....ஞாபகம் ஞாபகம் இது சிரிபால"

"சரி ஸேர்.....ஸேர் படிப்பித்த முறை ஞாபகம். ஆனால் என்னால் சோதனை பாஸ்பண்ண முடியவில்லை. நான்இப்பொழுது போக்கிரியில்...... அதுக்கு மேலதிகமாக பாண் விற்பனையும் செய்றன். இப்பொழுது நான் காணித்துண்டொன்று வாங்கி சின்ன வீடொன்றும் கட்டிக்கொண்டு போறன்."

அவன் கீழே விழுந்து சிரிநாதாவை வணங்கினான்.

"அந்த பேக்ஹவுஸில்தான் நான் வேலை செய்றன். டீ குடிக்க போவோம் ஸேர்"

"மிகவும் நன்றி சிரிபால. தேநீர் வேண்டாம். இப்படிச் சந்தித்தது எவ்வளவு சந்தோஷம்."

"ஐயோ ஸேர்.... தேநீர் குடிப்போம்."

சிரிபால சிரிநாதாவுடன் பேக்ஹவுஸுக்குச் சென்றான். சிரிநாத தேநீர் குடிக்கும் போது சிரிபால தனது ஆசிரியரை அங்குள்ள ஏனைய சேவகர்களுக்கு எடுத்துக் கூறினான்.

"காலையில் வெடிய பாடசாலையில் படிப்பித்து விட்டு மாலைநேரம் எங்கள் பாடசாலைக்கு வந்து இரவுவரை படிப்பித்த ஆசிரியர்தான் இவர். நான் தான் ஸேரை சைக்கிளில் வைத்து கூட்டிச் சென்றேன்." அவன் பெருமையோடு சொன்னான்.

N.B

6

## அதிபருக்கு வன்னிக்கு இடமாற்றம்.

"பாடசாலைக்கு வெண்கட்டிப் பெட்டியொன்றனுப்பவாவது இந்த அதிகாரிகளுக்கு தேவையில்லை சிறிநாத இன்னக்கி நான் ரெண்டு பேச்சுப்பேசிட்டுத்தான் வந்தன் " கல்விக் காரியாலத்திற்குச் சென்றுவிட்டு பாடசாலைக்கு வந்த அதிபர் சொன்னார்.

அவரது முகத்தில் கோபம் பதிவாகியிருந்தது.

"சென்ற கிழமை காசுக்குத் தானே வெண்கட்டி கொண்டு வந்தோம்." சிறிநாத கேட்டார்.

"எங்களுக்கு கிடைக்கும் அற்ப சம்பளத்தில் இதையெல்லாம் எப்படிச் செய்வது? ஆனாலும் அந்தப் பிள்ளைகளுக்கு நாங்க படிப்பிக்கணும். எல்லாமே கரும்பலகை,வெண்கட்டி மூலம் தான் சொல்லிக் கொடுக்கணும்......... இலங்கைவரைபடம், உலகப் படம் இப்படி ஒன்றுமே இப்பாடசாலையில் இல்லை. அதையும் நாங்கள் கடதாசியில் வரைந்துதான் காட்டணும். நன்றாக படிக்கக்கூடிய மாணவர்கள் எத்தனை பிள்ளைகள் இந்தப் பாடசாலையில் உள்ளார்கள்.? ஆனாலும் அவர்களுக்கு கற்பிக்க ஆசிரியர்கள் இல்லை. கணித ஆசிரியை மாற்றலாகிச் சென்று மூன்று மாதம். ஆசிரியர் கேட்டால் அதிகாரி என்னவோ கதைக்கிறார். ஆசிரியர் மந்திரியைப் பிடித்து நகரத்திற்கு மாற்றமெடுத்துக் கொண்டார். எங்க பிள்ளைகளுக்கு நான்தான் இப்பொழுது கணிதம் கற்பிக்க வேண்டிய நிலை. எனக்கு கணிதம் ஞாபகமில்லை. நெடுங்காலம் ஆங்கிலம்தான் கற்பித்துவந்தேன். "

அதிபர் இப்பாடசாலைப் பிள்ளைகள் மீது காட்டும் அன்பு பற்றி சிறிநாதாவுக்கு ஒரு மதிப்பிருந்தது. அவர் சாதாரணதர மாணவர்களுக்கு பரீட்சைக்காக மாலையில் படிப்பிப்பார். சிறிநாதாவும் அவருடன் சேர்ந்து காலையிலும் மாலையிலும் பாடசாலையில் வேலை செய்தார்.

"இந்தப் பாடசாலைக்கு எந்த வசதியும் செய்து தராவிட்டாலும் கூட, மாகாண அமைச்சரவை வரவேற்க தயாராகும் படி கல்வி அதிகாரி இன்று கூறினார். அமைச்சர் பாடசாலை பார்க்க வருகிறாராம்....

" பாதையிலிருந்து பாடசாலை வரை இருபக்கமாகவும் மாணவர்களை நிறுத்தி அமைச்சருக்கு மரியாதை செலுத்தட்டுமாம்.......

"கேற்றடியில் தோரணம் எழுப்பட்டுமாம். மேடையில் பித்தளை விளக்கு வைக்கணுமாம். மாணவர்களுக்குச் சொல்லி வரவேற்பு கீதம் இசைக்கட்டுமாம். எல்லா அதிபர்களும் தத்தமது பாடசாலைகளில் அந்த வேலைகளைச் செய்வதாக ஏற்றுக்கொண்டனர்."

"ஸேர் என்ன சொன்னீங்க ?"

" நான் கதைக்கவில்லை பொருத்தமானதை நான் செய்வன்"

சிறிநாத கேள்வி எழுப்பவில்லை.

அமைச்சர் அவர்கள் வரும்நாள் வந்தது.

மேடையின் மீது சிறிய கதிரையொன்று வைத்து தேங்காய் எண்ணெய் நிரம்பிய விளக்கொன்றையும் தீப்பெட்டியையும் வைத்த அதிபர் வழமைபோல் பாடசாலை வேலையை ஆரம்பித்தார். அவர் பிள்ளைகளுக்கோ ஏனைய ஆசிரியர்களுக்கோ அமைச்சரின் வரவுபற்றித் தெரிவிக்க வில்லை.

முற்பகல் பத்துமணியளவில் பாடசாலை வாயிலில் பலவாகனங்கள் வந்து நிறுத்தும் சத்தம் கேட்டது.

சாதாரணதர மாணவர்களுக்கு தசம அரையை சாதாரண அரைக்கு மாற்றுவது சம்பந்தமாக அதிபர் விளக்கமளித்துக்

கொண்டிருந்தார். சிரிநாத மாணவர்களுக்கு வரலாற்றுக் கதையொன்றை கூறியபடி வேப்பமரத்தடியில் நின்றார்.

அமைச்சர் அதிகாரிகள் பரிவாரத்தோடு பாடசாலைத் தோட்டத்திற்குள் புகுந்தார். அவர் சுத்த வெள்ளைத் தேசிய உடை அணிந்திருந்தார். தலைமுடி சிக்குப்பட்டிருந்தது. முகத்தில் கோப வெடிப்புக்கள்.

அவர் சிரிநாதாவை அழைத்தார்.

"இங்க வாரும்"

சிரிநாத போகவில்லை

"மிக மிகமோசமான தொரு ஆட்சியாளன்" சிரிநாத உயர் தொனியில் வரலாறு கற்பித்துக் கொண்டிருந்தார்.

"எங்கே உங்க பெரியவர்?"

சிரிநாத பாடத்தை இடைநிறுத்தவில்லை.

"எங்கே அதிபர் ?" அமைச்சர் மீண்டும் கேட்டார்.

சிரிநாத கையை நீட்டி அதிபர் நிற்கும் இடத்தைக் காட்டினார். அமைச்சர் அதிகாரிகளோடு பாடசாலை மண்டபத்திற்கு ஏறினார்.

அதிபர் கரும்பகையை பார்த்தபடியிருந்தார்.

"ஐஸே" அமைச்சர் சத்தமிட்டார்.

அதிபர் தலையை உயரத்திப் பார்த்து "கொஞ்சம் இருங்க ஐஸே" என்றவாறு கரும்பலகையில் இன்னும் ஏதோ எழுதினார்.

அமைச்சர் அருகே சென்றார்.

" நீர் யாருக்கு ஐஸே என்று சொன்னீர் . நான் அமைச்சர். நான இன்று வரும் விஷயம் தெரியாதா ?" அமைச்சர் கேட்டார்.

"என்ன ஐஸே என்று தானே கதைத்தீங்க. நான் ஐஸே என்றால் நீரும் ஐஸே தான். அமைச்சரை நான் ரூபவாஹினியில் பார்த்திருக்கன். நீங்கள் வரும் விஷயமும் எனக்குத் தெரியும்."

“வருவது தெரியுமென்றால் ஏன் இப்படிச் செய்தீர்?” அதிகாரியொருவர் முன்வந்து கேட்டார்.

“ஸேர் வாசலில் தோரணும் அடிக்கணும் அங்கிருந்து பிள்ளைகளை வரிசையாக நிறுத்தி அமைச்சரை வரவேற்க ஒழுங்குபடுத்தச் சொல்லி கலந்துரையாடிய கூட்டத்திற்கு இந்த அதிபரும் போயிருந்தார்.”

“அப்படியா? என்ன இப்படிச் செய்திருக்கிறீர்?”

அதிபர் அமைச்சரை மங்கள விளக்கேற்றுமாறு வேண்டினார்.

“எங்கே விளக்கு?”

“அங்கே மேடையில் இருக்கு”

அமைச்சர் மேடைக்கேறினார். மண்விளக்கு வைத்திருந்த கதிரைக்கு காலால் உதைத்தார். விளக்கு மேலே தெரித்தது. ஒரு மாணவனின் புத்தகத்திலேயே போய் விழுந்தது.

“என்ற புத்தகத்தில் தேங்காய் எண்ணெய் விழுந்திட்டுது” ஒரு சிறுவன் சத்தமிட்டான்.

அமைச்சரின் உடம்பு துடிப்பது தெரிந்தது. கைகள் நடுங்கின.

“எனக்கு இப்படியொரு வரவேற்பு எங்குமே நடந்ததில்லை. ஏன் நீர் என்னை இங்கு வரவைத்தீர்?”

அமைச்சர் பிரதம கல்வி அதிகாரியை எச்சரித்தார்.

“ஸேர் இந்த அதிபர் குழப்படிக்காரன். எப்போதுமே இப்படித்தான். இவர் அரசியல் பழிவாங்களுக்கு உள்ளான ஒருவர்.” அதிகாரி கூறினார்.

“குழப்படிக்காரன் நானல்ல இந்த அதிகாரி இவர் பிள்ளைகளின் கல்வியை குட்டிச்சுவராக்கிறார்.” அதிபர் சொன்னார்.

“உம்மை நான் பருத்தித்துறைக்கு மாற்றுவன்” அமைச்சர் அதிபருக்கு சொன்னார்.

"எந்த தண்டனையும் தாருங்க. ஆனா பிள்ளைகள் இருந்தா நான் படிப்பிப்பன். அவ்வளவுதான் இந்த ஏழை பிள்ளைகளின் அம்மா, அப்பாமாரிடம் தோரணமடிக்க காசில்லை. அந்தப் பிள்ளைகளை வெய்யிலில் வரிசையில் நிறுத்த நான் தயாரில்லை. எனக்கு பித்தளை விளக்கு தேடிக்கொள்ளவும் முடியாது. அதனாலதான் மண்விளக்கு வைத்தன். எந்த இடத்துக்கும் என்னை மாற்றுங்க. நான் அதை சரிசெய்து கொள்ள வரமாட்டன்."

அடுத்த ஆசிரியர்கள் நால்வரும் ஆச்சரியத்தோடு அதிபரின் கதையை கேட்டுக்கொண்டிருந்தனர்.

"நான் பார்த்துக்கொள்றன்." என்று சொன்னவாறு அமைச்சர் பாடசாலையிலிருந்து வெளியேறினார்."

அதிகாரிகளும் பயத்துடனும் நடுக்கத்துடனும் அவர் பின்னால் சென்றனர்.

" நான் ஒரேயொரு விஷயத்துக்காகத்தான் கவலப்படுறன். இந்தப் பிள்ளைகள் ஆறுபேரும் சாதாரண தரப் பரீட்சை எழுத இன்னு ஆறு மாதமிருக்கு. அது வரையில இருக்கக் கிடைத்தால் நல்லது"

அவர் உடுப்புப் பையை எடுத்தபடி சிரிநாதவுக்குச் சொன்னார்.

சிரிநாத அவரோடு மூன்று கிலோமீற்றர் தூரம் பஸ்பாதைக்கு நடந்து சென்றார்.

"அந்தப் பிள்ளைகளுக்கு எப்படியாவது கணக்குச் சொல்லிக் குடுங்க." பஸ்ஸுக்கு ஏறியபடி அதிபர் சொன்னார். (காலம் சென்ற ஆசிரிய அங்கத் தலைவர் ஏ.பீ.சீ.த. சில்வா அவர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் அவரது வாழ்க்கை அனுபவத்திற்கூடாக இக்கதை எழுதப்பட்டுள்ளது.)

## செவ்வரத்ததம் பூ

'மிஸ்டர் சிரிநாத இன்று மூன்றாம் வகுப்பு ஆசிரியை வரவில்லை. அந்த வகுப்புப் பக்கமும் கொஞ்சம் பாருங்க. 'அதிபர் திரு திலக் த சில்வா சொன்னார்.

சிரிநாத இரண்டு வகுப்புகளுக்கும் பொறுப்பாகவிருந்தார். பதினொரு வகுப்புகளுக்கு ஆறு ஆசிரியர்களே இருந்தனர்.

பரவாகும்புக கட மண்டியிலிருந்து நான்கு கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள அபேஸேகர வித்தியாலத்திற்கு ஆசிரியர்கள் வர விருப்பமில்லை. போக்குவரத்துப் பிரச்சினை முக்கிய காரணம். சிரிநாத அபேஸேகரகம விஷப்பாம்பு வைத்தியர் வீட்டில் தங்கியிருந்து பாடசாலைக்குச் சென்றார்.

சிரிநாத மூன்றாம் வகுப்புக்கு வந்தபோது பிள்ளைகள் எழுந்துநின்று அவரை வரவேற்றனர்.

'இப்பொழுது நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்.?"

'பெயர் கூப்பிட்ட பிறகு நாங்கள் கணக்குச் செய்தோம். ஆனால் சரி பிழை பார்க்க ஒருவருமில்லை." ஒரு மாணவன் கூறினான்.

'நான் சரிபிழை பார்க்கிறன். கொப்பிகளை சேர்த்துத் தாங்க."

வகுப்புத் தலைவர் கொப்பிகளைச் சேர்த்து ஆசிரியர் மேசையில் வைத்தான்.

'நான் கணக்குகளைப் பார்க்கிறன். அதுவரை என்ன செய்றது? ம் நாங்க கவிதை எழுதுவோம்." சிரிநாத சொன்னார்.

'எதைப் பற்றி?" ஒரு பிள்ளை வினவினான்''.

சிரிநாத சற்று நேரம் யோசித்தார்.

"சரி எதைப்பற்றி எழுதுவது? நான் எந்தத் தலைப்பும் தரமாட்டன். நீங்கள் சுற்று முற்றும் பார்த்து காண்கிற எதையாவது எழுதுங்க.''

அவர் பிள்ளைகளின் கணக்குகளை சரி பிழை பார்க்க ஆரம்பித்தார்.

பிள்ளைகள் கவிதை எழுத ஆரம்பித்தனர். சில நிமிடங்களின் பின் ஒரு மாணவன் எழுந்தான்.

"ஸேர் நான் கவிதையொன்று எழுதிட்டன். கரும்பலகை பற்றி " அவன் சத்தமிட்டுச் சொன்னான். "நான் இதை வாசிக்கட்டடுமா" மீண்டும்கேட்டான்.

"எல்லாருடைய கவிதைகளையும் சேர்த்து வாசிப்போம். உங்களுக்கு நேரமிருக்கல்லவா.... இன்னொரு கவிதை எழுதுங்க"

"நல்லது ஸேர்.... நான் கரும்பலகை துடைப்பு பற்றியும் எழுதிறன்."

சுமார் பத்து நிமிடங்களின் பின்னர் பிள்ளைகள் கவிதை எழுதி முடிநத்திருந்தனர். சிரிநாதாவின் கணக்குப் பயிற்சி திருத்தமும் முடிவுற்றது.

"அதிகமானவர்களின் கணக்குகள் பிழை. சரி கவிதைகள் எப்படியென்று பார்ப்போம்." என்ற சிரிநாத பிள்ளைகள் எழுதிய கவிதைகளை அவர்களைக் கொண்டே வாசிக்கத் தொடங்குனார்.

"கரும்பலகை கரும்பலகை
எங்கள் வகுப்புக் கரும்பலகை
வெண்கட்டி எழுத்தெழுதி
படம் வரையும் கரும்பலகை.

பிள்ளைகள் இப்படியான கவிதை அடிகளையே எழுதியிருந்தனர்.

எல்லாக் கவிதை அடிகளுக்கும் பெரிதாக சரிபோட்ட சிரிநாத்த அவர்களை மதிப்பீடு செய்தார். ஒரு மாணவன் தொடர்ந்தும் கவிதை எழுதிக் கொண்டிருந்தான். சிரிநாத அவனை தொந்தரவு செய்யவில்லை.

"சரி ஸேர் நானும் எழுதிட்டன் " என்றவாறு அவனும் தனது கவிதையைக் கொடுத்தான்.

சிரிநாத அந்தக் கவிதையை வாசித்தார்.
சேனையில் விறகுக் குற்றியிடை
வெளிப்படும் தீக்கொழுந்து போல்
மதிலுக்கு மறுபக்க மெனக்கு
செவ்வரத்தைப்பூ தெரிகிறது

அதை வாசித்த சிரிநாத இரு கண்களையும் மூடிக்கொண்டார்.

அவரது மனதில் விறகுக் குற்றிகளிடையால் வெளிப்படும் தீக்கொழுந்து தெரிந்தது.அவர் கண்களைத்திறந்து பார்த்தார். மதிலுக்கு மேலால் வெளிப்பட்ட செவ்வரத்தம் பூக்கள் தெரிந்தன. அற்புதமாக உவமான உவமேயம் பொருந்தி யிருந்தது. ஆனாலும் அவர் அதனைப் பிள்ளைகளுக்குச் சொல்லவில்லை. அந்த காவிய அணிகள் பற்றிய விபரம் இந்தப் பிள்ளைகளுக்கு எதற்கு? இருந்தாலும் அந்தப் பிள்ளையின் மனதில் அந்த உவமை எவ்வாறு எழுந்தது.? அந்தச் சொற்களுக்கூடாக வாழ்வின் தரிசனம் வெளிப்பட்டிருந்தது.

"வா மகன்" சிரிநாத அச்சிறுவனை அழைத்தார்.

அந்தக் கவிதையை வாசிக்கச் சொன்னார். அந்தச் சின்னக் கவிஞனின்பெயர் சுனில் சாந்த.

மணியொலித்தது.ஓய்வு நேரம் பிஸ்கட் பகிரும் வேளை. நேர சூசியில் பிள்ளைகளுக்கு மிகவும் முக்கியமான கட்டம். சிரிநாத அதைப் புரிந்து கொண்டிருந்ததால் மெல்ல வகுப்புக்கு

வெளியே சென்றார்.செல்லும் போது கூட சுனில் சாந்தாவின் முகத்தைப்பார்த்தார்.அவன் பயிற்சிப்புத்தகத்தைப் பார்த்தபடி கவிதையை முணுமுணுத்தான்.

சிரிநாத அதிபரிடம் அந்தக் கவிதைப்பற்றி சொன்னார். "எதிர்காலத்தில் ஒருநாள் சுனில் சாந்த நல்லதொரு கவிஞனாக இலக்கியக் காரனாக வருவான்." அதிபர் சொன்னார்.

அன்று மாலை சிரிநாத ஊரில் உலாவச் சென்றார். சுனில் சாந்தாவின் வீட்டையும் கண்டார். அது ஓலையினால் வேயப்பட்ட களிமண் சுவர் கொண்ட வீடு. வீட்டுக்கதவு மூடப்பட்டிருந்தது. அடுத்த வீட்டு வயதுமுதிர்ந்த பெண்ணொருத்தி, சுனில் சாந்தாவின் சேனை இருக்கும் பக்கமாக கைநீட்டிக் காட்டினாள்.

சுனில் சாந்த கிழிந்த சாரனொன்று அணிந்தபடி, பழைய தொப்பியொன்றும் போட்டுக் கொண்டு தனது தந்தையுடன் காயந்த தடிகளை சேர்த்துக்கொண்டிருந்தான். அந்தச் சேனையை வெட்டித் துப்பரவு செய்து அதிகநாள் சென்றிருக்கவில்லை. அவன் காய்ந்த தடிகள், சருகுகளை ஒன்று சேர்த்து தீமூட்டடினான். அந்தக் குவியலுக்கூடாக தீக்கொழுந்துகள் வெளிப்பட்டன.

மதிலுக்கு மேலால் தெரிந்த செவ்வரத்தம்பூ அதோ !

சிரிநாத திரும்பினார். அந்தப் பிள்ளையைக் குழப்பக் கூடாதல்லவா?

சில மாதங்களின் பின் சிரிநாத வேறொரு பிரதேசத்திற்கு பிரதேசத்திற்கு மாற்றலாகிச் சென்றார் . இரண்டு வருடங்களின் பின்பு பாம்பு வைத்தியர் அபேஸேகரவைச் சந்திப்பதற்காக வந்தார். வரும் வழியில் பெரியதொரு எருமைக் கூட்டத்தைக் கண்டார். ஆனால் இடையனைத்தான் 'காணவில்லை. பாதையின் ஓரமாக ஒழுங்குமுறையாக அவை சென்றன. சற்று தூரம் சென்றபோது அவருக்குத் தெரிந்த விவசாயி ஒருவவரைச் சந்தித்தார். அவரோடு சற்று நேரம் கதைத்தார் சிரிநாத.

“சுனில் சாந்தவென்று ஒரு பையனிருந்தான். அவன் இன்னும் படிக்கிறானா? அவர் கேட்டார்.

“அவன் ஒரு வருடத்துக்கு முன்னே பாடசாலைக்குப் போவதை விட்டுவிட்டான். இப்பொழுது எருமைக் கூட்டமொன்று கொண்டு போனது அவன் தான்” விவசாயி கூறினான்.

சிரிநாத சிலையானார். சற்று நேரம் மௌனமாக நின்றார்.

எருமைக் கூட்டமொன்று போனதுதான்.”

“ஸேரைக் கண்டு அவன் எருமை களுக்கிடையில் ஒளித்திருப்பான். அவனுக்கு வெட்கம் வந்திருக்கும். சுனில் சாந்த எருமைகளைவிட உயரம் குறைந்தவன். இருந்தாலும் சிறந்த மேய்ப்பன். விதானை ஐயாவின் எருமைப் பட்டியை பார்ப்பது சுனில் சாந்ததான்.”

9

# அரிசி விற்கும் ஆசிரியர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தலைவர் சகோதரர் பீ. எம் ஆரியபால ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றினார்.

"ஜே.ஆர் ஜெயவர்தன ஆட்சிக்கு வந்தவுடன் மந்திரிமாருக்கு ஐயாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கியுள்ளார். எங்களுக்கு ஒரு சதம் கூட உயர்த்தவில்லை. அதற்கு பதிலாக நாங்கள் வாங்கும் உணவுப் பொருளின் விலையை உயர்த்தியுள்ளார். இப்பொழுது எங்களுக்கு சம்பளத்தால் வாழமுடியாத அளவுக்கு வாழ்க்கைச்செலவு உயர்ந்துள்ளது.

"எங்களுடைய தெழிற்சங்கம் மாதாந்தம் முன்நூறு ரூபா சம்பளத்துடன் சேர்க்குமாறு அரசைக் கேட்டது. அதைப்பொருட்படுத்தவில்லை. இப்பொழுது ஜே. ஆர் ஜெயவர்தன நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி . பாராளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மை உள்ளது. பெரியவர் எங்கள் தெழிற்சங்கத்தை மதிப்பதில்லை....

"அடுத்ததாக நாங்கள் ஜூலை மாதத்தில் வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்துள்ளோம். ஆக ஒரு நாளைக்கு பத்து ரூபா தான் நாங்கள்கேற்கிறோம்.

ஆசிரியர்கள் ஒரே குரலில் அதற்கு சம்மதித்தனர்.

சிரிநாத இரண்டும் கெட்ட மனநிலைக்குள்ளாகி சிறிது நேரம் நின்றார் . அவருக்கு அவரது மாணவர்கள் நினைவுக்கு வந்தனர்.

மார்கழி மாதம் சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் . அடுத்ததாக அவருக்கு தொழிற்சங்க வேண்டுகோளின் நியாயம் ஞாபகம் வந்தது.

மந்திரி மார்களுக்கு ஐயாயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு செய்த அரசாங்கம் எங்களுக்கு முன்னூறு ரூபா தர முடியாதென்றது பொருட்களின் விலையும் நாளுக்கு நாள் உயர்ந்து செல்கின்றது .

சிறிநாத வேலை நிறுத்தத்தில் இணைய முடிவு செய்தார்.

"டிசம்பர் வரையில் நான் இற்த மாணவர்களுக்கு உதவி செய்வேன். வீட்டுக்கு அழைத்தாவது படிப்பிப்பேன்.

1980 ஜுலை வேலை நிறுத்தம் ஆரம்பமாகியது. சிறிநாதவின் பாடசாலையில் தலைமை ஆசிரியரைத்தவிர்ந்த ஏனைய ஆசிரியர்களெள்ளாம் வேலை நிறுத்தத்திற்கு விரும்பினர். ஆனாலும் சிறிநாத மாத்திரமே வேலை நிறுத்தம் செய்தார்.

"பிள்ளைகளே நான் இன்று வேலைக்கு வரமாட்டன். வேலை நிறுத்தம் செய்கீறன் . அரசாங்கம் எங்கள் வேண்டுகோளைத் தரும். அதன் பின்னர் நாங்கள் வேலைக்கு வருவோம். வேலைக்கு வருவது பிற்போவதாக தெரிந்தால் நீங்க எங்க வீட்டுக்கு வாங்க. நான் பரீட்சைக்கு உதவி செய்றன். பயப்பட வேண்டாம். இந்தச் சில நாட்களும் முன்னைய குறிப்புகளை வாசியுங்க."

பல மாணவர் கண்கள் நிரம்பி வழிந்வன.

ஸ்ட்ரைக் பண்றவங்கள சவப்பிட்டனிக்கு அனுப்புவதாக அமைச்சர் ஒருவர் கூறினார். நேற்று இரவு வானொலியில் சொன்னாங்க. வேலை நிறுத்தம் தோல்வி அடையுமென்று எங்கட அப்பா சொன்னார்." ஒரு மாணவர் கூறினார்.

"நானும் அதை கேட்டுக்கொண்டு இருந்தேன். அப்படி நடக்கப்போவதில்லை. பரீட்சை எழுத தேவையான அறிவில் இன்னும் பத்து வீதம் தான் உண்டு. அது கொஞ்சத்தையும் நான் இந்தப் பிள்ளைங்களை வீட்டுக்கு வரவழைத்தாவது சொல்லிக்கொடுகிறன்."

சிரிநாத வீட்டுக்குச் சென்றார். மூன்று மாதங்களாக வேலை கிடைக்குமென்று எதிர்பார்த்தனர். அரசாங்கம் முரண்பட்டது. மீண்டும் வேலைக்குப்போவது சாத்தியமில்லை என்று வேலை நிறுத்தக்கார ருக்குத் தெரிந்தது. சிரிநாதவும் அவரது பிள்ளைகளும் வங்கிச் சேமிப்பிலிருந்த ஆயிரத்து இருநூறு ரூபா பணத்தினாலேயே வாழ்ந்தனர். அதுவும் முடிந்து விட்டது.

அக் காலப்பகுதியில் சிரிநாத பிள்ளைகளை வீட்டுக்கழைத்து பாடம் சொல்லிக்கொடுத்தார். ஒரு மாணவன் சீனி, தேயிலை, கௌபி , பயறு என்பன கொண்டு வந்து கொடுத்தான்.

"இதெல்லாம் கொண்டு வராதீங்க" சிரிநாத அப் பிள்ளைகளுக்கு சொன்னான்.

அந்த மாணவர்கள் சிரநாதவுடன் உடன் பட்டனர். ஆனால் அவர்களின் பெற்றார் விடுவார்களா?

அரிசி, தேங்காய், பயறு போன்றவற்றை கொண்டு வந்து கொடுத்தனர்.

"கஷ்டப்படாதீங்க.... நான் நன்றாக வாழ்றன்." சிரிநாத பெற்றாரிடம் கூறினார்.

ஒரு நாள் மாணவர்கள் ஒரு யோசனையை முன் வைத்தனர்.

"சேர் நாங்க விகாரையின் பிக்குவிடம் அங்கு வகுப்பொன்றை வைப்பது பற்றிக் கதைத்தோம். எங்கட வகுப்பிலுள்ள எல்லோரும் வருவாங்க . அடுத்த ஊர் பாடசாலை மாணவர்களை சிலரும் கூட வர விருப்பம்

சிரிநாத அதற்கு விரும்பினார்.

சரி நான் வருகிறேன். சனி ஞாயிறில் அல்ல

"இல்லை சேர் திங்கள், புதன் ,வெள்ளி பிள்ளைகள் காசும் கொடுப்பாங்க"

"டியுஷன் வகுப்பா? நான் பிள்ளைகளிடம் காசு வேண்டிப் படிப்பிப்பதில்லை. எனக்கு உதவ வேண்டும் என்பதற்காக நீங்கள் கொண்டுவந்த யோசனை அல்லவா?

இந்தப்பிள்ளைகளுக்கு நன்றி. தேரருக்கும் நன்றி கூறியதாகச் சொல்லுங்க.''

"எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டோம். எல்லோரும் விரும்பிச் செய்யும் வேலை''

''வேண்டாம் ..திரும்ப அந்தக்கதையைச் சொல்ல வேண்டாம். வாழ்வதுநான் வேறொறு விடயம் யோசிக்கிறேன்.''

அதன் பின்னர் மாணவர்கள் அது பற்றி கதைக்கவில்லை.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் வெவ்வேறு முயற்சிகளில் இறங்கினர். சிலர் வீடு கட்டுமிடங்களுக்கு வேலைக்கு சென்றனர். சிலர் வியாபாரஸ் தலங்களுக்கு சேவகர்களாக சென்றனர். இன்னும் சிலர் நகரத்தில் ஒவ்வொரு இடங்களிளும் வெங்காயம், கிழங்கு குவியல் வைத்து விற்பனை செய்தனர்.சிரிநாதவின் நண்பர்களை சுனேதாஸ பாண்போறணையில் விறகு பிளக்கச்சென்றான்.

''நான் சந்தைக்குச்சென்று அரிசி விக்கிறேன். மணைவியின் ஊருக்குப் போய் நெல் கொஞ்சம் விலைக்கு வாங்கி குத்தி எடுக்கிறேன். சிரிநாத ஒரு முடிவுக்கு வந்தார். அவர் ஒரு தொகைப்பணம் கடனாகப் பெற்றார். ஸ்ரீயா வீர சிங்ஹ என்ற ஆசிரியையிடமிருந்துதான்.

ஹம்மாந்தொட்டை ஞாயிறு சந்தையில் ஒரு மூலையில் படங்கொன்றில் அரிசி குவித்த சிரிநாத கம்பியொன்றில் தராசை தொங்க விட்டு பார்த்துக்கொண்டிருந்தார். அவரது மணைவி குடை பிடித்த வண்ணம் இருந்தார்.

பழைய அரிசி வியாபாரிகளிடம் சென்று பலரும் அரிசி வாங்கினர். ஒரு சிலர் மட்டுமே சிரிநாதவிடம் வந்தனர். இருந்தும் இரண்டு மணி நேரத்தின் பின்னர் அதிகமானவர்கள் சிரிநாதவிடமே வந்தனர்.

''ஸேர் அரிசி விற்பதை எங்கள் பிள்ளைகள் அறிந்திருக்கிறார்கள். ஸேரிடம் அரிசி வாங்கும் படி சொன்னாங்க. சுருட்டுக் கடை சந்தியிலும் அந்த ஸிஸிர ஹோட்டல் அருகிலும் நின்று கொண்டு

வருபவர்களிடமெல்லாம் ஸேரிடம் அரிவி வாங்கும் படி சொல்றாங்க. 'அரிசி வாங்க வந்தவர்கள் கூறினர்."

ஆரிசி சொற்பமும் வேகமாக முடிந்து வருவது தெரிந்தது. மாணவர் இருவர் இரண்டு இளநீர் வெட்டிக் கொண்டு வந்தனர்.

"ஸேர்" என்றபடி அவர்கள் அவற்றை சிரிநாதவுக்கும் மனைவிக்கும் கொடுத்தனர்.

சிரிநாதவின் கண்கள் நிறைந்தன.

அவரால் பேச முடியவில்லை.

10

## ஒரு மணி நேரம் வேலை செய்த ஆசான்

அகங்கம சாரிபுத்ர வித்தியாலய உதவி ஆசிரியரான சிரிநாத ஒவ்வொரு நாளும் மாத்தறையிலிருந்து புகையிரதம் மூலமாக பாடசாலைக்கு வருவார். பிற்பகல் 1.30 க்கு பாடசாலை விட்டதும் புகைவண்டி வரும் வரை ஒரு மணிநேரம் புகையிரத நிலையத்தில் காத்திருக்க வேண்டி நேர்ந்தது. அவர் இது பற்றி அதிபர் சில்வாவிடம் எடுத்துக்கூறினார்.

“ மிஸ்டர் சிரிநாத பாடசாலையிலே பகலுணவு சாப்பிடுவதால் அந்த ஒரு மணிநேரத்தையும் பயனுள்ள விதத்தில் பிரயோகிப்போம். தவணைப்பரீட்சை நடாத்திய போதும் இப்பொழுது பிள்ளைகளை ஃபெயிலாக்குவதில்லை அல்லவா?......”

“ வருடாவருடம் பாஸ்பண்ணிக்கொண்டு வாராங்கள். சில மாணவர்கள் உரிய அறிவு இல்லாமலேயே மேலே வருகிறார்கள். அப்படியான பிள்ளைகள் முப்பது நாற்பது பேரை எனக்குத் தெரியும். ஏழாம் வகுப்பில் இருக்கிறார்கள். ஆனால் இரண்டாம் வகுப்பு அறிவு கூட இல்லை. எழுத முடியாது. வாசிக்க முடியாது.இப்படியான பிள்ளைகள் சிலரை நான் தேடித்தருகிறேன். மிஸ்டர் சிரிநாத இவங்களுக்கு உதவி செய்யுங்கோ” இவ்வாறு அதிபர் கூறினார்.

இரண்டு நாட்களின் பின்பு அவர் இந்த வகுப்பை ஆரம்பித்தார். முப்பதுபேர் அளவில் இருந்தனர். ஐந்தாம் ஆறாம் ஏழாம் வகுப்புக்களை சேர்ந்த பிள்ளைகளுக்கு வகுப்புக்குரிய புத்தகங்களை வாசிப்பது சிரமமாகவிருந்ததால் சொல்லட்டைகளைக் காட்டிக் கற்பிக்க வேண்டி நேர்ந்தது.

எழுத்துக்கற்பிக்கும் போது சிறிநாத இரண்டாம் வகுப்பு ஆசிரியராக மாறவேண்டியிருந்தது.

இந்தப்பிள்ளைகளெல்லாம் ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். தினமும் பாடசாலைக்கு வராமலிருப்பது கல்வியில் பின்னடைந்தமைக்கு ஒரு காரணமாகும்.

"நேற்று அப்பா கடலுக்குப் போய்வரும்போது நான்கு மணித்தியாலம் சுணங்கிவிட்டது. மற்றைய நாட்களில் நாங்கள் எழும்பும்போது அப்பா வந்திருப்பார்."

" நேற்று பத்துமணி பிந்தித்தான் தூங்கினன். அதுதான் ஸ்கூலுக்கு வரமுடியாமல் போயிற்று. அப்பா சுணங்கியதால் அம்மா பயந்துபோய்விட்டா."

பாடசாலை வராமை பற்றி விசாரிக்கும் போது இவ்வாறான பதில்களே கிட்டின.

பிள்ளைகளை அருகழைத்து.... கையைப் பிடித்து எழுதுவித்து..... ஒவ்வொரு எழுத்தாகக் கற்பித்ததனால் ஓரளவு முன்னேற்றத்தைக் காணமுடிந்தது. ஓரளவு முன்னேற்றம் கண்டபோது பிள்ளைகளுக்கிடையே படிக்கவேண்டுமென்ற ஆசையும் ஏற்பட்டது. அந்த ஊக்கத்தினால் பிள்ளைகள் முன்னே சென்றனர்.

சிறிநாத இதைக்கண்டார். அதிபர் சில்வா அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்.

'மிஸ்டர் சிறிநாதாவுக்கு தனிமை என்பதால் நானும் இன்று முதல் வருகிறேன். தரம் பதினொன்று மாணவர்கள் சிலர் இன்னக்கி வருவாங்க. நான் அவங்களுக்கு இலக்கியம் படிப்பிக்கிறேன்." அதிபர் சொன்னார்.

அவர் வேறொரு கட்டிடத்திலுள்ள வகுப்பறை யொன்றிலிருந்தது கவிதை விளங்கப்படுத்தும்விதம் சிறிநாதாவுக்கு அவ்வப்போது கேட்டது.

புகைவண்டி வரும் நேரம் நெருங்கும்போது அவர் பிள்ளைகளிடம் விடைபெற்றுவிடுவார்.

அவர் விரைவாக புகையிரத நிலையத்திற்குச் செல்வார். போகும் பாதையருகே இளநீர் வியாபாரியொருவர் ஒரு காயை வெட்டி சிறிநாதவுக்கு நீட்டுவார்.

" ஸேர் இந்த இளநீர் உங்களுக்கு" அவன் சொல்வான்.

"ஐயோ வேண்டாம். நன்றி. தெரியும் தானே ரெயில் கேட் மூடியிருக்காங்க. டிரயின் வந்துவிடும்." சிறிநாத நடந்தபடியே சொன்னார்.

இருந்தாலும் சிறிநாதவுக்கு அந்த இளநீரை புகைவண்டியினுள்ளே குடிக்க வேண்டி நேரும்.

"ஸேர் மைகல் என்ற மகன்தான். அவன் இப்போ புத்தகம் படிக்யிறான். நீங்கள் தான் அவனைக் கரை சேர்த்தது." இளநீர் வியாபாரி கூறினான்.

அடுத்தநாள் சிறிநாத " இளநீர் தரவேண்டாமென்று அப்பாவுக்குச் சொல்லு" என்று மைக்கலிடம் சொன்னார்.

பலவருடங்களுக்குப் பின்னர் ஆசிரிய சேவையிலிருந்து விலகிய சிறிநாத பத்திரிகை நிறுவனமொன்றில் இணைந்தார். அவர் எழுதிய நூலொன்றின் வெளியீட்டு விழா அந்த பாடசாலைக்கு அருகிலுள்ள விகாரையொன்றில் நடைபெற்றது.

அந்த விழாவுக்கு பிரதேச பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.வி.எஸ்.த. சில்வா அவர்களும் வந்திருந்தார்.

சிறிநாத அந்த மந்திரிக்கும் புத்தகமொன்றை கையளித்தார். அவர் எழுந்து சிறிநாதாவை கட்டியணைத்துக் கொண்டார்.

"சிறிநாத அந்தப் பாடசாலைக்கு மாற்றம் பெற்றுவரும் போது அந்த பாடசாலையைச் சேர்ந்த ஒருவர் வந்து உங்களை அங்கு வரவழைக்கவேண்டாம் என்றார். அரசாங்கத்திற்கு எதிராக எழுதுகின்ற ஒருவர் என்றும் சொன்னார். அவர் வந்து என்னசெய்கிறார் என்று பார்ப்போம். என்று நான் சொன்னேன். பின்னர் அதை வந்து என்னிடம் கூறுங்கள் என்றேன். காலப்போக்கில் அடுத்த ஆசிரியர்களைவிட நீங்கள் ஒரு மணிநேரம் மேலதிகமாக கற்பிப்பதாய் கேள்விப்பட்டேன்.

" உங்களைப் பற்றிச் சொன்ன அந்த நபரிடம் *சிரிநாதவைப்பற்றி இப்பொழுது* என்ன சொல்லப்போகிறீர்கள் என்று கேட்டேன். ஆள் மௌனமாக இருந்துவிட்டார்."

சிலநாட்களின் பின்னர் அந்த மந்திரி இனந்தெரியாத துப்பாக்கிக்காரர்களால் கொல்லப்பட்டார்.

போயா தினமொன்றில் சீலம் அனுஷ்டித்துவிட்டு பன்சாலையிலிருந்து வீட்டுக்கு வரும்போதே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

"பிள்ளைகளே ஏன் என்னைக் கொல்றீங்க?"
அவர் துப்பாக்கிதாரிகளிடம் கேட்டதாக பின்னர் சிரிநாத கேள்விப்பட்டார்.

# மாணவனிடம் நிலக்கடலைப் பொதிகள்

ஹம்பாந்தோட்டை ஞாயிறு சந்தையில் அரிசி விற்பதன் மூலம் புது வாழ்வை ஆரம்பித்த சிரிநாதவுக்கு அம்பலாந்தோட்டை தெரிபுத்த வித்தியாலய மாணவனொருவன் இன்னொரு யோசனையை முன்வைத்தான். சிலகாலத்திற்கு முன்பு அந்தப் பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு மாலைவேளையில் சிங்களம் கற்பித்தார். சிரிநாத ஒரு பட்டதாரி அல்லாத போதும் அந்தப் பாடசாலை சிங்கள ஆசிரியர் கி. ஜயவீர அவர்கள் அந்த வகுப்புக்கு அவரை அழைத்துச் சென்றார். அங்கு இனங்கண்டதொரு மாணவனே இந்த யோசனையை முன்வைத்தான்.

"ஜுலை வேலை நிறுத்தம் காரணமாக ஸேருக்கு தொழில் இல்லாமல் போனதை நாங்கள் கேள்விப்பட்டோம். ஞாயிற்றுக் கிழமைகளில் ஹம்பாந்தோட்டைச் சந்தையில் அரிசிவிற்பதும் எங்களுக்குத் தெரியும். அதைவிட கிராமங்களுக்குச் சென்று நிலக்கடலை,கௌபி,எள்ளு போன்றவற்றை சேகரித்து விற்பது நல்லது. ஸேருக்கு உதவிசெய்வது பற்றி எங்கள் வகுப்பு மாணவர்கள் பலரும் கூடி யோசித்தோம்."

"தம்பிக்கு நன்றி. நான் இப்பொழுது வீட்டிலும் அரிசி விற்கிறேன். எனது மாணவர்கள் அவர்களது பெற்றோரிடம், எங்கள் வீட்டுக்கு வந்து அரிசி வேண்டுமாறு கூறியுள்ளனர். ஹம்பாந்தோட்டை உப்பளம் பக்கமிருந்து மூன்று மைல் வந்து, டவுனிலிருந்து இன்றும் அரைமைல்தாண்டி அவர்களது அம்மா,அப்பாமார் எங்கள் வீட்டுக்கு வருகிறார்கள். எங்கட பிள்ளைகள் உங்களிடம்

வாங்கச்சொன்னாங்க என்று என்னிடம் வாங்கிச் செல்கிறார்கள். ஒருவாறு வாழ்ந்து கொள்ள அந்த வருமானம் போதும். கிராமங்களுக்குப் போய் சாமான் சேர்க்க எனக்குப் பழக்கமில்லையே ....''சிறிநாத சொன்னார்.

''அப்படிச் சொல்லாதீங்க ஸேர் சீக்கிரம் பழகிக் கொள்வீங்க. முன்பு பழகித்தானா இப்ப சந்தையில அரிசி விற்கிறீங்க? ஸேருக்கு நாங்க ஒரு கைடிரக்டர் தேடித்தருவோம். தாராசொன்றும் சனல் பைகள் சிலவும் வேணும். கொஞ்சம் காசு தேடித்தருவோம். சேகரிக்கும் பொருட்களை கொழும்புக்கு கொண்டு போகும் முதலாளிமார் ஹம்பாந்தோட்டையில் இருக்கிறாங்கதானே. அவங்களுக்கு சமான்கொடுத்து உடனடியாகவே காசெடுக்கலாம்.

சிறிநாதவின் மனைவி ஆசிரியரதும் மாணவர்களதும் உரையாடலுக்கு காது கொடுத்துக் கொண்டிருந்தார். அவளது கண்கள் நிறைந்துவிட்டன.

இந்தப்பிள்ளைகள் தனது ஆசிரியர் மீது காட்டும் அன்பை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அரிசி வியாபாரம் அந்தப்பிள்ளைகளின் அன்பினால்தான் அமோகமாக நடந்தது. இப்பொழுது அந்த மாணவர் புது ஆலோசனையொன்றை முன் வைத்துள்ளனர். சிறிநாதவின் முகம்கூட அழுவதற்குத்தயாரான அடையாளத்தை வெளிப்படுத்தியது.

''சிறி இந்தப் பிள்ளைங்க சொல்றத நாங்க செய்வோம்.'' அவள் சொன்னாள். சிறிநாத அமைதியாக நின்றான்.

சாக்குப் பைகளோடும் தராசுடனும் கை டிரக்டரில் ஏறி, சிறிநாத ஒரு கிராமத்துக்குச் சென்றார். வேலை நிறுத்தம் செய்த தச்சுவேலை ஆசிரியர் ரணவீர அவர்களும் ஹம்பாந்தோட்டை கச்சேரி லிகிதர் மெல்வின் ஐயாவும் அவரோடு இணைந்து கொண்டனர்.

''சாமான் சாக்கை நான் தூக்கிறன்'' தச்சு ஆசிரியர் கூறினார்.

ஒரு முச்சந்தியில் சிறிநாதவின் மாணவர் ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தார். அவன் தனது ஆசிரியரை

வீட்டுக்கு அழைத்துச்சென்றான். மெலிந்த பெண்ணொருத்தி முற்றத்திற்கு வந்தாள்.

" நிலக்கடலை கொஞ்சத்தையும் ஸேருக்கு விற்கச் சொல்லி மகன் சொல்றான். ஸேருக்கு தெரியாமலிருக்கலாம்" நாங்கள் சேனை செய்ய ஆரம்பித்ததிலிருந்து எல்பட் முதலாளியின் கடையால் கடனுக்கு சமான் வேண்டியே வாழ்ந்து வருகிறோம். நாங்கள் கடனை பணமாக கொடுப்பதில்லை. சேனை அறுவடை மூலமே கொடுக்கிறோம். இந்த முறை நிலக்கடலை நன்றாக விளைந்திருக்கு. சாக்கில் நிறைத்தபடி வீட்டினுள்ளே இருக்கு எல்பட் முதலாளியின் வேன்வந்தால் கொடுப்போம். இனி ஸேருக்கு இரண்டு சாக்குத்தான் தரலாம். முதலாளிக்குத் தெரிந்தால் ஏசுவார். இந்த இரண்டு சாக்கயும் கொண்டு போங்க. உங்கட வெற்றுக் சாக்கு இரண்டை எங்களுக்குத் தாருங்கோ"

சிரிநாத தனது மாணவனை முற்றத்தின் ஓர் ஓரமாக அழைத்துச் சென்றார்.

" எங்களுக்கு சாமான் தந்தால் எல்பட் முதலாளி ஏசுவார் அல்லவா? நாங்கள் போகிறோம்."

"ஸேருக்கு இரண்டு சாக்கு ஒதுக்கி இருக்கிறோம். அதைகொண்டு போங்க. அதற்கு காசு வேண்டாமென்று நேற்றிரவு அப்பா சொன்னார்."

"பராயில்ல தம்பி. உங்களுக்கு இதனால பிரச்சின வரும். நாங்க போறம்."

ஆந்த மாணவனும் அவனது தாயும் டிரக்டரைப் போகவிடவில்லை.

"இதைக் கொண்டு போகணும். இதை நாங்க ஸேருக்கு ஒதுக்கியிருக்கிறோம். கொண்டுபோகா விட்டா எங்களுக்கு இவனால தப்பமுடியாமல் போகும்." தாய் சொன்னாள்.

"தம்பி இந்த சாக்கில் நிலக்கடலை எவ்வளவிருக்கு?"

"நாற்பது கிலோ"

மெல்வின் சிரிநாதவிடம் ஏதோ சொன்னார்.

"சரி நாங்க இதை எடுக்கிறம்."

இருநிலக்கடலைச் சாக்குகளும் டிரக்டரில் ஏற்றப்பட்டன. ரணவீரவும் மெல்வினும் சிரிநாதவும் டிரக்டரில் ஏறிக்கொண்டனர்.

அது புறப்படும்போது சிரிநாத சுருட்டிய பணநோட்டை மாணவனின் சேட்பக்கற்றில் போட்டு விட்டார்.

“ஐயோ ஸேர் வேண்டாம்” என்றபடி மாணவன் டிரக்டரின் பின்னால் ஓடிவந்தான். இருந்தும் அவனைவிட வேகமாக டிரக்டர் சென்றது. தாயும் மகனும் முற்றத்திலிருந்து பார்த்துக் கொண்டிருப்பது சிரிநாதவுக்குத் தெரிந்தது.

# இரண்டில் ராகு

"நடக்கிற விஷயங்கள என்னால பொருத்துக் கொண்டிருக்க முடியாது." பியஸேன கஹதகமகே சிரிநாதவிடம் கூறினார்.

சிரிநாத, கஹதகமகேயிடன் உஹன வலகம்புர பாடசாலையில் கற்பித்தார்.அவர் கஹதகமகேயின் வீட்டில்தான் தங்கியிருந்தார்.

கஹதகமகேயின் நண்பர்கள் "க.கா" என்ற சுருக்கப்பெயரால் அழைத்தனர். அந்தப் பெயருக்கு பொருத்தமான வகையில் அவர் நடந்துகொண்டார். அவர் அநீதிக்கெதிரான போராட்டக்காரனாக மாறினார். ஆசிரியராக, ஆசிரியர் சங்கத் தலைவராக, கம்யூனிஸக் கட்சியின் பிராந்தியத்தலைவராக, பத்திரிகையாளராக மக்கள் தொடர்பான விமர்சகனாக அவர் பொதுமக்கள் மத்தியில் பிரபலம் பெற்றிருந்தார்.

சிரிநாத, கஹதமகேயின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு நடந்தே சென்றார். சேனநாயக்கா சமுத்திரத்திலிருந்து வெட்டுவாய்க்கால் ஓரமாக அவர்கள் பாடசாலை சம்பந்தமான துயரச்செய்திகளை கலந்துரையாடிய படியே சென்றனர்.

"மிகவும் சிறப்பாகவிருந்த பாடசாலை இது. இந்த அதிபரும் நன்றாக வேலை செய்த காலமொன்றும் இருந்தது. நானும் அவருடைய ஒரு மாணவன். இருந்தாலும் இப்போது எல்லாம் மாறிப்போயிற்று. அதிபருக்கு பணம் பெருக்கெடுத்து வர ஆரம்பித்தது. பணத்தோடு போத்தலும் வந்தது.

போத்தல்களுடன் பெரிய பெரிய முதலாளிமாரும் பெரிய பெரிய அதிகாரிகளும் வரத்தொடங்கினர். கல்ஓயா மிடயாவத்தையிலுள்ள மிகச்சிறந்த சோதிடன் என்ற பெயர் அவருக்கு கிட்டியது. மெல்ல மெல்ல அவர் மாற்றமடைந்தார். நன்றாகக் கற்பிக்கக்கூடிய ஒருவர். கற்பித்தலை அடுத்தவர்களிடம் ஒப்படைத்து விட்டு அவர் சோதிடம் செய்ய ஆரம்பித்தார். அவர் க.பொ.த. வகுப்புக்கு இலக்கியம் கற்பித்தவர்...

பார்த்தீர்களா சென்ற மாதம் சிறிநாதவுக்கு இலக்கியப் பாடத்தை ஒப்படைத்த விதம்.....

“அவருடைய பழைய இக்கியத்தால் பயனில்லை. சிறிநாதவின் புதிய இலக்கியத்துக்குத்தான் பிள்ளைகள் விருப்பமென்று சொல்லி அதிபர், சிறிநாதவுக்கு இலக்கிய பாடத்தை கொடுத்துத் தப்பிக்கொண்டார். இப்பொழுது முழுக்காலத்தையும் பலாபலன் பார்ப்பதிலேயே செலவிட்டார். அவர் என்னுடைய ஆசிரியரும்கூட. அக்காலத்தில் எவ்வளவு அற்புதமாகக் கற்பித்தார். பாடசாலையை எவ்வளவு நன்றாக வைத்திருந்தார். இப்பொழுது சோதிடம் பாரப்பது மட்டும்தான்.”

“ஏன் நீர் இதற்கெதிராக குரலெலுப்புவதில்லையென்று எல்லோரும் கேட்கிறார்கள். எனக்கு கற்பித்த காலத்தில் நன்றாக இயங்கிய ஒருவர். இதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது.”

பாடசாலைக்குச் செல்லும் வழியில் க.கா இவ்வாறாக தனது மனக்கொதிப்பை கக்கினார்.

அன்று அவருடைய அலுவலகம் சோதிடம் பார்க்கவந்தவர்களால் நிரம்பிவழிந்தது.

அதிகாலையிலிருந்து தூரக்கிராமங்களிலிருந்து வந்த ஆண்களும் பெண்களும் பாடசாலைத்தோட்ட வேம்பு மரத்தடியில் குழுமி நின்றனர். பிரதி அதிபரின் தலைமையில் காலை ஆராதனை ஆரம்பித்தது.பிள்ளைகள் வழிபாட்டை முடித்துக்கொண்டு மீண்டும் வகுப்பறைக்குச் சென்ற பின் அதிபர் தனது காரியாலய அறைக்கு வருவார். கூடவே மரத்தடியில் குழுமிய ஆண்கள், பெண்களெல்லாம் முட்டிமோதிக்கொண்டு அந்த அறைக்குள் பாய்வார்கள்.

அவருடைய மேசை வெற்றிலை,புகையிலை,பிஸ்கட்,சிகரட் பெட்டிகளால் நிரம்பத்தொடங்கும்.

பலரின் மத்தியிலேயே அவரிருந்தார்.சோதிடம் பற்றியும் தமது பிள்ளைகள் பற்றியும் அறிந்து கொள்ளவருபவர்கள் பல மணிநேரம் கால்கடுக்க காத்திருக்கக்கூடிய திறமை புதுமையானதுதான்.

"எனக்கு வேர்க்கிறது. இங்க பின்னால இருக்கிறவங்க அந்த மரத்தடிக்குப் போய் வாங்க" அவர் பலாபலன் கூறியபடி இடையிடையே போடும் சத்தம் தூரத்திற்குக் கேட்டது. ஆனாலும் சனங்கள் மரத்தடிக்குப் போவதில்லை. அடுத்தவர்களின் பலாபலனை அறிந்து கொள்வது அவர்களுக்கு விருப்பம்.

சில வகுப்புகளில் ஆசிரியர்கள் இல்லை. அந்த வகுப்பு மாணவர்கள் முற்றத்திற்கு இறங்குவர். ஓடியாடித் திரிவர். சத்தமிட்டபடி சண்டை பிடிப்பர். காயப்படுத்திக் கொள்வார்கள். சில பிள்ளைகள் இடைவேளையின் போது பிஸ்கட் சாப்பிட்டு விட்டு வீட்டுக்குச் செல்வர்.

சிறிநாத இது பற்றி பிரதி அதிபரோடு கதைத்தார். எந்தப் பயனுமில்லை.

"இத அதிபருக்குத்தான் சொல்லணும். என்னால் ஒன்றும் செய்ய முடியாது. பெரிய அதிகாரிகள் அவருக்கு ஆதரவாக இருக்கிறாங்க. அவர்களின் கிரக நிலையை இலவசமாக பார்த்துக் கொடுப்பார். கிரகக் கோளாறுகளிலிருந்து பாதுகாப்புச் செய்வார். பாடசாலை பிள்ளைகள் எல்லோருக்கும் சனிதோஷம். என்னால் எதுவும் செய்ய முடியாது."

அன்று இடைவேளைக்கு முன்பு கேற்றடியில் மோட்டார் வாகனமொன்று நின்றது. பிள்ளைகள் கேற்றடிக்கு ஓடினார்கள். வாகனத்தில் இறங்கிய ஒரு பெரியவர் பாடசாலைத் தோட்டமெங்கும் சிதறிநின்ற மாணவர்களை கவனித்தபடி நின்றார். அவரருகே வந்த பிள்ளைகளோடு கதைத்தனர்.

"இது இடைவேளையா?"

"இல்லை" பிள்ளைகள் கூறினர்.

" அப்படியென்றால் நீங்கள் ஏன் வெளியே இருக்கீங்க?"

"எங்களுக்கு படிப்பிப்பதில்லை"
"ஏன்?"
"எங்க ரீச்சர் குழந்தை கிடைக்க போயிருக்கா"
"நீங்க எந்த வகுப்பு?"
"மூன்றாம் வகுப்பு"
அவர் இன்னொரு பிள்ளையிடம் கேட்டார்.
"நீங்க எந்த வகுப்பு ?"
"இரண்டாம் வகுப்பு?
"இரண்டாம் வகுப்புக்கு படிப்பிக்க யாருமில்லயா?"
அந்த பையன் பதிலளிக்கவில்லை.
"அந்த ஆசிரியர் இன்று வந்துள்ளாரா?"
"வந்திருக்கார்" வேறொரு பிள்ளை பதில் சொன்னான்.

அந்தப் பெரியவர் அதிபரின் அறைக்குள் புகுந்தார். பெரியதொரு கூட்டம் அங்கு நெருங்குண்டனர். அதிபரின் முகம் தெரியாத நிலையில் அவர் சனைத்திற்கிடையால் போய் அதிபரின் மேசையை நெருங்கினார்.

அதிபர் பலாபலன் பார்ப்பதில் கண்களைக் குவித்திருந்தார்.

"இரண்டாவதில் என்ன இருக்கு?" அவர் உயர் தொனியில்கேட்டார்.

"இரண்டாவதில் ராகு" அதிபர் தலையை உயர்த்தாமல் கூறினார்.

"ராகுவும் இங்குதானே வேலை?" அவர் கேட்டார்.
அதிபர் தலை உயர்த்திப்பார்த்தார்.

"ஐயையோ இது எங்கள் "
அவரது கையிலிருந்த சாதகக் குறிப்பு கீழே விழுந்தது. அவர் எழுந்தார்.

"எனக்குத் தெரியாது ஸேர் வந்த விஷயம்? இரண்டாம் வகுப்பில் படிப்பிப்பது சிரியலதா." அதிபர் நடுங்கிய குரலில் கூறினார். அந்தப் பெரியவர் வட்டாரக்கல்வி அதிகாரி. சென்ற வாரம் தான் அவர் இப்பகுதிக்கு வந்தார். அவருடைய கிரக நிலையை பார்ப்பதற்கு அதிபருக்கு வாய்ப்புக் கிட்டவில்லை.

"நீங்களெல்லாம் வெளியே போங்க" முட்டிக கொண்டிருந்தவர்களிடம் அதிபர் சொன்னார்.

"நீர் இந்த மனிதர்களின் தோஷங்களை தூரமாக்க கிரக நிலை சரிப்படுத்துகிறார். அந்தப் பிள்ளைகளுக்கு புதிதாக தோஷம் ஏற்படுத்துகிறீர்." வட்டாரக்கல்வி அதிகாரி கூறினார்.

பாடசாலை விட்டு வீட்டுக்குச் செல்லும்போது "க-கா அந்த அதிகாரி பாடசாலைக்கு வந்தது.க-க-கா கொடுத்த ரகசியத் தகவலால்தானே" என்று சிரிநாத கேட்டார்.

அவர் பதில் சொல்லவில்லை.

அந்த அதிகாரியைவிட மிகவும் உயரத்திலிருந்த அதிகாரி தண்டனையிலிருந்து அதிபரைக்காப்பாற்றினார்.

தொடர்ந்தும் அதே பாடசாலையில் கிரகங்களோடு புகழின் பிரகாசத்தோடிருக்க அதிபரால் முடிந்தது.

## பாதணி திருத்துபவனின் பிள்ளை

சிரிநாதவிடம் ஒரேயொரு சப்பாத்து சோடியும் ஒரேயொரு செருப்புச் சோடியும் மாத்திரமே இருந்தன. சப்பாத்தின் ஒரு பக்கம் கழன்றபோது அவர் பாடசாலைக்கருகே வாழும் சாமலின் வீட்டுக்கேறி "சாமல் அண்ணா,எனது சப்பாத்து கழன்றுவிட்டது. இதை தைத்துத் தருவீங்களா?" என்று கேட்டார்.

சாமல் சப்பாத்தொன்றை தைத்தபடி தலையை உயர்த்திப் பார்த்தார்.

"நாளை காலையில் தந்தால் போதுமா?" சாமல் கேட்டான்.

"இதை எனக்கு இப்போது தைத்துத் தரவேணும். களிசான் அணிந்து கொண்டு சப்பாத்து இல்லாமால் எப்படி பாதையில் செல்லமுடியுமா?"

"ஐயா வேறொரு சப்பாத்து அணிந்து கொண்டு இதைக் கையில் கொண்டுவந்திருக்கலாமே

சிரிநாத மௌனமானார்.

வீட்டுக்குள் குசுகுசுப்பது கேட்டது.

“இங்க வாங்க” பெண்குரலொன்று சாமல் எழுந்து வீட்னுள்ளே சென்றான். மீண்டும் வந்தான்.

“நல்லது ஐயா அந்தக் கதிரையில் அமர்ந்திருங்களன். நான் சீக்கிரமா தைத்துத் தாரன்”

சாமல் தைத்துக் கொண்டிருந்ததை ஒரு பக்கமாக வைத்துவிட்டு, சிரிநாதவின் சப்பாத்தை கையிலெடுத்தான்.
“ஸேருக்கு அவசரம் தானே நான் இதனை ஒட்டித் தருகிறேன். பிறகொரு நேரத்தில் தைத்துத்தாரன்.

சாமலின் மாற்றத்தால் சிரிநாத வியப்படைந்தார்

“ ஸேர் நீங்க இந்தப் பாடசாலையில் வேலை செய்கிற விஷயம் எனக்கு இப்போது தான் தெரிந்தது.

“நான் மாத்தறைப்பக்கம் ஹக்மன......”

“ நீண்ட தூரத்திலிருந்தல்லவா வந்திருக்கீங்க. ஆனால் நல்ல பாடசாலை ஒன்றுக்குத்தான் வந்திருக்கீங்க. இந்தப் பிரதேசத்திலுள்ள சிறந்த பாடசாலை அல்லவா?”

சாமல் கதைத்தபடியே சப்பாத்து வேலையை முடித்தான்.

சிறிய பிள்ளையொன்று கதவிடையால் எட்டிப் பார்த்துப் பார்த்துச் சிரிப்பது சிரநாதவுக்குத் தெரிந்தது.

“அது என்ற பிள்ள” சாமல் சொன்னான்.
சிரிநாத சப்பாத்தை அணிந்து கொண்டு தனது பையில் கைவிட்டார்.

“ வேண்டாம் வேண்டாம். அதுக்கு ஸேரிடம் காசுகொடுக்க முடியாது.” சாமல் சொன்னான்.

இருந்தாலும் சிரிநாத பத்துரூபா சாமலுக்குக் கொடுத்தார். அவன் அதனை எடுக்கவில்லை.

ஒரு வாரம் கழியுமுன்பு சிரிநாதவுக்கு மீண்டும் சாமலை சந்திக்க வேண்டி நேர்ந்தது. அன்று அவர் கால்களில் செருப்பணிந்து,அறுந்த சப்பாத்தை கையிலெடுத்துக் கொண்டே சென்றார்.

“ஒட்டிச் சரிவராது. இதைத்தைத்துத் தாருங்க” சிரிநாத சாமலுக்குச் சொன்னார்.

“ ஸேர் அமர்ந்திருங்க .....இதைத் தைத்துத் தர” சாமல் சப்பாத்தை கையிலெடுத்தபடி கூறினார்.

சிறிய கத்திரி,நூல்பந்து என்பவற்றை பல கைப்பெட்டியிலிருந்து வெளியெடுத்த சாமல் வேலையை ஆரம்பித்தான்.

சாமலின் மனைவி அருகிருந்த கடையொன்றால் மென்பான போத்தலொன்று கொண்டுவந்தாள். அவள் கோப்பை ஒன்றுடன் அதனை சிரிநாதவுக்குக் கொடுத்தாள். சின்னப்பிள்ளை அந்த போத்தலையே பார்த்துக்கொண்டிருந்தது. அவளது கையில் அரிச்சுவடிப் புத்தகமொன்று இருந்தது.

“ஏன் இது?” சிரிநாத கேட்டார்.

“பரவாயில்ல ஸேர். ஒரு கோப்பை குடியுங்களேன்.” சாமல் சொன்னான்.

சிரிநாத ஒருகோப்பை பானம் அருந்தினார். சாமலின் மனைவி போத்தலை வீட்டுனுள்ளே கொண்டு செல்கையில் பிள்ளை அவளது பின்னால் சென்றது.ஒருகோப்பை நிறைய பானத்தோடு வெளியே வந்தது.

“இனியென்றால் சாப்பாத்து ஒன்றுமாகாது” என்றவாறு சாமல் சப்பாத்தை சிரிநாதவிடம் கொடுத்தான்.

“ஸேர், ஸேருக்கு நாங்க விடுதிக்கு வந்து சொல்லத்தான் இருந்தோம்.” மனைவி ஏதோ சொல்ல ஆரம்பித்தாள்.

“அதென்ன?”

“இது எங்கள் பிள்ளை அடுத்த வருடம் பாடசாலைக்கு போறான்.இந்த தேசிய பாடசாலையில் சேர்க்க விண்ணப்பித்திருக்கோம்.” அவள் கூறினாள்.

“ ஓம் ஸேர் பாடசாலையிலிருந்து எங்கள் வீட்டுக்கு ஐநூறு அடி கூட இல்லை. தூர அடிப்படையில் எங்க பிள்ளைதான் அதிக புள்ளி எடுக்கும். கிராம சேவகரும் அப்படித்தான் சொன்னார். இந்தப் பிள்ளையை நிச்சியமாக எடுப்பார்களென்றும் சொன்னார்.”

சாமலும் கதையில் இணைந்தார்.

''புண்ணியம் கிடைக்கும் ஸேர். கெட்டிக்காரப் பிள்ளை ஸேர். அரிச்சுவடிப்புத்தகத்தில் ஏழெட்டுப்பக்கம் வாசிக்க முடியும். பிள்ள இங்க வா. ஸேருக்கு வாசித்துக் காட்டு.''

பிள்ளை புத்தகத்தோடு ஓடி வந்தது.

''ஆனா ஆவன்னா......ஈனா ஈயென்னா......ஊனா ஊவன்னா'' பிள்ளை வாசிக்கத்தொடங்கியது.

''பிள்ளைக்கு ஒன்று முதல் பன்னிரண்டு வரை எண்ணவும் முடியும்'' தாய் சொன்னாள்.

''பிள்ளை இலக்கம் சொல்ல ஆரம்பித்தது.

''ஐயோ ஸேர், பிரின்ஸிபல் ஸேரிடம் சொல்லி இந்தப்பிள்ளைய ஸ்கூலுக்கு போட்டுத்தாங்க.''

சிரிநாத எழுந்தார். அவரது தலையில் பெரும் சுமை தெரிந்தது.

''என்னால் வாக்களிக்க முடியாது. நான் முயற்சிக்கிறன்'' என்றவாறு சிரிநாத இருபது ரூபாவை கதிரையில் வைத்துவிட்டு எழுந்தார்.

சாமலும் உடனே எழுந்து இருபது ரூபாவையும் சிரிநாதவின் களிசான் சாக்கில் திணித்தான். சிரிநாத அதைக் கீழே போட்டார்.

''சாமல் அண்ணனின் உழைப்பை சாமல் அண்ணன் எடுக்கணும்.'' என்றவாறு வேக அடி வைத்து பாதைக்கிறங் கிச் சென்றார்.

அந்த பிராந்தியத்தில் பெரிய பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்க்க பெற்றாரிடையே பெரும் போட்டி நடக்கும். ஐம்பது அறுபது கிலோமீற்றர் தொலைவில் உள்ளவர்களும் அப்பாடசாலைக்கு அருகாமையிலுள்ள வீடுகளின் குடும்பப் பட்டியலிலும் வாக்காளர் பதிவேட்டிலும் பிள்ளைகள் பிறக்க முன்பே பெயர்களை பதிந்துவிடுவார்கள்.

சாமலின் பரம்பரை பாடசாலையிலிருந்து ஐநூறு அடித் தூரம் இல்லாத வீடுகளிலேயே வாழ்ந்தனர். சாமலின் வீடு பாடசாலைக்கு மிகவும் நெருக்கமானது. தூர அடிப்படையில் சாமலின் பிள்ளைக்குதான் அதிக புள்ளி கிட்டும். சிரிநாத

பாடசாலை எழுதுநர் மூலமாக பிள்ளைகளின் விண்ணப்பப்படிவங்களைப் பார்த்தார். சாமலின் பிள்ளைக்கு பாடசாலையிலிருந்துள்ள தூரம் 510 அடி. அடுத்தவர்கள் ஏழெட்டாயிரம் அடி தொலைவைச் சேர்ந்தவர்கள்.

சிரிநாத அதிபரைச் சந்தித்தார்.

"மிஸ்டர் சிரிநாத நீங்க என்ன சொல்றீங்க? பாடசாலையின் கௌரவத்தைப் பாதுகாக்கும் விதமாக நாங்க நடக்கவேணுமென்று உங்களுக்கு நன்றாகத் தெரியும்தானே. பிள்ளைகள் சேர்க்கும் போது சப்பாத்து தைப்பவர்களின் பிள்ளைகளைச் சேர்க்க முடியாது. அவர்கள் எப்படி இப்பாடசாலையின் அபிவிருத்திக்கு உதவ முடியும். தெரியும்தானே சென்ற வருடம் சேர்ந்த பிள்ளைதான் நீச்சல் தடாகம் செய்ய உதவி வழங்கினார்கள். விளங்குதா?" அதிபர் சொன்னார்.

" இப்பிள்ளை பாடசாலையிலிருந்து 500 அடி தூரம். இவ்வளவு அருகிலுள்ள பிள்ளைகள் வேறுயாருமில்லை" சிரிநாத சொன்னார்.

அதிபர் வாய்விட்டுச் சிரித்தார்.

அந்தக் கதையாலும் பலன் கிட்டவில்லை.

சிரிநாத தனது வகுப்பறைக்குச் சென்றார்.

அதிபர் ஐந்து வருடங்களுக்கு முன்பு சிறியதொரு வீட்டிலேயே வாழ்ந்தார். அவரது தகப்பன் ஒரு ஏழை விவசாயி. சயரோகம் தொற்றி இரண்டு வருடங்களுக்கு முன்பு அவர் இறந்தார்.

இப்பொழுது அதிபர் ஒரு மாளிகையில் வாழ்கிறார். மும்மாடி வீடு. அரை ஏக்கர் நிலம். வீட்டுத்தோட்டம் ஒரு பூஞ்சோலை அவரது மகன் இங்கிலாந்தில் படிக்கிறார்.

விற்பனை செய்யக்கூடியளவுக்கு குளிர்சாதனப்பெட்டி, மின்விசிறி, சலவை இயந்திரம், பித்தளை விளக்கு என்பன அவருக்கு டிசம்பர் மாதத்தில் கிடைக்கும்.

சாதாரணதரம், உயர்தர வகுப்பு ஆசிரியர்களுக்கு அதிபரிடம் உயர்ந்த கவனிப்பு கிட்டும்.

"இந்தப் பிராந்தியத்தில் உயர்ந்த பெறுபேறுதான் எனக்குத் தேவை" அவர் இப்படி நிதமும் சொல்வார்.

பெறுபேறு சிறந்தால் பாடசாலைக்கு புகழ் கிட்டும். அதனால் பெற்றார்கள் தங்களது பிள்ளைகளைச் சேர்த்துவிட போட்டிப் போடுவர்.

சாமல் நெஸ்டமோல்ட் பேணியொன்றுடன் அதிபர் வீட்டுக்குச் சென்றபோது "நான் லஞ்சம் வாங்கும் ஆளல்ல. தகுதியிருந்தால் பிள்ளையை சேர்த்துக்கொள்வேன்" என்று அதிபர் சத்தமிட்டதாக சிரிநாத கேள்விப்பட்டார்.

சிரிநாதவுக்கு ஜனவரி மாதத்தில் ஒரு நாள் சாமலின் மனைவியையும் மகளையும் காணக் கிடைத்தது. நகரத்தில் ஓர் எல்லையில், ஒழுங்கை ஒன்றிலுள்ள பாடசாலைக்கு தனது பிள்ளையோடு சென்ற அவள், சிரிநாதவைக் கண்டு மறுபக்கம் பார்த்துக்கொண்டாள்.

# 13. பனிஸ் மதில்

விளையாட்டுத் திடல் தவிர்ந்த பாடசாலையின் முழுத்தோட்டமும் மரக்கறி உற்பத்திக்காய் ஒதுக்கப்படிருந்தது. தோட்ட எல்லையில் வாழைப் பற்றைகள் காணப்பட்டன. அதனருகே கொச்சிமிளகாய்ச் செடிகள் செழிப்பாக வளர்ந்திருந்தன. இடைவேலைக்கு மணியடித்தும் பிள்ளைகள் மிளகாய்ச் செடியண்டை ஓடிச்செல்வர். அவர்கள் பாடசாலையில் கிடைக்கும் பனிஸை கொச்சி மிளகாயைக் கடித்துக்கொண்டே சாப்பிடுவர்.

சிரிநாத அப்பாடசாலையின் உதவியாசிரியர். வகுப்பறைக் கற்பித்தலுக்கு பாடவேளைகள் ஒதுக்கப்படிருந்தாலும் அதிக நேரம் தோட்டவேளையிலேயே கழிந்தது. தோட்ட வேலைக்காக முப்பத்தைந்து நிமிடம் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அப்பாடசாலையில் தோட்டவேலைக்காக இரண்டு மணி நேரமாவது கழியும்.

"தோட்ட வேலைக்கு எடுக்கும் நேரமதிகம். நான் எப்படி இந்தப் பிள்ளைகளுக்கு இப்பாடங்களைக் கற்பிப்பது?" ஒரு நாள் சிரிநாத அதிபரிடம் கேட்டார்.

அதிபர் அதே கிராமத்தைச் சேர்ந்தவர். ஐந்து ஏக்கர் அளவு வயல், தோட்டங்கள் அவருக்குண்டு. அவரது பிள்ளைகள் நகரத்து பெரிய பள்ளிக்கூடங்களில் படிக்கின்றனர். அதிபர், சிரிநாதவுக்கு எந்தப்பதிலும் சொல்லாமல் வெற்றில குதப்பியபடி நின்றார். சிறிது நேரத்தின் பின்பு எழுந்து முற்றத்தில துப்பிவிட்டு திரும்பி வந்து கதிரையில் அமர்ந்து இவ்வாறு பதில் சொன்னார் அவர்.

"நீங்கள் சிறந்ததொரு பயிற்றப்பட்ட ஆசிரியர் என்பது உண்மை. இருந்தும் இந்தச் சுற்றாடலை நீங்கள் விளங்கிக் கொள்ளவில்லை. இது விவசாயம் செய்யும் மக்களின் ஊர். பறையடிக்கும், துணிதுவைக்கும் இரண்டொரு குடும்பங்களும் உண்டு. இந்தப்பாடசாலையின் மூலம் பிள்ளைகளை நல்ல முறையில் விவசாயம் செய்ய பழக்க வேண்டும். வாசிப்பு,எழுத்து,கூட்டல்,கழித்தல் பன்சாலை சென்று வாய்திறந்து சமயப்பாடல் பாடுதல் போன்ற விடயங்களைதான் படிக்கணும். இந்த எல்லா பிள்ளைகளும் வீட்டிலும் விவசாயம் செய்கிறார்கள். பாடசாலையிலும் செய்யும் போது விவசாயத்தின் மீது அவரகளுக்கு ஆசையேறபடும். விளங்குதா? இப்பொ பாருங்க நாங்கள் பாடசாலைத் தோட்ட மரக்கறியை விற்பனை செய்கிறோம். அந்தப்பணத்தால் தான் நான் சென்ற மாதம் கரப்பந்தும் மண்வெட்டியும் கொண்டுவந்தேன். தோட்ட வேலைக்கு எடுக்கும் காலம் அதிகமென்று இங்கிருந்த ஆங்கில ஆசிரியர் சொன்னார். அவ்வாறு சொல்லி அதிகநாள் போகவில்லை. அவருக்கு இடமாற்றம் வந்தது. இந்தப்பிள்ளைகளுக்கு ஆங்கிலம் எதற்கு?"

பிள்ளைகள் மிளகாயுடன் பனிஸ் சாப்பிட்டனர்.

பனிஸின் மேற்பகுதியில் சீனி காணப்பட்ட நாள் சிறிநாதவுக்கு ஞாபகமில்லை. அன்று பாடசாலைப் பரீட்சகர் வந்த நாள். அன்று பனிஸ் பெரிதாகவிருந்தது. உச்சியில் சீனி பறித்துக் கொண்டு வந்த மிளகாயை பிள்ளைகள் எறிந்து விட்டு சுவைபட பனிஸை சாப்பிட்டனர்.

முந்நூறுக்கு மேறபட்ட மாணவர் படிக்கும் அப் பாடசாலைக்கு நாளாந்தம் இருநூறுக்கும் குறைந்தவர்களே வருகை தருவர். ஆனால் பட்டியல்கள் பூச்சியம் இடுவது தடுக்கப்பட்டிருந்தது.

பாடசாலைக்கு சற்று தொலைவிலிருந்து பேக்கரியிலிருந்தே பனிஸ் கொண்டு வரப்படுகிறது.

சிறிநாத தங்கியிருந்த வீட்டு சோமவதி கூறியபடி, முந்நூறு பேர் தினமும் பனிஸ் சாப்பிடுவதாக கல்விக் கந்தோருக்கு அதிபர் அறிக்கையிடுகிறார். ஒரு பனிஸின்

நிறை ஆறு அவுன்சாக இருக்க வேண்டும். இருந்தும் பாடசாலை வரும் நாட்களை தவிர்ந்த தினங்களில் அதன் நிறை நான்கிலும் குறைவே. குறையும் இரண்டு அவுன்ஸையும் வெதுப்பகக் காசாளரும், அதிபரும் பங்குபோட்டுக் கொள்வர். ஒவ்வொரு மாதமும் வெதுப்பக சொந்தக்காரனுக்கு கல்விக்கந்தோரால் கிடைக்கும் பணத்தில் மூன்றில் ஒரு பங்கு அதிபரின் பைக்குப்போகும்.

சோமாவதி அக்கா மேலும் கூறுகையில் "சிறிநாத ஸேர் அதிபர் இப்பாடசாலையிலிருந்து மாறுவதில்லை முப்பது வயதிலிருந்து இங்குதான் இருக்கிறார். கந்தோரிலுள்ள பெரிய அதிகாரிகளும் தமது புண்ணிய கருமங்கள், கல்யாணங்களுக்கு இங்கிருந்துதான் மரக்கறி, வாழைக்குலை என்பன கொண்டு போவதைப் பார்க்கிறோம்.

அதிபர் வீட்டைச்சுற்றி பெரிய மதில் எழுப்புகிறார். பனிஸால் சுரண்டும் பணத்தைத்தான் அதற்கு செலவிடுகிறார்" என்றாள்.

சிறிநாத ஐந்தாம் வகுப்பிற்கே கற்பித்தார். அந்த வகுப்பிலுள்ள ஜயனா என்ற மாணவனின் விஷேட திறமை அவருக்கு விளங்கியது. அவனது ஞாபக சக்தி மிக உச்சம். ஒரு முறை சொல்லிக்கொடுப்பது அவனுக்கு நன்றாக ஞாபகம் நிற்கும்.

பீ. ரூபன் பீரிஸின், மொழி, நுண்ணறிவு போன்ற புலமைப் பரீட்சை நூல்களை ஜயனாவுக்குகொடுத்து, அதிலுள்ள பயிற்சிகளுக்கு விளக்கமளித்து செய்யுமாறு கொடுத்தார். ஜயனா, சிறிநாத நின்ற வீட்டுக்கு வருவான். அவன் ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரீட்சையில் சித்தியடைவானென்று அவர் நினைத்தார்.

சிலநாள் கழிந்தது. சிறிநாதவுக்கு ஏதோ தெரிய வந்தது. அவர் உடனடியாகவே அதிபரைச் சந்தித்தார்.

"அடுத்த பாடசாலைகளில் புலமை பரீட்சை விண்ணப்பம் அனுப்பியிருக்காங்க. எங்கள் பாடசாலையில் இருந்து ஏன் இன்னும் அனுப்பவில்லையா?" சிறிநாத கேட்டார்.

"பத்து நாட்களுக்கு முன்பதான் விண்ணப்பம் அனுப்ப வேண்டியிருந்தது. நான் கந்தோருக்கு அறிவித்தேன். எங்களுக்கு விண்ணப்பம் வரவில்லையென்று......! நான் என்னதான் செய்ய? நான் அச்சடித்தா விண்ணப்பம் அனுப்பனும்?"

" இது பெரிய அநியாயம். விண்ணப்பம் அனுப்பி பிள்ளைகளை பரீட்சைக்கு அனுப்பினால், ஒர பிள்ளையாவது பாஸ்பண்ணுமல்லவா?"

"நீங்க தெரியாமல் கதைக்கிறீங்க ஸேர். இந்தப்பாடசாலையில் ஒரு நாளும் யாரும் பாஸ்பண்ணியது கிடையாது. இவங்க ஏழை விவசாயிகளின் பிள்ளைகள். இவங்களுக்கென்ன புலமை பரிசில்?"

"பரீட்சை எழுதினால் ஜயனா பாஸ்பண்ணுவான்"

"அந்த சிதத்ரேயின் பையனா?"

"ஓம்"

"அவன சென்றல் கொலஜ்*க்கு அனுப்பவா உங்களுக்குத் தேவை?"

சில நாட்களின் பின் சிரிநாதவுக்கு வேறு பாடசாலைக்கு இடமாற்றம் கிடைத்தது.

பின்னொரு காலத்தில் அவர் அந்த ஊருக்கு வந்தார். சோமாவதி அக்கா அதிபருக்கு நடந்ததை அவருக்கு எடுத்துக்கூறினாள்.

"ஓய்வு எடுத்ததுமே அதிபர் நோய்வாய்ப்பட்டார். ஒரு நாள் முற்றத்தில் விழுந்தார். எழும்ப முடியவில்லை. ஜயனா ஓடிவந்து தான் தூக்கினான். அதன்பின் பக்கவாதம் எற்பட்டு ஒருகையும் ஒருகாலும் செயலிலந்திட்டன. உடலில் புழு வைத்து விட்டது. வெளி விறாந்தை அறையில்தான் கடைசிக்கட்டத்தில் இருந்தார். அங்கு வீட்டு வேலைக்கு ஜயனாவின் தங்கைதான் இருந்தாள். அவள் அந்த அறையில் சிலந்திவலையை அகற்றி சுத்தம் செய்யும் போது யன்னலைத் திறப்பாள். அப்போது அதிபர் "மூடு" என்று கத்துவார். அவள் யன்னலை மூடிவிடுவாள். திரும்பவும் திறந்தால் மீண்டும் சத்தமிடுவார். ஏனென்றால் பனிஸ் பணத்தால் கட்டிய

மதிலைக் காணும் போது, முன்னைய பிள்ளைகளின் பனிஸை சிரிதாக்கியது அவருக்கு ஞாபகம் வரும். அதன் பின்னர் யன்னலைத்திறக்கவேயில்லை. அப்படியிருந்து வேதனைப்பட்டு இறந்துபோனார். அந்தத் தோட்டத்திலேயே சவம் புதைக்கப்பட்டது. அன்றைய மரண ஊர்வலத்தில் சோகராக ஊதுகுழல் ஊதியவன் ஐயனாதான்.

# மணியொலியை மதிக்காத மாணவர்

காலை ஏழரை மணி கடந்து இரண்டொரு நிமிடங்கள் தான் சென்றிருக்கும். சிரிநாத அஹங்கம ஷாரிபுத்திர மகாவித்தியாலய கேற்றடியில் நின்று பார்த்துக் கொண்டிருந்தார். உயர்தர, சாதாரண மாணவர் குழுவொன்று கேற்றைத்திறக்காமல் அதனை காவல் காத்து நின்றனர்.

"பிள்ளைகளே! எனக்கு பாடசாலைக்குள்ளே போக வேணும். இந்தப்பாடசாலையில் வேலை செய்த ஒரு ஆசிரியர் நான்." சிரிநாத சொன்னார்.

ஒரு மாணவர் கேற்றின் இரும்புக் கம்பிகளிடையால் பார்த்தான்.

"இது அந்த சிரிநாத ஸேர்" ஒரு மாணவன் சொன்னான். கேற் திறந்தது. சிரிநாத ஸேர் உள்ளே சென்றார்.

"இந்தநாட்களில் இப்படியில்லாமல் சரிவராது ஸேர்." கேற்றைத் திறந்த மாணவன் கூறினான்.

அது 1989ம் ஆண்டில் ஒரு நாள்.

அதிபர் பீ.டீ.பீ.த. சில்வா அவர்கள் சிரிநாதவை வரவேற்றார்.

மற்றைய நாட்களில் மகிழ்ச்சியால் பளபளக்கும் அந்த முகம் அன்று சோகம் கவிழ்ந்திருந்தது.

"நான் உத்தியோக பூர்வமானதொரு கடிதம் எடுக்க வந்தேன்."சிரிநாத சொன்னார்.

அவர் அதை உடனடியாக ஒழுங்கு செய்து கொடுத்தார். சிறிநாத இன்னும் சிறிது நேரம் பாடசாலையில் தங்கியிருந்தார்.

"இந்த நாட்களில் படிப்பிக்க முடியாது" ஒரு ஆசிரியர் கூறினார்.

"எனக்குத் தெரியும். நாட்டில் அநேகமான இடங்களில் இதுதான் நிலை" சிறிநாத சொன்னார்.

அந்த ஆசிரியர் சிறிநாதவுடன் வெறுமையானதொரு வகுப்பறைக்குச் சென்றார். அவர் கடந்த சில நாட்களாக சில நிகழ்வுகளைக் வெளிப்படுத்தினார்.

"எங்களது வளர்ந்த மாணவர்கள் மட்டுமல்ல சிறியவர்களும் இனந்தெரியாத துப்பாக்கிதாரர்களுடன் சம்பந்தப்பட்டிருக்காங்க. இவர்களுக்கு தெரிந்ததொன்று மில்லை. என்னென்னவோ சொல்லி கோஷமிடுறாங்க. மாகாணசபை எங்களுக்கு வேண்டாமென்று கத்திறாங்க. இந்த வாரத்தில் பாடசாலை மாணவர்கள் மைதானத்தில் ஊர்வலம் போனாங்க. வகுப்பறைகளில் கற்பிக்க முடியாத நிலை. மணியொலிக்கும் கட்டுப்படுவதில்லை......

"சென்ற வாரம் நான் பிள்ளைகளை எச்சரித்தேன். இப்போது நீங்க படிக்க வேண்டியதுதான். வளர்த்தபிறகு அரசியல் செய்யலாமென்று சொன்னன். என்ன தெரியுமா நடந்தது? அன்று இரவே எனக்கொரு கடிதம் கிடைத்தது. நாட்டுப் பற்றாளர் இயக்கத்திலிருந்துதான். நாவைப் பேணிக்கொள்ளும்படி அதில் இருந்தது. அதன்படி நான் இப்பொழுது அமைதியாக இருக்கிறன்"......

"இப்பொழுதே போகாதீங்க கொஞ்சநேரம் பொறுங்க. நடக்கிற விஷயங்கள பார்த்துக்கொள்ளலாம். இந்த வாரம் பாடசாலை மைதானத்தில் ஊர்வலம் போறாங்க. அடுத்த வாரம் திங்களென்று பிரதான வீதிக்கிறங்கி ஊர்வலம் நடத்திருக்காங்க. இப்போதே அங்கு கேற்றடிக்கு ராணுவ வாகனம் வந்திருக்கு. பெரிய பயங்கரம். எங்கட நெஞ்சுக்குள்ள நெருப்பு பற்றி எரியுது. இந்தப் பிள்ளைகளுக்கு என்ன நடக்கப்போகுதென்று சொல்ல முடியாது. பிள்ளைகளின் முகங்களைக் காணும்போது கண்கள் நனையிது."

அவரது கண்கள் பனித்தன.

"இந்தப் பிள்ளைகள் இப்படியான விடயத்துக்கு எப்படி ஈடுபட்டார்கள்?" சிரிநாத கேட்டார்.

" பல்கலைக்கழகத்தில் படிக்கிறவங்க நாட்களில் அடிக்கடி இங்க வந்தாங்க. பாடசாலைக்கு வெளியே மேல் வகுப்பு மாணவர்களோடு கலந்துரையாடியிருக்கிறாங்க......

" அவர்கள் சொல்லிய விடயங்களை நம்பிய எங்கள் பெரிய மாணவர்கள் சிறியவர்களையும் விருப்பப்படுத்திக் கொண்டு அரசாங்கத்துக்கெதிராக ஊர்வலம் போறாங்க. ராணுவத்தினதும் பொலிஸினதும் துப்பாக்கிதாரிகளுக்கு, அரச விரோதச் செயல்களென்றால் பெரியவர் சிறியவர் என்ற வித்தியாசமில்லயே.

"நான் காலி, மாத்தறை போன்ற இடங்களில் பாதி எரிந்த மாணவர்களின் கூடல்களைக் கண்டேன். பல்கலைக்கழக மாணவர்கள் என்றால் இன்னும்தான் எங்கள் பிள்ளைகள் சுவர்களைப் பெரும் வீரர்களாக நினைக்கிறாங்க. இன்னும் கொஞ்சநேரம் போனால் எல்லாம் பார்க்கலாம்.

சிரிநாத அவரோடு அதிபரின் அலுவலகத்திற்கு வந்தார்.

காலை ஆராதனைக்காக மாணவர்கள் மைதானத்திற்கு வந்து கொண்டிருந்தனர்.

சில மாணவிகள் மலர்த்தட்டு, விளக்கு, சந்தனக்குச்சிகளோடு காரியாலத்திற்கு வந்தனர். அதிபர் எழுந்து அவற்றைத் தொட்டு, நெற்றியில் இருகைகளையும் வைத்து வணங்கினர். சிரிநாதவும் அவ்வாறே தொட்டுச் செய்தார்.அந்தக் கீழ்படிவான மாணவிகள் ஏனைய ஆசிரியர்களையும் மலர்தட்டைத்தொடவைத்து, புத்தர் இருப்பரங்கை நோக்கிச் சென்றனர்.

பிள்ளைகள் வரிசையாய் நின்றனர். சாது ஒலி எழுந்தது. பஞ்சநசீலப்பாடல் உயர்தொனியில் எழுந்தது.

பிள்ளைகளின் அடக்கமான தன்மை மிகுந்த அமைதியினூடாக வெளிப்பட்டது. அது கருணை தியானம் செய்யும் வேளை.

மணியடித்தது. பிள்ளைகள் வரிசையாக மைதானத்திலிருந்து வெளியேறினர்.

சிலநிமிடங்களின் பின்னர் அதே மாணவர்கள் ஒரே குரலில் கத்திய படி மீண்டும் மைதானத்திற்கு வந்து பாய்ந்தனர். அவர்களை வழிநடாத்தும் பல்கலைக்கழக மாணவர்களையும் சிரிநாதவால் இனங்கான முடிந்தது.

"கொழும்புக்கு பால் கிராமத்திற்கு கூழ்......மாகாணசபை எமக்கு வேண்டாம்" சின்ன வாய்களால் இப்படிக் கேட்க முடிந்தது.

சிரிநாதவுக்கு கேற்றருகே நிறுத்தியிருந்த ராணுவ வாகனம் தெரிந்தது.

"ராணுவம் பாடசாலைக்குள் வர முயன்றது. வரவேண்டாம் என்று நான் சொன்னேன். அந்த அதிகாரிகள் நான் சொன்னதை ஏற்றுக்கொண்டனர்." அதிபர் கூறினர்.

சிரிநாத பாடசாலையிருந்து வெளியே வந்தார். ஊர்வலம் சென்று கொண்டிருந்த சில மாணவர்கள் வந்து சிரிநாதவை வணங்கினர்.

"நான் இங்கு கற்பிக்கும்போது என்னிடம் கற்ற சிலர் இவர்கள்" சிரிநாத இவர்களது தலையைத்தடவி 'தெய்வத்தின் காவல்' என்றார்.

இரண்டு மாதங்களின் பின் ஆசிரியர் ஒருவர் மூலமாக சிரிநாதவுக்கு ஒரு செய்தி கிட்டியது.

"அன்று மலர்த்தட்டு கொண்டுவந்த பிள்ளைகளில் இருவர் சூடுபட்டு இறந்துள்ளார்கள். இன்னும் சிலரைக் கொண்றுபோட்டுள்ளார்கள்."

## துணிச்சல் மிகுந்த வேலை நிறுத்தக்காரன்

சிறிநாத சைக்கிளால் இறங்காமல் கேற்றடியில் நின்று பார்த்துக் கொண்டிருந்தார். பாடசாலைக்குள் ஆழ்ந்த அமைதி நிலவியது. பிள்ளைகள் இருவர் அவரை நோக்கி ஓடிவந்தனர்.

"எங்கே எங்கட ஸேர்மார் மிஸ்மாரெல்லாம்?" சிறிநாத கேட்டார்.

" ஸேர்மார் எல்லாரும் வந்தாங்க. வேலை செய்றாங்க. கையொப்பமிட்டார்கள். ஸேர் மாத்திரம்தான் இல்லை. நீங்களும் வாங்க ஸேர்" ஒரு மாணவன் சொன்னான்.

சிறிநாதவின் முகம் இருண்டு போனது. அவர் மௌனமாக பாடசாலைப் பக்கம் காதுகொடுத்துக் கொண்டிருந்தார். மணிச்சத்தமொன்று கேட்டது. மாணவர்கள் இருவரும் உள்ளே சென்றனர். நேற்று மாலை கதைத்துக்கொண்டபடி கேற்றடியில் சந்தித்து கச்சேரி பனை மரத்தடிக்கு போகவிருந்தனர். இனி சிறிநாத மாத்திரமே வேலை நிறுத்தத்தோடு சம்பந்தப்படுகிறார். அவர் எடுத்த முடிவை மாற்றவில்லை. மீண்டும் வீட்டுக்குச் சென்றார்.

இடையில் அவரது மாணவரான குனசேகரைக் கண்டார். கைநெடிய வெள்ளை சேட்டும் கறுப்பு நிற நீண்ட காற்சட்டையும் அணிந்து கையில் கோவைகளுடன் காணப்பட்டான்.

"ஸேர் எங்க போறீங்க ?"அவன் கேட்டான்.

"நான் வேலை நிறுத்தம் செய்கிறேன்" சிறிநாத சொன்னார்.

" ஏன் ஸேர் அப்படிச் செய்றீங்க?" கச்சேரியில் வேலை நிறுத்தம் செய்தவர்களுக்குப் பதிலாக இன்றைக்கு புது

ஆக்கள் எடுக்கிறாங்க. நாள் நேர்முகப் பரீட்சைக்குப் போறன். பாருங்க ஸேர் நான் தொழிலொன்றுக்குப் போகப்போறன். ஸேர் இருக்கிற தொழிலைச் இல்லாமச் செய்யப்போறீங்க. நேற்றிரவு அதுலத்முதலி அமைச்சர் சொன்னதை கேட்கவில்லயா? வேலை நிறுத்தக் காரரை சவப்பிட்டணிக்கு அனுப்புவோம் என்றார்."

குனசேகரவைப்பற்றி சிறிநாத கவலைப்பட்டார்.அவன் மிகுந்த துயரங்களோடுபடித்தவன்.
வேலை நிறுத்ததிற்குப் பதிலாக வேலைக்குப் போவது துரோகமான செயலென்று சிறிநாத சொல்லவில்லை.

"நான் எடுத்த முடிவை என்னால் மாற்ற முடியாது குனசேகர" என்றவாறு சிறிநாத விடைபெற்று வீட்டுக்குச் சென்றார்.

பின்னர் அவர் கச்சேரி பனைமரத்தடியில் நடைபெற்ற வேலைநிறுத்தக் காரனின் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

1980 ஜுலை வேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்காக ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன அவர்கள், வேலை நிறுத்தம் பலமடைந்து வரும் மாவட்டங்களுக்கு அமைச்சர்களை நியமித்தார்.

பியஸேன உபேஸிங்ஹ, பீ.எம். ஆரியபால, விலியம் வன்னியாராச்சி போன்ற பிரபல தொழிற்சங்கத் தலைவர்களின் ஏற்பாட்டால், ஹம்பாந்தோட்டையில் நடந்த வேலை நிறுத்தத்தை முறியடிக்கும் பொறுப்பு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்ஹவுக்கு வழங்கப்பட்டது. அவர் ஹம்பாந்தோட்டைக் கச்சேரியில் தங்கியிருந்து மாவட்டவேலை நிறுத்தத்தை குழப்பியடிக்க முயற்சித்தார்.

பனைமர நிழல் கூட்டத்தில் தகவல்களை வெளிக்கொணர்ந்து அகில இலங்கை எழுதுவினைஞர் சங்க ஹம்பாந்தோட்டை மாவட்டத் தலைவர் பியஸேன உபேசிங்ஹ பேசினார்.

சிறிநாதவைக்கண்டதும் அவர் இன்னொரு தகவலை வெளியிட்டார்.

"அதோ சகோதரர் சிரிநாத வேலைநிறுத்தத்தில் இணையும் போது, அவருக்குப் பதிலாக அமைச்சரின் செயலாளரின் மனைவியின் அக்காவுக்கு ஆசிரிய நியமனம் அமைச்சர் தன்கையினாலேயே வழங்கினார்."

அந்த கூட்டத்திற்கு சிரிநாதவின் மனைவி குஸ"மும் வந்திருந்தார். உங்களுக்கு இந்த வேலை நிறுத்ததில் கலந்து கொள்ள முடியாது. உங்களது சங்கம் - சர.்.ப் அதிகாரிகளின் சங்கம் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்வதில்லை என்று தீர்மானித்துள்ளது.

அதனால் உங்களுக்கு தனியே வேலை நிறுத்தம் செய்ய இயலாது. நீங்க வேலைக்குப் போங்க" உபஸிங்ஹ அவர்கள் கூறினார். குஸ"ம் பனை மரத்தடியிலிருந்து அழுதழுதே வெளியே சென்றாள்.

"இது சமாதானத்தை பாதிக்கும். தெரியாதா அமைச்சரும் வந்து பக்கத்தில்தான் இருக்கிறார்." பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

சிரிநாத வீட்டுக்குச் சென்றார். அதிபர் அவரை சந்திக்க வந்தார்.

" சிரிநாத ஸேர் வேலைநிறுத்தத்தை கைவிடுங்கள். காலை இடாப்பில் உங்கள் பெயருக்கு வட்டம் போடவில்லை. இப்போது சென்றாலும் கையொப்பமிடலாம்.நாளை காலையில் வந்தாலும் பரவாயில்லை. நான் இடாப்பில் வட்டம் போடாதிருக்கிறேன்." அவர் சொன்னார்.

"அதிபருக்கு ரொம்ப நன்றி. உடனே என்னுடைய பெயருக்கு வட்டமிடுங்கள். அதற்குப் பதிலாக ஆசிரியை ஒருவர் வருகிறார்." சிரிநாத சொன்னார்.

மாலையில் சில மாணவர்கள் சிரிநாதவைக் காண வந்தனர். குனசேகரவும் வந்திருந்தார். அவனது கண்கள் நிறைந்திருந்தன.

"ஸேர் இந்த வேலை நிறுத்தம் நியாயமானதொன்று எனக்குத் தெரியும். ஒரு நாளைக்கு பத்துரூபா அதிகரிக்கச் சொல்லித்தானே நீங்கள் கேட்கிறீங்க. இவங்க ஆட்சிக்கு வந்ததும் மந்திரிமாரின் சம்பளத்தை ஐயாயிரம் ரூபாவால்

அதிகரிச்சிட்டாங்க. அதுவும் எங்களுக்குத் தெரியும். இருந்தும் இந்த சந்தர்ப்பத்தை அரசாங்க தொழிலொன்று பெற்றுக்கொள்ள பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அப்பா சொன்னார். ஊர் கட்சிக்சிகளைச் செயலாளர் நாளொரு சிறந்த யூ.என்.பி. காரனென்று கடிதம் தந்தார். எனக்கு எழுதுவினைஞர் நியமனம் கிடைத்தது. நாளை முதல் எனக்கு ஹம்பாந்தோட்டைக் கச்சேரியில் வேலை. ஸேர் எங்களுக்கு படிப்பித்த விதத்தை நினைக்கும்போது எனக்குக் கவலைத்தான்...."

சிரிநாத, குனசேகரவுக்கு பதில் சொன்னார். "நீங்கள் செய்த காரியம்பற்றி நான் கவலைப்படவில்லை. தொழிற் செய்து கொண்டே இன்னொரு தடவை உயர்தரப் பரீட்சை எழுதுங்கள். எனக்குத் தெரியும் நீங்கள் இரண்டாம் தடவை சித்தியடைவீர்கள்."

சிரிநாத தனது மாணவர்களின் உதவியோடு இரண்டு வருடம் வியாபாரத்தில் ஈடுபட்டார். ஆசிரியர் சம்பளத்தைவிட ஏழெட்டு மடங்கு ஆதாயம் வியாபாரத்தால் அவருக்குக் கிட்டியது. இரண்டு வருட இறுதியில் அவருக்கு மீண்டும் ஆசிரிய நியமனம் கிடைத்தது. நியமனக் கடிதம் கிடைத்த அன்றே அவர் வியாபாரத்தைக் கைவிட்டார்.

அம்மலன்தொட ஆரியாலை முதலாளி லயனல் விஜேஆரிய அவர்கள் இது தொடர்பாக சிரிநாதவுக்கு தனது அதிருப்தியை தெரிவித்தார்.

"மிஸ்டர் சிரிநாத இன்னும் இரண்டு வருடம் இந்த வியாபாரத்தைத் தொடர்ந்தால் உங்களால் ஒரு லொறியும் வாங்க முடியும். இப்போதே டிரக்டரும் நெல் ஆலையும் இருக்கல்லவா?.....ஆசிரியர் வேலைக்கு பேசாம தொடர்ந்து வியாபாரம் செய்ங்க"

சிரிநாத அவருக்கு பதில் மொழிந்தார். "எனது பாடசாலை மாணவர்களால்தான் நான் வியாபாரத்தில் முன்னேறினேன். எனக்கு மீண்டும் அவர்களுக்கு சேவை செய்ய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. நான் ஆசிரியராக பதவியேற்கிறேன். வியாபாரத்தை கைவிடுகிறேன்."

அவருக்கு முன்பு வேலை செய்த பாடசாலைக்கே மீள் நியமனம் கிடைத்தது. ஒரு மாதத்தின் பின்பு தான் அதிகஷ்டப் பிரதேசமொன்று மாற்றம் கிடைத்தது.

முன்பு வேலை செய்த பாடசாலைக்கு கடமையைப் பொறுப்பேற்கச் சென்றபோது, அந்த மந்திரியின் செயலாளரின் மனைவியின் அக்காவை சந்தித்தார். அவள் அவரைக்கண்டதும் நேரே வந்தாள். இதமாகச் சிரித்தாள்.

"ஸேருக்கு ரொம்பவும் நன்றி உங்களால் தான் எனக்கு தொழில் கிடைத்தது. " என்றான்.

"எனக்கும் சந்தோஷம். இப்பொழுது எங்கள் இருவருக்குமே தொழில் இருக்கல்லவா" என்று சொன்னார் சிரிநாத.

# நீதிபதியின் மகன்

ஹம்பாந்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த, அப் பிரதேசத்தின் சிறந்த ஆரம்பப் பாடசாலையின் நாலாம் வகுப்பின் "ஏ" ப்பிரிவுக்கு சிரிநாத பொறுப்பாசிரியராக இருந்தார். பரம ஏழை விவசாயிகளின் மீனவர்களின் மட்டுமல்ல நகராதிபதி, நீதிபதி போன்றவர்களின் பிள்ளைகளும் நாலாம் வகுப்பில் படித்தனர். ஜனவரிமாதம் முதல் வாரத்தில் ஒருநாள் அதிபர் அவ்வகுப்பிற்கு வந்தார். பிள்ளைகள் எழுந்து வணக்கம் தெரிவித்தனர்.

"மிஸ்டர் சிரிநாத அந்த கடைசி வரிசையிலுள்ள வெள்ளைப் பிள்ளைய தெரியுமா?" அதிபர் கேட்டார்.

"ஓம் கபில"

"கபில என்பது அந்தப் பிள்ளையின் பெயர். அது வகுப்பாசிரியர் என்ற வகையில் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய விஷயம். நான் கேட்பது அப்பிளைபற்றிய வேறென்ன தகவல்கள் தெரியும் என்பது பற்றித்தான்.

"கபிலவின் ஆங்கில அறிவு நல்லது. கணிதத்திலும் கெட்டிக்காரன். பாட வராது. ஆனால் நன்றாகப் பேசுவான்"

"சரி அந்தப் பிள்ளயின் அப்பா யாரென்று தெரியாதல்லவா?"

"தெரியும். இந்தப் பிராந்திய நீதிபதி"

"இதயும் தெரிந்து கொண்டா கபிலவை பின்வரிசையில் இருக்க வைத்தீங்க"

"எனக்கு அது தெரியும். அப்பிள்ளை பின்வரிசையிலென்று எந்தப் பிரச்சினையுமில்லை. நன்றாக காது கேட்கிறது. கண்களும் தெரியுது"

அதிபரின் முகம் இருண்டுபோனது.

"மிஸ்டர் சிறிநாதவுக்கு அது பிரச்சினையல்ல. இருந்தும் அதிபரென்ற முறையில் எனக்குப் பிரச்சினை வரலாம். நான் இப்பொழுதுதான் பார்க்கிறன். நகராதிபதியின் மகனும் பின்வரிசையில்தான்......"

"ஸேர்" கோபிக்காதீங்க. நான் இப்படிச் சொல்வதற்கு..... அந்த முன்வரிசையிலுள்ள அசோகவிற்கு காது கேட்பது குறைவு. அங்க பாருங்க காதை திருப்பித் திருப்பித்தான் காது கொடுக்கிறான். அப்படியான பிள்ளைகளை முன்வரிசையில் இருத்தும்படிதான் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் சொல்லித்தாறாங்க"

"ஆசிரிய கலாசாலைகளில் என்னதான் கற்பித்தாலும் சுற்றாடலுக்கு ஏற்றவிதமாகத்தான் வேலை செய்யணும். அந்தப் பிள்ளை பின்வரிசையில் இருப்பதற்கு நான் விருப்பமில்லை"

முன் வரிசையில் இன்னொரு மாணவனுக்கு இடமிருப்பதை சிறிநாத அவதானித்தார். அவர் உடனே கபிலவை அந்த இடத்திற்கு வருமாறு கேட்டுக் கொண்டார்.

"இல்லை ஸேர் எனக்கு இந்த இடம் நல்லது." கபில எழுந்த படி கூறினான்.

"இல்லை தம்பி நீ முன்வரிசையில் வந்து அமர்ந்து கொள்" அதிபர் கேட்டுக்கொண்டார்.

கபில புத்தகப்பையோடு முன்வரிசைக்கு வந்தான். அதிபரின் வதனம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. அவவர் கபிலவின் தலையைத்தடவி விட்டுக் சென்றார்.

கபில எழுந்தான்.
"ஸேர் நான் இருந்த இடத்துக்கே போறன் "

"ஏன்?"

"பெரிய ஸேர் சொன்னார் அல்லவா முன்வரிசையில் இருக்கச்சொல்லி "

இன்னொரு மாணவன் குறுக்கிட்டான்.

" ஸேர் பியரத்ன கபிலவின் நல்ல நண்பன்.
அவன விட்டிட்டுவர கபிலவுக்கு விருப்பமில்ல"

பியார்ன சந்தையில் மீன்விற்கும் ஜயதாஸாவின் மகன்.

"கபில விருப்பமானதை செய் "

சிரிநாத அமைதியானார்.

ஒரு நாள் பாடசாலை விட்டபின் பிள்ளைகள் கேற்றடியில் வரிசையாய் செல்கையில், அதிபர் தனது அலுவலகத்திலிருந்து கேற்பக்கமாக ஓடுவது தெரிந்தது. அங்கே மோட்டார் வண்டியொன்று நின்றது. அது நீதியதியினுடையது. கேற்றை அதிபர்தான் திறந்தார். மற்றைய நாட்களில் பாடசாலைக் காவலாளியே திறப்பான். மோட்டார் வண்டியருகே சென்ற அதிபர் மீண்டும் திரும்பி வந்தார். வரிசையாகச் செல்லும் மாணவர் பக்கம் சென்று கபிலவை அழைத்தார்.

"தம்பி வரிசையில் போகாவிட்டாலும் பராவாயில்லை. அங்கே அப்பா வந்துள்ளார். சீக்கிரம் போங்க"

கபில வரிசையைக் குழப்பிக்கொண்டு காரை நோக்கி ஓடினான்.

ஒருநாள் சிரிநாத மாணவர்களோடு சேர்ந்து பாடசாலை வளவைத் துப்பரவு செய்து கொண்டிருந்தார்.

அதிபர் அந்த இடத்திற்கு வந்தாள்.

" மிஸ்டர் சிரிநாத ..... அந்தக் கபிலவுக்கு யார் விளக்குமாறு கொடுத்தது? பார்த்தீங்களா காற்சட்டையும் அழுக்கடைந்திருக்கு. ம்.....யார் இதற்கு பொறுப்புக்கூறுவது?"

"ஸேர கபில ஆசையோடு வேலை செய்றான். இவ்வளவு நேரமும் அவன் மண்வெட்டியால் வேலை செய்தான்.அந்தக் கோரைப் புல்லெல்லாம் அவன் தான் பிடுங்கினான். இப்போதுதான் விளக்குமாறெடுத்தான்."

"அந்தப் பிள்ளயிடமிருந்து வேலை வாங்காதீங்க"

"நாங்க எல்லோரும் வேலை செய்கிறோம்"

"மிஸ்டர் சிரிநாதவுக்கு விளங்குவதில்ல. அது நீதிபதியின் மகன்"

"எனக்கு அது தெரியும். இவர்கள் எல்லோரும் எனது மாணவர்கள். எனக்கு எல்லோரும் ஒன்று. கபிலவுக்கு தான் விசேடமாணவன் என்ற எண்ணமில்லை. பாடசாலை விட்டதும் முதலில் எனக்கு வணங்கிச் செல்பவன் அவன்தான். கரும்பலகை அழிக்கிறதும் அவன்தான். தெரியுதுதானே கபில விளக்குமாறு பிடிக்கிற விதம். நல்ல முறையில் தோட்டத்தைச் சுத்தமாக்கி, கழிவுகளை எரித்துவிட தீப்பெட்டி கொண்டுவந்ததும் அவன். பாருங்க அவனுடைய காற்சட்டைப் பையை....."

"இருந்தாலும் அவன் நீதிபதியின் மகன்"

அதிபர் கோபத்தில் குமுறியபடி காரியாலயம் சென்றார்.

அடுத்தவாரம் சிரிநாத நாலாம் வகுப்பு "சீ" பிரிவுக்கு மாற்றப்பட்டார். சீ-பிரிவு ஆசிரியை நாலாம் வகுப்பு அப்பிரிவைப் பொறுப்பெடுத்தார்.

அந்த காலை வேளையில் சிரிநாத தனது வகுப்புப் பிள்ளைகளுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு 4சீ வகுப்புக்குச் சென்றார்.

அவர் வகுப்பிலிருந்து வெளியேறமுன் அவரது காலில் விழுந்து முதலில் வணங்கியவன் கபில . அவனது சின்னக் கண்மடல்கள் சொரியும் கண்ணீர் சிரிநாதவுக்குச் தெரிந்தது.

# 17 கடை வாகம்

ஹம்பாந்தோட்டை கனிஷ்ட வித்தியாலத்தில் நான்காம் வகுப்புக்கு சிறிநாத பொறுப்பாகவிருந்தார். அந்த வகுப்பில் பளபளக்கும் சப்பாத்து அணிந்துவரும் பிள்ளைகளும் இருந்தனர். செருப்பே அணியாதவர்களும் இருந்தனர். அவர்களது உடுப்புக்களிலும் வேறுபாடு தெரிந்தது.

புத்துணர்ச்சியோடு சத்தமிடுபவர்கள் குழப்படிக்காரர்கள் மட்டுமன்றி, உதாசீனமான தூக்கமயக்க மாணவர்களும் அவ்வகுப்பில் காணப்பட்டனர்.

சிறிநாத இரண்டே வாரத்தில் எல்லோரையும் விளங்கிக் கொண்டார்.

"வீட்டு வேலையாகத் தந்த கணக்குகளில் ஒன்றுகூடச் செய்யவில்லயே. ஏன்?"- ஒருநாள் சிறிநாத ஒரு மாணவனிடம் கேட்டார்.

அந்தப் பிள்ளைமௌனமாக நின்றது. அவன் தூக்கமயக்க மாணவர்களில் ஒருவன்.

"ஸேர் அவள்தான் கடை வாகம் " ஒருவன் சத்தமிட்டுச் சொன்னான்.

" ஏன்?" சிறிநாத கேட்டார். வேறொரு மாணவன் கடைவாகம் என்றான்.

சிறிநாதவுக்கு அது விளங்விட்டது.

" கடை வாகம் ..... வடை காகம்"

"இதன் பிறகு அப்படி யாரும் சொல்லக் கூடாது" சிறிநாத எச்சரிக்கை விடுத்தார்.

"ஏன் மஹிபால கணக்கு செய்யவில்லை?"

மஹீபாலவின் கண்கள் நிரம்பின. வேறொரு பிள்ளையே பதில் சொன்னான்.

"ஸேருக்குத் தெரியாது. இந்தக் கடைவாகத்திக்கு.....இல்லயில்ல மஹீபாலவுக்கு வீட்டில் கணக்கு செய்ய நேரமில்லை. மாலையில் வடை விற்கிறான். தவறணைக்குப் பக்கத்தில பெரிய பேஸன் வைத்துக் கொண்டு வடை விற்கிறான். தவறணைச் சந்தியில் போகும் போது "வடை வடை" யென்று சத்தம் கேட்கும்."

சிரிநாத அதற்குமேல் அவனுக்கு பேச இடமளிக்கவில்லை.

"மஹீபால இரும் . அவன் நல்ல பிள்ளை. தனது வீட்டுக்கு எவ்வளவொன்றாலும் உழைத்துக் கொடுக்கிறான். எவ்வளவு நல்ல விஷயம்? முன்பு நானும் அப்படித்தான். எங்கள் தோட்டத்தில் பாக்குமரமிருந்தது. நான் பாக்குமரமேறி பாக்குபறித்து ஹக்மனை சந்தைக்கு கொண்டு போவேன். விற்று காசைக்கொண்டுவந்து அம்மாவிடம் கொடுப்பேன். அம்மா அந்தப்பணத்தை சேர்த்து எங்களுக்கு உடுப்பு வாங்கித் தருவா. அதுமட்டுமல்ல எங்கள் தோட்டத்தின் கீழ் பகுதியில் நான் தனியே மரக்கறி நட்டி வளர்த்தேன். வற்றாளை, புடலங்காய், பாகற்காய் நன்றாக வளர்ந்தது. ராபும் நட்டினேன். அவற்றை அறுவடை செய்து சந்தைக்கு கொண்டு போய்விற்பேன். காசை அம்மாவிடம் கொடுப்பேன்.எங்கள் சாப்பாட்டிக்கு தேவையான மீன், பருப்பு, எல்லாம் அந்தக்காசால்தான் வாங்குவார். எனது அப்பா ஒரு ஏழை விவசாயி. எங்கள் குடும்பத்தை வாழவைக்க அப்பாவால் மாத்திரம் முடியாதென்று நான் நினைத்தேன். நான் நாலாம் வகுப்பில் படிக்கும் போதே மரக்கறி விதைத்தேன். அதை ஞாபகப்படுத்தும் போது மனமகிழ்ச்சியேற்படுகிறது............

"மஹீபாலவும் என்னைப்போன்ற ஒருவன். ஆனால் நான் பாடசாலை வேலைகளையும் ஒழுங்காகச் செய்தேன். ஒவ்வொரு முறையும் வகுப்பில் முதலாம் பிள்ளையாய் வந்தேன். மஹீபால வீட்டிக்கு உதவுவதோடு பாடசாலை வேலைகளையும் நன்றாகச் செய்யணும்"

பிள்ளைகள் ஊமைகள் போல சிரிநாதவின் பேச்சுற்கு காதுகொடுத்துக்கொண்டிருந்தனர். வகுப்பில் நிலவிய அமைதிக்கூடாக ஒருவிக்கலும் கேட்டது. அது

மஹீபாலவினுடையது. அவன் வாங்கில் தலைவைத்துக் கொண்டான். சிரிநாத மஹீபாலவின் அருகே சென்றார்.

"அழவேண்டாம் பிள்ள நீயும் என்னைப்போன்றவன்தான் நீ நன்றாகப்படிக்கக் கூடியவன். நாங்கள் பிறகு கதைப்போம்."

அன்று மாலை சிரிநாத ஹம்பாந்தோட்டை நகரத்திலிருந்து தங்காலை வீதியாக நடந்து சென்று தவறணைச் சந்தியை அடைந்தார். அவருக்கு அந்த சிறுவனின் குரல் கேட்டது.

"வடை வடை"

தவறணையிலிருந்து வெளியிறங்குவோர் வாயைத்துடைத்தபடி வடை பேஸனருகே வந்தனர்.

" ஐந்து வடை தா"

மஹீபாலவுக்கு அவர்கள் கட்டளையிட்டனர்.

வடைபேஸனுக்கு புது வடை கொண்டு சென்ற பெண்ணொருத்தி திரும்பி வருவதை சிரிநாத கண்டார். அது மஹீபாலவின் அம்மாவாக இருக்கவேண்டும். சிரிநாத அவள் பின்னால் சென்றார். சிறிய குடிசையொன்றின் அருகே நின்ற அவள் பின்தொடர்ந்து வரும் சிரிநாதவோடு கதைத்தாள்.

" என்ன ஸேர்?"

"நான் மஹீபாலவின் வகுப்பாசிரியர்"

அவளது முகம் பயம்கலந்த தோற்றத்தை எடுத்தது.

"எனது பிள்ளை பாடசாலையில் ஏதாவது தவறு செய்துவிட்டானா ஸேர்?"

" இல்லை உங்கள் பிள்ளை எந்தத் தவறும் செய்யவில்லை. அவனது அம்மா, அப்பாவைக் காண வேணுமென்று நான் நினைத்தேன்"

"ஸேர் பற்றி மகன் சொல்வான். பாராட்டுவான். நில்லுங்க ஸேர் நான் கதிரையொன்று கொண்டு வாரன்."

அவன் வீட்டினுள் சென்று கதிரையொன்று கொண்டுவந்தாள். முன்னே கதிரையை வைத்து அமரச் சொன்னாள். சிரிநாத கதிரையில் அமர்ந்தபடி "எங்கே மஹீபாலவின் அப்பா?" என்று கேட்டாள்.

" இப்போதைக்கு வரமாட்டார். அவர் நகர சபை கழிவுப்பகுதியில் வேலை செய்கிறார். நன்றாக குடித்துக்கொண்டுதான் இரவைக்கு வருவார். தவறனையில்

குடிப்பதில்லை. கசிப்புத்தான் குடிக்கிறார். குடித்து விட்டு வந்த எனக்கு ஏசுவார். அடிப்பார். பிள்ளைகளுக்கு அடிப்பார். மகன் நேற்று இரவும் படிக்கத்தொடங்கும் போது அப்பா வந்திட்டார். புத்தகங்களை தூக்கி வீசினார். படிக்க விட மாட்டார். எதுக்கு படிக்கணும் என்று கேட்பார். இருந்தாலும் என்ற பிள்ளை அப்பா தூங்கிய பின் படிப்பான். ஒவ்வொரு நாளும் நான் வீட்டிலிருந்து போய்விடுறன் அம்மா. என்னால் இருக்க முடியாதென்று பலதடவை சொல்லியிருக்கிறான். பிறகு சொல்வான் எனக்கு அம்மாவை விட்டு போக முடியாதே என்பான்." என்றாள்.

"எனக்கு மஹீபாலவின் அப்பாவை சந்திக்க வேணும்."

"பகலில் நல்லாக இருப்பார். இரவில் தான் பைத்தியமாகுவார். "

சிரிநாத பல நாட்களின் பின்னர் மஹீபாலவின் அப்பாவை சந்தித்தார். அவரது கையிலிருக்கும் வெற்றிலையொன்றை வாயில் போட்டுக் கொள்ளும் அளவுக்கு சிரிநாத அவரோடு நண்பரானார்.

இரண்டு மூன்று மாதங்களின் பின்னர் மஹீபாலவின் அம்மா சிரிநாதவை சந்திக்க வந்தார்.

"ஸேருக்கு நன்றி சொல்ல வந்தேன். எங்கடவர் இப்போது கசிப்பு குடிப்பதை நிறுத்திவிட்டார். வீட்டில் சண்டை சச்சரவு இல்லை. மகனுக்கு படிக்க இடம்கொடுக்கிறார். ஸேர் தான் இந்த மாற்றத்தை ஏற்படுத்தினீங்க "

"எனக்குத் தெரியும். இப்பொழுது மகன் வீட்டுவேலைகளை செய்து கொண்டு வாரான். அடுத்த தவணைப்பரீட்சையில் மஹீபால பத்துக்கு மேல் நிலைக்கு வருவான்."

அன்று அவள் சிரிநாதவுக்கு வணங்கினாள்.

"எனக்கு வணங்க வேண்டாம். நீங்கள் எனக்கு அக்கா போன்றவர்."

அம்மா தனது ஆசிரியருக்கு வணங்குவதைக் கண்டு மஹீபாலவின் கண்கள் நிறைந்ததை சிரிநாத கண்டார்.

பிள்ளைகள் அதன் பிறகு மஹீபாலவுக்கு "கடைவாகம்" என்று சொல்லவில்லை. அவனுக்கு முழு வகுப்பினதும் அன்பு கிடைத்ததை உணர்ந்தான்.

# 18. பெருமகிழ்ச்சியும் பெருமையும்

சிறிநாத பிள்ளைகளுக்கு சுவர்பத்திரிகையொன்று ஆரம்பிப்பது பற்றி ஆலோசனை தெரிவித்தார். கவிதை, சித்திரம் குறுக்கெழுத்து போன்றவற்றை எவ்வாறுபிரசுரிக்க வேண்டுமென்பது பற்றிவிளக்கமளித்தார். இதற்கு முன்பு அப்பாடசாலையில் சுவர்பத்திரிகையொன்று இருக்கவில்லை.

காலைக்கூட்டத்தின்போது அதிபரிடம் சுவர்ப்பத்திரிகை கையளிக்கப்பட்டது.

அவர் கவிதை யொன்றையும் கட்டுரை யொன்றையும் வாசித்து மதிப்பீடு செய்தார்.எழுதுவது சம்பந்தமாக பிள்ளைகள் மத்தியில் ஆர்வமிருப்பது அடுத்தவாரம் சிறிநாதவுக்குக் கிடைத்த ஏராளமான பிரதிகள் உறுதிப்படுத்தின.

“பத்திரிகையில் எழுதப்பட்டுள்ள சிறந்த கவிதை எது?” அவர் கேட்டார்.

சிறிநாத சொன்னார்.

“பிள்ளை எழுதிய கவிதை ஹம்பாந்தோட்டை உப்பளம் பற்றி எழுதியுள்ளான். உப்பையும் மனித வாழ்வையும் சம்பந்தப்படுத்தி அற்புதமாக எழுதியிருக்கிறான். பாருங்க பிள்ளை சிங்களவனல்லாத போதும் சிங்களம் எழுதும் விதம் வியப்பாக இருக்கு.”

“எனக்கு ஞாபகம். சிறிநாத ஸேரின் புத்தகங்களை வாசிக்கிறான். அவன் சிங்கள அறிவை வளர்த்துக் கொண்டமை வியப்பானதுதான்.”

“சிங்களப் பிள்ளைகளைவிட விரைவாக அவன் எங்கள் பழைய இலக்கியங்களுக்கு பழகியிருக்கிறான். குத்திலய

பற்றி எழுதியதை ருவன் படித்ததா?"

"இல்லை எனக்கதைத் தாருங்க. நான் பிள்ளையுடன் கதைத்தேன். அவனுக்கு அமாவதுரவில் சில பகுதி மனப்பாடம்."

"அடுத்த வாரம் இலக்கிய மன்றத்தில் பழைய இலக்கியங்களில் மொழி பற்றி பிள்ளை பேசுறான். கேட்டுப் பாருங்கொ."

சிரிநாதவின் வீட்டுக்கு வாரம் இரண்டு மூன்று தடவை பிள்ளை வருவான். சிரிநாதவின் மனைவியும் அவனுக்கு தன்பிள்ளைபோல் அன்பு காட்டினாள்.

தொழிலாளி ஒருவனின் மகனான பிள்ளை பாடசாலையில் திறமையான மாணவனானான். அவனுக்குத் தேவையான புத்தகம் கொப்பிகள் சிரிநாதவிடமிருந்தும், ரத்னமால தேரரிடமிருந்தும் கிடைத்தன.

பல்கலைக் கழகப் பிரவேசப் பரீட்சைக்கு அவன் தோற்றினான். அவன் சித்தியடைவதில் எந்த சந்தேகமும் இல்லையென்று சிரிநாத சொன்னான்.

"அப்படியென்றால் இந்தப் பையனுக்கு பெருமளவு பணம் தேவைப்படும். அதை நாங்கள் கொடுக்கனும். எனது சம்பளத்தால் நான் பிள்ளைக்கு ஒரு பகுதியை வேறாக்குகிறேன். " ருவன் சொன்னான்.

நானும் அப்படி நினைத்தேன். எங்களால் முடிந்தவகையில் நாங்கள் உதவுவோம்."சிரிநாத சொன்னார்.

ஒரு நாள் சிரிநாத தலைநகரிலுள்ள நூல் வெளியீட்டு நிறுவன மொன்றுக்குச் சென்றார். அதன் முகாமையாளர் அவரது நண்பன்

"எங்களுக்கு ஒப்பு நோக்காளர் ஒருவர் அவசியம் தேவை. நன்கு வேலை செய்வாரென்றால் நல்ல சம்பளம் கொடுப்போம்." அந்த நண்பர் தெரிவித்தார்.

சிரிநாதவுக்கு பிள்ளை ஞாபகம் வந்தான்.

"ஒரு நல்ல பையன் இருக்கான். நல்ல சிங்கள மொழியறிவுண்டு."

சிறிநாத பிள்ளையின் வீட்டுக்குச் சென்றார்.

"பல்கலைக் கழகம் போகும் வரை பிள்ளைக்கு நல்ல தொழிலொன்று பார்க்கமுடியும். ஒப்புநோக்கி வாசித்தல்தான். போய்ப்பாருங்க. அந்தக் கட்டிடத்திலேயே தங்கவும் முடியும். புதிய அனுபவமல்லவா. அந்த ஐயாவும் நல்லவர்."

பிள்ளை ஒப்புநோக்கு வாசிப்பாளரானான்.

அதற்கிடையில் அவன் சிறிநாதவின் நண்பனான உதவியாசிரியர் ஒருவரை சந்தித்து பத்திரிகைக்கு கவிதை எழுதவும் தொடங்கினான்.

"பார்த்தீங்களா பிள்ளையின் கவிதையை ரொம்பப் பொருமையாகவும் மகிழ்ச்சியாகவுமிருக்கு."மகிழ்ச்சியார் நிரம்பிய முகத்தோடு சிறிநாதவின் மனைவி பத்திரிகையொன்றைக் காட்டிச் சொன்னான்.

பல்கலைக் கழகத்திற்கு புகுந்தபின் பிள்ளைக்கு புத்தக நிறுவனத்திலேயே தங்க முடிந்தது. அவன் இரவில் ஒப்புநோக்கல் வாசிப்பை மேற்கொண்டான்."

போதுமான அளவு பணம் அவனுக்கு புத்தக நிறுவனத்தால் கிடைத்தது. இதனால் சிறிநாதவுக்கும் ருவனுக்கும் பிள்ளைக்காக செலவழிக்க வேண்டி நேரவில்லை."

பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றபின்பும் சிலகாலம் அவன் நிறுவனத்திலேயே வேலை செய்தான். அக்காலப்பகுதியில் அவன் ஊருக்கு வந்தால் சிறிநாதவையும் பார்க்கவருவான்.

பின்னர் அவர் நிருவாக சேவைப் பரீட்சையிலும் சித்திபெற்றான். அமைச்சொன்றில் உதவிச் செயலாளர் பதவி அவனுக்குக் கிடைத்தது. சிறிநாதவுக்கு பிள்ளையின் அம்மா மூலமே இச்செய்தி கிட்டியது.

"ஸேராக்கல் செய்த உதவியால் எங்கட பிள்ளை இந்த நிலைக்கு வந்திட்டான். ஒரு நாளும் நாங்கள் ஸேர்மாரை மறக்கமாட்டோம். அவன் கண்ணீர் உதிர்த்தபடி சொன்னாள்.

"ரொம்பப் பெருமை - மகிழ்ச்சி"சிறிநாத சொன்னார்.

சொற்ப காலம் சென்றது.

"எப்படி இப்பொழுது பிள்ளையின் செய்திகள்?" - ருவன் கேட்டான்.

"மிகவும் நன்றாக இருக்காங்க . களனிப் பக்கமாக வீடொன்று எடுத்தார்களாம்."

"வீடு குடிபுகுந்ததற்கு போனீங்களா?"

"இல்லை பிள்ளைக்கு இப்பொழுது நிறைய வேலையிருக்கும்."

"இனி ஏன் கடிதமொன்றாவது அனுப்புவதில்லை?"

"வேலை வேலை, நிர்வாக சேவை அதிகாரிக்கு எவ்வளவு வேலையிருக்கு? பிள்ளை பெரிய பதவியொன்றில் இருப்பதும், பத்திரிகைகளில் செய்திகள் வருவதும் எங்களுக்கும் பெருமை சந்தோஷம்."

சரிநாதவின் முகமெங்கும் அலைமோதும் மகிழ்ச்சியைப் பார்த்து ருவன் மௌனமானான்."

"இதோ பிள்ளை ஒரு நாவல் எழுதியிருக்கான்" பத்திரிகையில் அமுபற்றிய விமர்சனமிருக்கு " ஒரு நாள் சிரிநாதவின் மனைவி சொன்னாள்.

"தாங்க தாங்க பத்திரிகைய"

சிரிநாத பொறுமையற்றவராகவே பத்திரிகையைக் கையிலெடுத்தார்.

பேராசிரியர் ஒரவர் அந்த நூலை உயர்ந்த தரத்திலுள்ள நாவலாக மதிப்பீடு செய்திருந்தார்.

சிரிநாதவின் கண்களில் கண்ணீர்

"மிகவும் மகிழ்ச்சி..... பெருமை...."

மனைவி அமைதியாகவிருத்தாள்.

பின்னொரு நாள் சிரிநாத நகரத்திற்குச் சென்று வீட்டுக்கு இவ்வாறு சொல்லிக் கொண்டு வந்தார்.

"நகரத்தில் இரண்டு புத்தகக் கடைகளிலும் பார்த்தேன்.

அந்தப் புத்தகம் இன்னும் வரவில்லை என்றார்கள்."
"எந்தப் புத்தகம்?"

"பிள்ளையின் புத்தகம்"

மனைவி மௌனமாக நின்றாள்.

சிறிநாத ஓய்வுபெற்றபின் ஒருநாள் கொழும்புக்குச் சென்றார். பஸ் வரும்வரை பம்பலப்பிட்டி சந்தியில் நின்று அவருக்கு தூரத்தில் நிறுத்தப்பட்ட காருக்குள்ளிருந்து ஒருவர் கையசைத்தார்.

சிறிநாதவின் அருகிலிருந்த ஒருவர்" உங்களுக்காக இருக்கவேண்டும். அங்கே கையசைக்கிற

சிறிநாத பாதைக்குக் குறுக்காகச் செல்லத் தயாரானார்.

"கவனம் " அந்தத் தகவல் கொடுத்தவர் கூறினார்.

சிறிநாத அந்தக் கார் அருகே சென்றார்.

சிரிந்த முகமொன்று காருக்குள் தெரிந்தது.

"இது நான் எழுதிய புத்தகம்"

சிறிநாதவுக்கு அந்தக் குரல் கேட்டது.

"இது பிள்ளை அல்லவா" சொல்லியே விட்டார்.

சிறிநாத புத்தகத்தைக் கையிலெடுத்தார்.

"அவசர அலுவல் இருக்கு. நான் போறன்" வாகனத்தினுள்ளிருந்து அக்குரல் கேட்டது. காரின் கண்ணாடி யன்னல் உயர்ந்தது.

"ரொம்பப் பெருமை. மகிழ்ச்சி" என்று சொல்வதற்கு அவருக்கு வாய்ப்புக் கிட்டவில்லை."

அந்த வாகனம் இன்னும் பல வாகங்களுக்குள் எங்கோ மறைந்து சென்றது.

## 19. உதவிப் பொலிஸ் அதிகாரி

ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்ற சிரிநாத கொழும்பில் பத்திரிகைக் காரியாலயமொன்றில் இணைந்தார்.

அவர். கொழும்பில் வாழ்ந்தபோதும். , அவரது மனம் கஷ்டப் பிரதேச மாணவர்களோடு வாழ்ந்தது. அவர் அவர்களின் கதைகளை பத்திரிகைக்கு எழுதலானார்.

காலை வேளையில் பாடசாலை மாணவனாக இருக்கும் பிள்ளை, மாலையில் தமது பெற்றாருடன் சேனையிலும் வயல்களிலும் வயது வந்தவர்களாக இயங்குவதை அவர் எழுதினார்.

கடலுக்குச் சென்ற தந்தை வரும்வரை பார்த்திருந்த மகனுக்கு ஐந்த நாட்களின் பின்பு தந்தையில் சடலம் கடற்கரையில் காண முடிந்தது. அதன் பின்னர் பின்நேரம் கடல் வேளைக்குச் சென்று வீட்டுக்கு சொற்ப பணம் உழைத்துக் கொண்டு, அந்தப் பிள்ளை காலைவேளை கெட்டித்தனமாக கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுவதை அவர் எழுதினார்.

மாலையில் காட்டுக்குச் சென்று விறகு வெட்டி, கட்டுக்களாகக் கட்டி, பாதையில் வைத்து விற்க அம்மாவுக்கு பொறுப்பளித்து விட்டு, காலையில் பாடசாலைக்கு வரும் பிள்ளைகள் பற்றி ஹம்பந்தோட்டை தவறணை அருகில் மாலைவேளையில் வடை விற்றுவிட்டு, காலையில் பாடசாலைக்கு வரும் பிள்ளைகளைப் பற்றியும் எழுதினார்.

அவ்வாறான பிள்ளகைளை அவர் நூற்றுக்கணக்கில் பாடசாளைகனால் கண்டுள்ளார். அவரது மனதில் அவர்கள் பதிவாகியிருந்தனர். குடும்பத்தை வாழவைப்பதற்கு பெற்றார்

படும் கஷ்டத்தில் அவர்களும் பங்கேற்றனர். சில மாணவர்கள் நோயாளியான தந்தை, தாயுடன் தனியே சகோதர, சகோதரிகளை பராமரித்த சந்தர்ப்பங்களுமுண்டு.

இப்படியான பிள்ளைகளுக்கு கற்பிப்பதற்கான வாய்ப்புக்கள்,அரசியல் வாதிகள் பழிவாங்கும் நோக்கில் கொடுத்த இடமாற்றங்களினாலேயே சிறிநாதவுக்குக் கிடைத்தது.

பத்திரிகை உதவியாசிரியரான பின்னரே சிறிநாதவுக்கு அந்த அரசியல் வாதிகளின் பெறுமதி தெரிந்தது.

"நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். அந்தப் பிள்ளைகளுக்கு உதவி செய்ததன் மூலம் என்னால் மகிழ்ச்சிகொள்ள முடிந்தது. அந்த மகிழ்ச்சியைப் பெற்றுத் தந்த பாராளுமன்ற அங்கத்தவர்களே,

சிறிநாத இந்தப் பிள்ளைகள் தொடர்பாக

ஒரு நாள் சிறிநாத கொழும்பு பொலிஸ் தலைமையகத்திற்குச் சென்றார். அவரது வேலைகள் முடிந்த பின்னர் அவர் படிகளால் இறங்கி வந்தார். கீழே ஒரு பொலிஸ் அதிகாரி தனது தலைக் கவசத்தைக் கழற்றி சிறிநாதவின் முன்னே வந்து மிகுந்த மரியாதையோடு "ஸேர்" என்றார்.

அவரது உத்தியோக பூர்வ உடையால் இது உதவிப் பொலிஸ் அதிகாரியென்ற உணர்வு சிறிநாதவுக்கு ஏற்பட்டது.

"ஸேருக்கு என்னை அறிமுகம் பிடிக்க முடியுமா? ஆவர் கேட்டார்.".

"எனக்கு ஞாபகம் வரவில்லை......."

"ஸேர் நான் ஹம்பாந்தோட்டை ஐயூப்கான்"

சிறிநாத அவரது கைகளை பற்றிக் கொண்டார்.

"ஐயூப்கான், எனக்கு ஞாபகம் . ஐயூப்கானின் வா:ப்பாவையும் எனக்குத் தெரியும். எவ்வளவு காலத்திற்கு முன்பு, முப்பது வருடத்திற்கு முன்பு.................." சிறிநாத சொன்னார்.

“அப்பொழுது நான் ஹம்பாந்தோட்டை சென்மேரிஸ் வித்தியாலயத்தில் ஆறாம் வகுப்பில் படித்தேன். ஸேர் எங்களுக்கு படித்த முறை எனக்கு ஞாபகமுண்டு. வகுப்புக்கு எல்லாப் பிள்ளைகளோடும் சிரித்துக் கதைத்துவிட்டே பாடம் தொடங்குவீங்க. ஸேர்தான் எங்களுக்கு கவிதை, இலக்கியம் பற்றியெல்லாம் ஆர்வ மூட்டினீங்கள். நாங்கள் முஸ்லிம் அல்லவா? எங்களுக்கு சிங்கள மொழியின் ரசனையை ஊட்டியது நீங்கள்தான். கடந்த காலங்களில் ஸேரின் கதை – கவிதைகள் பத்திரிகையில் வரும்போது அந்தக் காலக் காலத்திற்கு சென்று வந்தோம். “”ஐயூப்கான் தொடர்ந்து சொன்னார்.

‘போவோம் ஸேர் எனது காரியாலயத்திற்கு”

அவர் சிரிநாதவின் கையைப் பிடித்தபடி மீண்டும் ஏறுபடிகளூடாக மேலே அழைத்துச் சென்றார். . அவரது அலுவல அறையில் சிரிநாதவை அமரச் செய்து ஐயூப்கான் தேநீர் விருந்தளித்து உபசரித்தார்.

“ஸேருக்கு ஞாபகமா....... எங்கள் வகுப்பு பிள்ளைகளை சேர்த்துக் கொண்டு கரும்பலகையில் எழுதிய கவிதை.....”

“தம்பிக்கு ஞாபகமென்றால் சொல்லுங்க .”

“பணம் பற்றி ஒரு கவிதை எழுதுவோமென்று ஸேர் சொன்னீங்க. முதலாம் வரியை ஸேர் எழுதினீங்கள் ஏனைய வரிகளை எங்களை சேர்த்துக் கொண்டு எழுதினீங்கள். இதுதான் அந்தக் கவிதை....எனக்கு இன்னும் ஞாபகம்.......

அம்மா அப்பா ப.பா. எழுத்துச் சொல்வர்
கரித்துண்டெடுத்து சுவரில் எழுதுவர்
சிரட்டை இரண்டில் மண்சோறு சமைப்பார்.
அம்மா சமைத்தோம் உண்பீர் என்பார்.

“இதுதான் ஸேருக்கு ஞாபகமில்லயே”

"எனக்கு ஞாபகமில்ல தம்பி, முப்பது வருடத்துக்கு முன்பல்லவா".

"இப்படியான இன்னும் கவிதைகள் எழுதினோம். சஞ்சிகை ஒன்றும் அச்சிட்டோம். எங்கள் தஹாரின் அண்ணன் தான் அதன் ஆசிரியர்.

"சஞ்சிகையென்றால் ஞாபகம். நிர்மாணாம் தான் அதன் பெயர்."

இன்னும் சிறிது நேரம் கதைத்துக் கொண்டிருந்த பின்னர் சிரிநாத எழுந்தார். ஐயூப்கானும் எழுந்து சிரிநாதவுடன் கீழிறங்கி வந்தார். இடையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஐயூப்கானுக்கு சல்யூட் அடிப்பதை சிரிநாத அவதானித்தார்.

பத்திரிகை நிறுவன வாகனத்தருகே சிரிநாத வந்தார். ஐயூப்கான் வாகனக் கதவை திறந்து சிரிநாதவுக்கு மிக உயர்ந்த மரியாதை தெரிவித்தார். அருகிலிருந்து பொலிஸ் அதிகாரிகள் இந்த நிகழ்வை வியப்போடு கவனித்தனர். சிரிநாதவின் கண்களில் கண்ணீர் நிரம்பியது. ஆதனைக் கண்ணுற்ற ஐயூப்கானால் அழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

"ஸேர் எங்களோடு அன்பாவிருத்தார். நாங்களும் ஸேருடன் அன்பாக விருந்தோம்."

உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஐயூப்கான் கூறினார்.

# ஆசிரியர் தினத்தில் வந்த மாணவர்கள்.

சிரிநாத முற்றத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தார். விடியும் வேளையில் துயில் எழுவதற்கும் காலை ஆறரைக்கு முன்பு காலைச் சாப்பாடு அருந்துவதற்கும் பழகியிருந்த அவர், ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்பும் அந்தப் பழக்கத்தைக் கைவிடவில்லை. இப்பொழுது அவர் காலை ஆகாரத்தின் பின்பு முற்றத்தையும் வீட்டுத் தோட்டத்தையும் சுத்திகரிப்பதில் ஈடுபடுகிறார்.

முற்றத்தைப் பெருக்கும் போதெல்லாம் அவர் மனதால் தான் வேலைசெய்த பாடசாலைகளுக்குப் போய்விடுவார். பாடசாலை மாணவர்களின் சத்தம் இப்பொழுதும் அவர் காதுகளில் நிறைந்திருந்திருக்கிறது. குனபால சமரஸேகர கவிஞனின் இந்த அடிகள் அன்று போல் இன்றும் அவர் மனதுக்கு விருப்பமானவை.

சின்னஞ் சிறார்களின் சுந்தர உலகாய்
சந்தோஷமுண்டோ வளர்ந்தோடையே?
இன்னுயிர் வாழ்வில் விடைபெறும் வேளை
இதயத்தை கொடுப்போம் சிறார்தம்கையில்
சிறிய பேரன் தமிது முற்றத்திற்கு ஓடிவந்தான்.

“தாத்தாவுக்கு கோல்” அவன் சொன்னான்.

“ஹலோ நான் சிரிநாத” அவர் ரிஸிவரை எடுத்துச் சொன்னார்.

‘தங்களுக்கு துயரமற்ற நோயற்ற சுகவாழ்வு கிடைக்கட்டும். இன்று ஆசிரியர் தினமல்லவா .ஸேர் நான் ஐயூப்கான்”.

“சிறிநாதவின் மனம் மகிழ்ச்சியால் நிரம்பியது. இன்று 2010 ஒக்டோபர் 06 ம் திகதி ஆசிரியர் தினம் அவருக்கு அது இப்போதுதான் ஞாபகம் வந்தது.

“தம்பிக்கு அப்படியே ஆகட்டும். ஆசிரியர் தினம் இன்றைக்கென்பது உங்கள் மூலமாகத்தான் இப்பொழுது அறிந்து கொண்டேன்.”

“ஆசிரியர் தினத்தில் மட்டுமல்ல. ஒவ்வொரு நாளும் எங்களுக்கு உங்களை ஞாபகம் வரும். உங்களைப் போன்ற ஆசிரியர் எங்களுக்கு கிடைக்காதிருந்தால் நாங்கள் இந்த நிலைக்கு வரமுடியாது.”

“மிக்க நல்லது இப்படிக் கதைப்பவர்கள் இப்பொழுது மிகவும் குறைவு. ஏனக்கு சந்தோஷம். தம்பிக்கு இன்னும் முன்னேற வாய்ப்புக் கிடைக்கவேனும்.”

சிறிநாத மீண்டும் முற்றம் கூட்டச் சென்றார்.

மீண்டும் தொலைபேசி ஒலித்தது.

“ஸேருக்கு கடவுள் காப்பு ஆசிரியர் தினத்தில் ஸேரோடு கதைக்கக் கிடைத்தது மகிழ்ச்சி . உங்களது புத்தமொன்றிலிருந்து தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுக் கொண்டேன். உங்களுக்கு நீண்ட ஆயுள் கிடைக்கட்டும்.”

அஹங்கம சாரிபுத்த வித்தியாலய பழைய மாணவர் ஒருவரே இப்படிக் கதைத்தார். அவர் இப்பொழுது ஒரு அதிபர். அம்பானா, இங்கினியாகல, உகன, ஹக்மன, கம்புறுப்பிடிய, மட்டக்குளிய போன்ற இடங்களிலிருந்தும் அவருக்கு வாழ்த்துக்கள் வந்தன.சிறிநாதவுக்கு சில மாணவர்களின் முகம் ஞாபகத்தில் இல்லை. அவரது கண்கள் சிந்திய கண்ணீர் முகமெங்கும் பரவித்தெரிந்தது.

“ஏன் தாத்தா அழுறீங்க. பேரன் கேள்வி எழுப்பினான்.

“தாத்தாவுக்கு தாங்க முடியாத சந்தோஷம் இன்றைக்கு மாணவர்களெல்லாம். கதைக்கிறாங்க. ஆசிரியர் தினமல்லவா? “ சிறிநாதவின் மனைவி சொன்னாள்.

ஓய்வு பெற்ற பின்பு பகல் ஆகாரத்தின் பின்பு பத்து நிமிடமளவு தூங்குவதற்கு சிறிநாத பழகியிருந்தார். இருந்தும் இன்று அவருக்கு தூங்கவேண்டுமென்ற தேவையில்லை. "யாராவது ஒரு மாணவர் கதைத்தால்................." அவர் அப்படி யோசித்தார்.

பிற்பகல் இரண்டு மணியளவில் அவரது வீட்டுத் தோட்டத்திற்குள் முச்சக்கர வண்டியொன்று நுழைந்தது.

சாரனும் சேட்டும் அணிந்த உயர்ந்த பருத்த நடுத்தர வயது ஒருவருடன் ஒரு பெண் பிள்ளை அதிலிருந்து இறங்கினார். அவர்களது கைகளில் பெரிய பைகள் பல இருந்தன. தகப்பனும் மகளுமாக இருக்க வேண்டுமென்று சிறிநாத நினைத்தார்.

"இது சிறிநாத ஸேர் அல்லவா?" – தகப்பன் கேட்டார்.

"ஓம்" சிறிநாத சொன்னார்.

"ஸேருக்கு ஞாபகமில்லயா நான் சிறிபால அபேஸேசரகமை பாடசாலையில் படித்த மாணவன்"

"ஞாபகம் எனக்கு ஞாபகம் நாங்கள் தழுகமையிலும் ஒருமுறை சந்தித்தோம்.

"ஸேர் இது என் மகள். இம்முறை உயர்தரம் எழுதிறா. மகளோடு வந்து ஸேரை காண நினைத்தேன். மகள்தான் ஸேர் எழுதிய புத்தகமொன்றிலிருந்து முகவரியை தேடியெடுத்தர்."

சிறிநாத அவர்களோடு வீட்டினுள்ளே சென்றார்.

"இன்று ஆசிரியர் தினமல்லவா? மகளுக்கு படிப்பித்த ஓர் ஆசிரியரின் வீட்டுக்கு இன்று மகளோடு சென்றேன். அப்போது எனக்கு படிப்பித்த ஸேரை மகளுக்கு காட்ட நினைத்தேன்."

சிறிபால தனது ஆசிரியரின் இயல்புகளைப் பாராட்டிப் பேசினான்.

சிறிநாத அந்நாட்களில் பாவாகபுக்கவெடிய பாடசாலையில் கற்பித்தார். அந்தப் பாடசாலையிலிருந்து ஆறு கிலோமீற்றர் அளவு தூரத்திலிருந்து அபேஸேகரகமை வித்தியாலயத்தில் சாதாரனதர வகுப்பில் கற்பிக்க ஆசிரியர்கள் இருக்கவில்லை.

அதனால் தினசரி மாலையில் அந்தப் பாடசாலைக்குச் சென்று ஐந்து பாடங்கள் சிரிநாத கற்பித்தார். வெடியவிலிருந்து அபேஸேகரகமைக்கு சிரிநாதவை சைக்கிளில் கூட்டிச் சென்றவன்தான் சிரிபால. சிரிபால கண்ணீர் சொரிந்தபடியே கதைத்தான்.

"நானொரு வெதுப்பகக்காரன். இருந்தாலும் சம்பாதிக்கும் பணத்தை வீணாக்குவதில்லை. மகளுக்கு நன்றாகப் படிப்பிக்கிறேன். கவனமாகச் சேமிக்கிறேன். வீடு கட்டினேன். போய் வரும் போதெல்லாம் ஸேர் சொன்ன புத்திமதிகளால் எனக்கிந்த நல்ல குணங்கள் வந்தன. நான் ஸேருக்கு கடனாளி."

சிரிநாதவின் கண்கள் நிரம்பின. சிரிபால விடைபெற்றுச் சென்று சற்று நேரத்தின்பின் நடு வயதுக்குத்தாயொருத்தி தனது மகளோடு சிரிநாதவைப் பார்க்க வந்தார்.

'ஸேருக்கு ஞாபகமா நான் பியுமி உபுலினி ஜயவர்தன?"

'ஏன் ஞாபகமில்லாமல்...? முன்பிருந்த முகஅடையாளம் இப்போதும் நன்றாகவே இருக்கு. மகள் இருங்க." சிரிநாத பெரும் மகிழ்ச்சியோடு கூறினார்."

"ஸேர் இது எனது மகள் . உயர்தரப் பரீட்சை எழுதியிருக்கா." அவள் தனது மகளையும் அறிமுகப்படுத்தினாள்.

பியுமி உபுலினி கொழும்பு விசாகா வித்தியாலய ஆசிரியையாவார்.

"இன்று ஆசிரியர் தினம். எங்களுக்குஸேரைச் சந்திக்க வேண்டிய தேவையேற்பட்டது. ..

"இன்று மாத்திரமல்ல. எமக்கு ஒவ்வொரு நாளும் ஸேர் ஞாபகம் வருகிறது. ஸேர் ஹம்பாந்தோட்தோட்டை சென்மேரிஸ் வித்தியாலயத்தில் கற்பிக்கும் காலத்தில் எங்கள் வகுப்புக்கு வரும் விதமும் கற்பிக்கும் முறையும் எங்களுக்கு ஞாபகம் வருகிறது.

“பிள்ளைகளோடு சிரித்தபடிதான் ஸேர் வகுப்புக்கு வருவார். எல்லாப் பிள்ளைகளோடும் கதைப்பார். குழப்படிகாரருடன்தான் கூடுதலாகக் கதைப்பார். ஸேர் படிப்பிக்கும் விடயங்கள் நன்றாக ஞாபகமிருக்கும். ஆரம்பத்திலேயே பிள்ளைகளின் மனதை வென்றெடுத்ததே அதற்குக் காரணம். ஆந் நாட்களில் ஓர் ஆசிரியர் இருந்தார். அவர் கையில் எப்போதும் பிரம்பும் இருக்கும். அவர் சிரிக்க மாட்டார். பிள்ளைகளுக்கு அடித்துக் கற்பிக்கவேண்டுமென்றே எண்ணினார். பிள்ளைகளை ஒரு நாளும் ஸேர் நோவித்ததில்லை. பிள்ளைகள் ஸேருக்கு அடங்காமெலுமில்லை.....

‘ஸேர் எங்களுக்கு கவிதை எழுதக் கற்றுத் தந்தார். எங்கள் வீட்டில் தயிர் தயாரிப்பார்கள். ஸேர் என்னைப் பற்றி ஒரு கவிதை எழுதினார். தயிர் செய்யும் கறுப்புப் பெண்ணே என்று ஸேரைக் காணும்போதெல்லாம் எங்கள் மனதில் மகிழ்ச்சியேற்படும். அந்த மகிழ்ச்சியால்தான் ஸேர் கற்பிக்கும் விடயங்கள் பிள்ளைகளின் மனதில் மறவாதிருக்கும்.”

பியுமி உபுலின், சிரிந

சிரிநாதவின் கண்கள் கலங்கித் ததும்பின. அவர் அவர் அவனது மகளைப் பற்றிக் கேட்டு விடயத்தை வேறுபக்கம் திருப்ப முனைந்தார

இருந்தும் பியுமி தொடர்ந்து ஆசிரியரைப் பாராட்டினாள். “எங்கள் பிள்ளைகளும் அவர்களது ஆசிரியர்களை மதிக்கவேண்டும். எடுத்துக் காட்டுக்கதைதான் நான் எனது மகளை ஸேரிடம் அழைத்து வந்தேன்.”

அவள் முக்கியதொரு குடையை சிரிநாதவுக்கு அன்பளிப்புச் செய்தார்.

அந்தத் தாயும் சேயும் சிரிநாதவை வணங்கி விடைபெற்றபின் சிரிநாதவுக்கு தனிமை பெரிதாகத் தெரிந்தது.

மாலை இருள் பரவியது. வீடுகளில் விளக்குகள் எரிந்தன. சிரிநாத தனதறைக்குச் சென்று விளக்கேற்றாமல் சாய்கதிரையில் சாய்ந்து கொண்டார்.

கண்களை மூடிக்கொண்ட அவருக்கு நூற்றுக்கணக்காக பிள்ளைகளின் முகங்கள் தெரிய ஆரம்பித்தன.

உலகத்திலிருந்து அன்பையும் ஆதரவையும் கேட்கும் குழந்தைகள் ஐயோ அதில் எத்தனை பேருக்குத்தான் அந்த அன்பும் ஆதரவும் கிடைத்தது? திறமையான ஏழைக் குழந்தைகளுக்கு புலமைப் பரீட்சை எழுத வாய்ப்பளிக்காத குரூரமான அதிபர் - ஆசிரியர்களை நான் சந்தித்தேன். அந்த அதிபர்களின் ஆசிரியர்களின் இதயததிலே கருனையும் காருண்யமும் இறங்கியிருந்தால் அந்தப் பிள்ளைகளும் *பியுமிலா டீ பான்று ஐயூப்கான் போன்று* இந்த சமுதாயத்திற்கு செயற்திறனுள்ளவர்களாக வந்திருப்பார்கள். சிரிபால பேக்கரிக்காரன் இருந்தும் அவன் நல்ல வாழ்வை விளங்கிக் கொண்டவன். அப்படியான பிள்ளைகளோடு நான் வாழ்ந்தேன். தொழில் இல்லாமல் போன வேளையில் வாழ்ந்தேன். தொழில் இல்லாமல் போன வேளையில் நான் வாழ வழிசெய்தவர்கள் அவர்கள்தான்.

நான் இப்பொழுது வயோதிபன் ! எப்பொழுதும் எனக்கிந்தப் பிள்ளைகளோ இருக்கக் கிடைக்குமாவின் ....... இந்த எண்ணம் எப்பொழுதும் எண்மனதில் எழும்.

புல சக்திகள் என்னிடமிருந்து அந்த சந்தர்ப்பத்தைப் பறித்துக்கொண்டன.

சிரிநாத கண்களைத் திறந்தார். அறை இருள்மாகவிருந்தது விளக்கேற்றிய அவருக்கு "தாத்தா" என்றபடி வந்த பேரன் தெரிந்தான். மிகுந்த அன்புடன் முத்தமிட்ட சிரிநாத முழு உலகத்திலுள்ள பேரர்களும் தனதே என்று நினைத்தார்.

"என்னால் முடிந்த வகையில் நான் அவர்களுக்கு சேவை செய்தேன். அவ்வளவுதான்" சிரிநாதவின் வயோதிப முகம்முழுவதும் சாந்தியின் வசீகரத்துடன் மெல்லிய புன்னகையொன்றும் மலர்ந்தது."

 

# எல்லோரும் தலைவர்கள்

தெனகம சிரிவர்தன

தமிழில் - மொஹமட் ராசூக்

சிங்கள மொழியில் எழுதும் புகழ் பெற்ற எழுத்தாளர் தெனகம சிறிவர்தன. நீண்ட காலம் ஆசிரியராகவும் பின்னர் பத்திரிகையாளராகவும் கடமையாற்றியவர். கவிதை, சிறுகதை, நாவல், சரிதை என்று நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியவர். எல்லோரும் தலைவர்கள் இவற்றிலிருந்து வித்தியாசமான அனுபவப் படைப்பாகும்.

தனது படைப்பாற்றலுக்காக தேசிய, சர்வதேச விருதுகள் பல பெற்றவராவார். ஏற்கனவே எம்.எச்.எம்.சம்ஸ், திக்குவல்லை கமால், பரிபூரணன், யோகநாதன் போன்றோர் இவரது ஆக்கங்களைத் தமிழில் தந்துள்ளனர்.

வதிரி சி. ரவீந்திரன்.

350/-

ISBN 978-955-30-3509-7

எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவட் லிமிடட்
675, பீ. டி எஸ். குலரத்ன மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: (011) 2685369, 2686925, 4-614904
godageem@slt.lk www.godage.com

9 789553 035097

அட்டைப் படம் மேமன்கவி